

கல்கி
KALKI 15.11.92
ரூ. 3.00
கண்கள்:
ஃபாஷனும் பாதுகாப்பும்


விலை குறைவாக இருந்தால் மட்டும் போதுமா?
"போதாது. தாயாகவும், டாக்டராகவும் இருப்பதால் என் குழந்தைக்கு எது சரியானது என்பதை நான் நன்றாக அறிவேன். அதனால் தரமான, தூய்மையான பொருட்கள்தான் என் கண்களில் முதலில் படும். ஆனால் அதே உன்னதமான தரமும், தூய்மையும் குறைவான விலைக்குக் கிடைத்தால், எதற்காக நான் அதிக விலை கொடுக்கணும்? கூடவே கூடாது. அதனால்தான் என் குழந்தைக்கு நான் தூய்மையான, மென்மையான, மற்றும் ஸ்டெரிலைஸ் செய்த விப்ரோ பேபி ஸாஃப்ட் பவுடரை வாங்குகிறேன். விசேஷ ப்ளேட்லெட் கிரேடு கொண்ட இந்த பவுடர் இதர பவுடர்களைப் போல் சரும துவாரங்களை அடைக்காது. சருமத்தின் மேற்புறத்தில் மட்டும் பரவுவதால் சருமத்திற்கு எளிதாக சுவாசம் கிடைக்கும். அதாவது குழந்தைக்கு முற்றும் பாதுகாப்பு. இத்தனை சிறப்புகள் இருந்தும் விலையும் மிக குறைவு. இனியும் அதிக விலை கொடுத்து இதர பவுடர்களை வாங்குவீர்களா நீங்கள்?"
BABY SOFT
BABY POWDER
ரூ. 24/-
விப்ரோ
பேபி ஸாஃப்ட்
பவுடர்
குழந்தைக்கு தூய்மையானது. உங்களுக்கு சிக்கனமானது.

# சின்ன தம்பி சிறந்த படமா?



தமிழக அரசு 1990ம் ஆண்டின் சிறந்த திரைப்படமாகப் 'புது வசந்த'த்தைத் தேர்ந்தெடுத்தது குறித்து விமர்சனம் ஏதும் வர வாய்ப்பில்லை. ஆனால் 1991 ஆம் ஆண்டின் சிறந்த படமாக 'சின்ன தம்பி' தேர்ந்தெடுக்கப்பட்டது பலரது புருவங்களை உயர்த்தியிருக்கிறது. சரியான மசாலாப் படத்தைத் தமிழக அரசு தேர்ந்தெடுத்தது கண்டு சினிமா உலகத்தில் பலர் வியக்கிறார்கள்.

''என்ன லார் படம் அது? கலை என்பது மக்களின் எண்ணங்களை மேம்படுத்துவதாக இருக்க வேண்டும்; பண்பாட்டை உயர்த்துவதாக இருக்க வேண்டும். சமூக விழிப்புணர்வை ஊட்டுவதாக இருக்க வேண்டும். அதுபோன்ற படங்களைத் தேர்ந்தெடுத்து அரசு விருது கொடுக்க வேண்டும். அதை விட்டு விட்டு இதுபோன்ற வியாபாரப் படங்களுக்குக் கொடுக்க ஆரம்பித்தால் விருது கொடுப்பதன் நோக்கமே அடிபட்டுப் போய் விடும்'' என்றார் திரை இயக்குனர் ஒருவர்.
''சிறந்த படம் ஒன்றும் அகப்படவில்லையென்றால் எதற்குமே தராமல் இருக்கலாமே?''

சிறந்த பட விருது மட்டுமல்ல; சிறந்த நடிகர் விருது பிரபுவுக்கும், நடிகை விருது குஷ்புவுக்கும், சிறந்த டைரக்டர் என பி. வாசுவுக்கும், பின்னணி பாடகி சொர்ணலதாவுக்கும், டான்ஸ் மாஸ்டர் டி. கே. எஸ். பாபுவுக்கும் இந்தப் படத்தில் அவர்கள் அளித்திருக்கும் ஒத்துழைப்புக்காகவே வழங்கப்பட்டுள்ளது. ஆறு அவார்டுகள் வாங்குவதற்கு அருகதை உள்ள படம்தானா 'சின்ன தம்பி' என்றும் திரை உலகில் பேசிக் கொள்கிறார்கள்.

''1991-ம் ஆண்டு 58 படங்கள் போட்டியில் கலந்து கொண்டன. நல்ல கதையம்சம் உள்ள பல படங்கள் வந்துள்ளன. அதை விட்டு விட்டு அரைத்த மாவையே அரைக்கும் கதையான சின்ன தம்பிக்குக் கொடுத்தது சற்றும் சரியில்லை. ''மை ஃபேர் லேடி'' என்ற உயர்தரமான ஆங்கிலப் படத்தின் உன்னதக் கதையை இதில் 'உல்டா' பண்ணிக் கெடுத்திருக்கிறார்கள்'' என்கிறார் கதாசிரியர் ஒருவர்.

''நமது கலாசாரத்தைப் பலிகொடுத்திருக்கிறார் டைரக்டர் வாசு'' என்கிறார் விமர்சகரும், திரை ரசனை வகுப்புகள் நடத்தியவருமான பேராசிரியர் ராமு. ''சின்ன தம்பி சுமாரான படம்தான். இசைக்காகவும், சொல்லப்பட்ட முறைக்காகவும் 'ஓஹோ'வென்று ஓடியது. விதவையான மனோரமாவை ஒரு காட்சியில் கொடூரமாக அலங்கோலப்படுத்துவது மிகவும் அநாகரிகமான கற்பனை. கலை வியாபாரிகள் வக்ர உணர்வுகளைத் தூண்ட எந்த எல்லைக்கும் போவார்கள் என்பதற்கு அந்தக் காட்சி உதாரணம்'' என்ற ராமு தொடர்ந்து, ''மாநில அரசு வெவ்வேறு அளவுகோல்கள் வைத்துப் படங்களைத் தேர்ந்தெடுக்கிறது. சர்வதேசத் திரைப்பட இலக்கணம் என்று ஒன்று இருக்கிறது. ஆனால்


அதையெல்லாம் இவர்கள் கவனிப்பதில்லை. பெரும்பான்மை மக்கள் ரசித்த படத்தை அரசு தேர்ந்தெடுத்திருப்பதன் மூலம், மக்களின் ரசனையை அரசு அங்கீகரித்திருக்கிறது என்று எடுத்துக் கொள்ளலாம் அவ்வளவுதான்'' என்றார்.

'சின்னத் தம்பி' இசை காரணமாக வர்த்தக ரீதியில் வெற்றி பெற்றும் கூட அந்தப் படத்திற்கு இசையமைத்த இளையராஜாவுக்குப் பரிசு கிடையாது. இதற்கும் ஒரு காரணம் இருக்கிறது'' என்று கிசுகிசுக்கிறார் திரையுலகப் புள்ளி ஒருவர். ''தமிழக அரசு இப்போது மதுவிலக்குப் பிரசாரப் படமாக ''நீங்க நல்லா இருக்கணும்'' என்ற படத்தை எடுத்து வருகிறது. அதற்கு ராஜா முதலில் இசையமைப்பதாக இருந்தது. ஆனால் ஜெ. கலந்து கொண்ட படத் துவக்க விழாவில் ராஜா அவமானப்படுத்தப்பட்டதால் அவர் இசை அமைக்கவில்லை. இதனால் தமிழக அரசுக்கும் அவருக்கும் இடையே ஒரு திரை விழுந்திருக்கிறது. இதன் விளைவுதான் ராஜா ஒதுக்கப்பட்டிருப்பது'' என்றார் அவர்.

'குணா'வில் கமலின் நடிப்புக்காகச் சிறந்த நடிகர் பரிசு அவருக்குக் கிடைத்திருக்க வேண்டும் என்றும் பேச்சு அடிபடுகிறது. ''தேசிய, சர்வதேச விருதுகள் வாங்க இருக்கும் கலைஞனைக் குறுகிய வட்டத்துக்குள் அடைக்க வேண்டாம் என்ற நல்லெண்ணத்தில் கௌரவிக்காமல் விட்டு விட்டார்கள் போலிருக்கிறது!'' என்றார் பேராசிரியர் ராமு.


பத்து உறுப்பினர் கொண்ட தேர்வுக் குழு 86 படங்களைப் பார்த்து இரண்டாண்டுக்கான சிறந்த இரு படங்கள் மற்றும் கலைஞர்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறது. ஒரு உறுப்பினருக்கு ஒரு படம் பார்க்க sitting charge, நூற்று ஐம்பது ரூபாய். 'எங்களுக்கே ஒரு படத்துக்கு sitting charge நூறு ரூபாய்தான்' என்றார் தணிக்கைக் குழு உறுப்பினர் ஒருவர்!

– ப்ரியன்





ஏட்ரியன் கேபர்



பீட்டர் கிர்ஸ்டன்



கெப்ளர் வெசல்ஸ்



ரோட்ஸ்

# அறிமுகம்: தென் ஆப்பிரிக்கக் கிரிக்கெட் வீரர்கள்

## 'டாப்'பான தலைவர்

அணித் தலைவர் கெப்ளர் வெசல்ஸ் ஆஸ்த்திரேலியாவுக்காக 24 டெஸ்டுகள் ஆடியவர். மொத்தம் 25 டெஸ்ட்களில் 1900 ரன்கள் குவித்தவர். முதல் தரப் பந்தயங்களில் இதுவரை இவர் எடுத்துள்ள ரன்கள் சுமார் 20,000! அணியின் ஆணிவேராக நின்று நிலைத்து ஆடி, சிறுகச் சிறுக ரன்களைக் குவிப்பதில் வல்லவர். வயது : 35 இடது கை ஆட்டக்காரர்.

## கண்ணுக்கு விருந்தளிக்கும் கிர்ஸ்டன்

கடந்த உலகக் கோப்பைப் பந்தயத்தின் போது தெ. ஆப்பிரிக்க அணி அரை இறுதியை எட்டக் காரணமாக இருந்தவர்களுள் ஒருவர் பீட்டர் கிர்ஸ்டன். இந்த 37 வயது ஆட்டக்காரர் இங்கிலாந்து சஸ்ஸெக்ஸ் மற்றும் டார்பிஷையருக்காக விளையாடினார். இவரும் முதல் தரப் பந்தயங்களில் கிட்டத்தட்ட 20,000 ரன்கள் எடுத்துள்ளார். கண்ணுக்கு விருந்தான stroke களை ஆடக் கூடியவர்.

## ஆரம்ப வீரர்கள்

ஜிம்மி குக் சிறந்த ஓபனிங் பாட்ஸ்மேன். கடந்த மூன்று ஆண்டுகளாக சாமர்செட்டுக்காக விளையாடினார். தென் ஆப்பிரிக்காவில் டிரான்ஸ்வால் மாநிலத்துக்காக ஆடுகிறார்.

வெஸ்ட் இண்டீஸுக்கு எதிராக ஆடிய முதல் டெஸ்டிலேயே சதம் அடித்து (163 ரன்கள்) சாதனை புரிந்த ஆண்ட்ரு ஹட்ஸன், அணியின் மற்றொரு ஓபனிங் பாட்ஸ்மன். முதல் டெஸ்ட் பந்தயத்திலேயே சதம் அடித்த முதல் தென்னாப்பிரிக்க வீரர் இந்த 26 வயது இளைஞர்.


## ஏட்ரியன் கேபர்

33 வயது நிரம்பிய இவர் ஆப்பிள் விவசாயி என்பதுடன் சிறந்த ஆல் ரவுண்டரும் கூட! தென் ஆப்பிரிக்காவின் வெஸ்டர்ன் ப்ராவின்ஸ் ஆட்டக்காரர்.

## உலகின் தலை சிறந்த ஃபீல்டர்

அணியின் பேபியானாலும் (22 வயது) ஃபீல்டிங்கில் ரொம்பப் பெரியவர் ஜோன்டி ரோட்ஸ். உலகின் தலை சிறந்த ஃபீல்டர் எனப் பெயர் பெற்ற இவர், சிறந்த middle-order batsman ஆகவும் திகழ்கிறார். நேடால்

ஜிம்மி குக்



ஆலன் டோனல்ட்



ஆண்ட்ரு ஹட்ஸன்



ரிச்சர்ட் ஸ்நெல்



பகுதி ஆட்டக்காரர்.

## புயல் வேகப் பந்து வீச்சு

ஆலன் டோனால்ட் உலகின் அதி வேகப் பந்து வீச்சாளர்களுள் ஒருவர். முதல் தரப் பந்தயங்களில் 500 விக்கெட்டுகள் எடுத்துள்ளார். இங்கிலாந்துக்காகவும் ஆடுகிறார். கல்கத்தாவில் ஆடிய முதல் ஒரு நாள் பந்தயத்திலேயே இவர் ஐந்து விக்கெட்டுகள் வீழ்த்திச் சாதனை புரிந்தார்.

## ஒரு டெஸ்டில் எட்டு விக்கெட்கள்!

ஒரு டெஸ்டில் எட்டு விக்கெட்டுகள் எடுத்த பெருமை ரிச்சர்ட் ஸ்னெல்லுக்கு உண்டு. (வெஸ்ட் இண்டீஸுக்கு எதிராக) ஸ்விங் போலர். வயது 24.

## விக்கட் கீப்பர் ரிச்சர்ட்ஸன்

இவர் ஒரு சிறந்த பாட்ஸ்மனும் கூட. தென் ஆப்பிரிக்காவின் கிழக்கு பிராவின் ஸுக்காக ஆடுபவர்.

அணியில் கட்டாயம் இடம்பெறக் கூடிய இந்த ஒன்பது பேர் தவிர, மார்க் ரஷ்மியர்; ஆல் ரவுண்டர்கள் வெசல்ஸ் கிரான்யே, ப்ரயன் மக்மில்லன், வேகப் பந்து வீச்சாளர்கள் டெர்ஷியல் போஸ்ச், மெர்ரிக் ப்ரிங்கில், கிரெய்க் மாத்யூஸ்; ஒரே ஸ்பின் போலரான ஓமார் ஹென்றி (அணியில் இடம்பெறும் ஒரே கறுப்பு வீரர் இவரே) ஆகிய எழுவரும் உள்ளனர். டேவிட் குல்லினன், கோரி வான் ஜெல் ஆகிய இருவர் புத்தம் புதியவர்கள். இவர்கள் இனிமேல்தான் உலக கிரிக்கெட்டில் தடம் பதிக்க வேண்டும்.

– ராகவ்

## வாசகர் விமர்சனம்




# கல்கி தீபாவளி மலர்-'92

◆ தீபாவளி மலர் தெய்வீக மணம் வீசிப் பரிமளிக்கிறது. எங்களூர் கோயில் பற்றி நீண்ட நாட்களாகத் தெரியாதிருந்த வரலாற்று உண்மைகளைத் தெரிந்து கொண்டோம். திருவான்மியூர் கோவிலில் எழுந்தருளியிருக்கும் திரிபுர சுந்தரி அம்மையின் படமும், ''ஆனந்தி''யின் ''மருந்தளிக்கும் மருந்ீசர்'' கட்டுரையும் அற்புதம்.

சென்னை - 41, டி.என். சுப்ரமண்யம்.

◆ தபாலில் வந்த கல்கி தீபாவளி மலரைப் பிரித்ததும் அட்டைப்படம் அட்டகாசமாக மனத்தைக் கவர்ந்தது. பக்கங்களைப் புரட்ட புரட்ட அடுத்து என்ன? அடுத்து என்ன? என்று ஆவல் தூண்டுவதாக மிகவும் நன்றாக அமைந்திருந்தது. இவ்வளவு சிறந்த மலரைத் தமிழுக்கு அளித்ததற்கு வாழ்த்துக்கள்.

கோவை, சேஷகிரி.

◆ 'கல்கி' தீபாவளி மலர் வழக்கம் போல் மிகப் பிரமாதமாக வந்திருக்கிறது. எல்லாவற்றிற்கும் சிகரம் போல் ரா. கணபதி எழுதிய ''காஞ்சி சந்திரசேகரரும், சிருங்கேரி சந்திரசேகரரும்'' என்கிற கட்டுரை! அதை என்ன சொல்லுவது. இப்பேற்பட்ட மகான்கள் இருக்கிற நாட்டில் நாமும் பிறந்திருப்பது என்ன பாக்கியம்!

பம்பாய் - 71, லக்ஷ்மி கண்ணன்.

◆ 'கவிஞர்கள் பார்வையில் கண்ணன்' கட்டுரையில் கருத்துக்களும், அதைத் தொடர்ந்து ராமு, லதா, மாருதி போன்ற வல்லுனர்களின் ஓவியங்களும் வெகு ஜோராக அமைந்திருந்தன. இருப்பினும் மாருதியின் ஓவியத்தில், ஆண்டாளின் கொண்டை வலப்பக்கத்தில் அமைந்துள்ளது. ஆண்டாளுக்குக் கொண்டையும், கிளியும் வழக்கமாக இடது பக்கத்திலும், மதுரை மீனாட்சிக்குக் கொண்டையும், கிளியும் வலது பக்கத்திலும் எப்பொழுதும் அமைந் திருக்கும். இதைக் கொண்டே கோதைப் பிராட்டியாரையும், பார்வதியையும் தெரியப்படுத்த முடியும்.

பம்பாய் - 80, பி. ஸ்ரீநிவாஸன்.

◆ கல்கி தீபாவளி மலர் 1992 - ல் ''வாங்க வால்பாறை போகலாம்!'' என்ற பயணக் கட்டுரை படித்தேன்! அதில் அட்டகட்டியில் சிறிய மின் உற்பத்தி நிலையம் உள்ளது என்று கட்டுரையாளர் எழுதியிருந்தார். அது தவறு. அட்டகட்டியில் மேற் பார்வை பொறியாளர் அலுவலகம் தான் உள்ளது. மின் உற்பத்தி நிலையம் 15 கி.மீ. தொலைவில் காடம்பாறையில் இருக்கிறது.

கோவை, பி. ஜெயப்பிரகாஷ்.

# T. S. S. NIDHI LTD

ESTD 1973

THIRUMYLAI SASWATHA SAHAYA NIDHI LIMITED

Regd. Office: 230, R. K. Mutt Road, Mylapore, Madras 600 004. Phone: 77503.

THIRUVANMIYUR BRANCH : 112, Thiruvalluvar Salai, Kamraj Nagar, Madras 600 041.

## DEPOSIT SCHEMES

### FIXED DEPOSIT SCHEME

(Minimum of Rs. 1000/- and in Multiples of Rs. 500/-)

| Period (months) | Rate of interest P.A. | CASH INCENTIVE |
|---|---|---|
| 6 | 15 % | not applicable |
| 12 | 17 % | 1/2 % |
| 24 | 18 % | 1 % |
| 36 | 19 % | 1 1/2 % |
| 60 | 20 % | 2 % |

### KARPAGA VIRUTCHAM DEPOSIT SCHEME
(Re-investment Plan)

(Minimum of Rs. 1000/- and in Multiples of Rs. 500/-)

| DEPOSIT AMOUNT RS. | PERIOD (Months) | MATURITY VALUE RS. | CASH INCENTIVE |
|---|---|---|---|
| 1000 | 12 | 1180 | 1/2 % |
| 1000 | 24 | 1425 | 1 % |
| 1000 | 36 | 1760 | 1 % |
| 1000 | 45 | 2025 | 1 1/2 % |
| 1000 | 67 | 3025 | 2 % |

### HIGHLIGHTS:

* Recognised as a **NIDHI COMPANY** by Central Government of India.
* Company is in 20th year of Service.
* Monthly interest warrants for the financial year would be despatched in advance at the beginning of the year for fixed deposits.
* No tax deduction at source if the fixed deposit holders submits 15 H in case. For any financial year interest exceeds Rs. 2500/-.
* Loan facility upto 75 % on Fixed Deposit and 85 % on Recurring Deposit paid-up amount.
* Pre-mature repayment facility as per terms and conditions
* Your Deposit amount is advanced against Gold Jewels and immovable properties of Madras city limits.
* Transaction with members only.
(Rupees Two only for Membership.)

### JEWEL LOAN

Jewel loans granted on Gold ornaments at Rs. 255/- per gram i.e. Rs. 2040/- per sovereign (8 gm).

Recurring Deposit not required.

## SENIOR CITIZEN DEPOSIT SCHEME 19 % p.a.

(APPLICABLE FOR AGED PERSONS ABOVE 55 YEARS, PENSIONERS, HANDICAPPED, WIDOWS, EDUCATIONAL AND CHARITABLE ORGANISATIONS.)

**Minimum Deposit Rs. 10000/-** **Period - 12 months.**

### RECURRING DEPOSIT SCHEME

(Minimum of Rs. 10/- and in Multiples of Rs. 10/-)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| MONTHLY DEPOSIT | 100 | 100 | 100 | 100 | 100 | 100 |
| PERIOD (Months) | 12 | 24 | 36 | 48 | 60 | 72 |
| MATURITY VALUE | 1310 | 2850 | 4650 | 6710 | 9050 | 11,580 |

### SAVINGS DEPOSIT SCHEME 9%

| | BUSINESS HOURS | | WEEKLY HOLIDAY |
|---|---|---|---|
| | WEEK DAYS | SUNDAYS | |
| HEAD OFFICE Mylapore | 9 am - 12.30pm<br>2.30 pm - 5 pm | 9 am to 12.30pm<br>- | FRIDAY |
| BRANCH OFFICE Thiruvanmiyur | 9 am - 12.30pm<br>2.30 pm - 5 pm | 9 am to 12.30pm<br>- | TUESDAY |

**M. B. PANDURANGAM**
President

**P. S. SAMBASIVAM**
Secretary

# ராமர் பிறந்த சீதையின்




**நா**ட்டையே கலக்கிக் கொண்டிருக்கும் அயோத்தி ஒரு சிறு நகர். 40000த்துக்கும் குறைவான மக்கள் தொகையைக் கொண்ட இந்த ''முன்னேறிய'' கிராமத்தை அடைய, சரியான போக்குவரத்து வசதி இல்லை. லக்னோவிலிருந்து கோரக்பூர் வழியாக டில்லி செல்லும் சாலையில் உள்ள ஃபைஸாபாத்துக்கு பஸ்ஸிலோ ரயிலிலோ போக வேண்டும். இங்கிருந்து மூன்று கிலோ மீட்டர் தொலைவில் இருக்கும் அயோத்தியாவை அடைய பஸ் எதுவும் கிடையாது. 20 - 30 பேர்களைத் திணித்துக் கொண்டு ஓடும் மூன்று சக்கர டெம்போ தான்!



● 'ராம ஜன்ம பூமி' அருகே விச்வ ஹிந்து பரிஷத் அலுவலக நுழைவாயில்.

இந்தப் பாதையில் நுழைந்த உடனேயே நம்மை வரவேற்பது 'ராமஜன்ம பூமி போலீஸ் ஸ்டேஷன்!' என்ற போர்டு!. பிரச்னை தீராத போதே எப்படி இந்தப் பெயரில் போலீஸ் ஸ்டேஷன் அமைத்தார்கள் என்று எண்ணிக் கொண்டே நகரை நோக்கிப் போகும் போது சாலையின் இரு பக்கங்களிலும் வரிசையாக நிறுவப்பட்ட டெண்டுகள், Wireless கம்பங்கள், ராணுவ லாரிகள் ஒரு யுத்த களத்தை நினைவு படுத்துகின்றன.

நகரின் எல்லையிலுள்ள சின்னஞ்சிறிய தெருக்களில் முஸ்லீம், இந்துக் குடும்பங்கள் ஒன்றாக வசிக்கின்றன. துணியில் பூ வேலை செய்யும் முஸ்லீம் பெண்கள் வீடுகளின் வெளியே தங்கள் பணிகளில் ஈடுபட்டிருக்கின்றனர்.




கீழே கோவில், மாடியில் வீடு!

ராமஜன்மபூமி பிரச்னை பற்றி எல்லோருக்கும் தெரியும். ஆனால், அந்த இடம் தனி மனித வின் பார்வையில் எப்படி இருக்கிறது? அந்த வகையில் ஒரு நேரடி ரிப்போர்ட்...

# இடமும் சமையலறையும்!

ராமஜன்ம பூமி என்று அழைக்கப்படும் குறுகிய தெருக்களைக் கொண்ட ஒரு சின்னப் பகுதியில் நுழைகிறோம். நுழையும் இடத்திலேயே விச்வஹிந்து பரிஷத் ஒரு தகவல் நிலையத்தை நிறுவியிருக்கிறது. இருபுறமும் வாசலும் நடுவில் ஒரு திறந்த மைதானமும் கொண்டது இந்தக் கட்டடம். நாடெங்கிலுமிருந்து கொண்டு வரப்பட்ட - பல இந்திய மொழிகளில் ''ராம்'' என்று பொறிக்கப்பட்ட செங்கற்களினால் ஒரு தாற்காலிகக் காம்பவுண்டு சுவர் எழுப்பப் பட்டுள்ளது. உள்ளே வரைந்த படங்கள், போட்டோக்கள், போஸ்டர்கள் ஆகியவற்றால் ஆன ஒரு கண்காட்சி. முதன் முதலில் ராமர் படத்தை மசூதிக்குள் எடுத்துச் சென்று வைத்தவரின் படத்தில் துவங்கி, இரண்டு ஆண்டுகளுக்கு முன் நடந்த ரத்தக் களரி வரை விதம் விதமான புகைப் படங்கள். இறந்தவர்கள் தியாகிகளாக வருணிக்கப்பட்டுள்ளார்கள். கட்டப்பட இருக்கும் கோபுரத்தின் மாதிரி கண்ணாடிப் பேழையில் வைக்கப்பட்டுள்ளது. இதுவே உண்டியலாகவும் இருப்பதால் உள்ளே கரன்சி நோட்டுகளும் காசுகளும் (ஒரு ரூ 500/- நோட்டு கூட தெரிந்தது!) விழுந்திருக்கின்றன.

இந்தக் கண்காட்சியைத் தாண்டி ஒரு சிறிய மண்டபம். வி.எச்.பி. யின் அலுவலகமான இதில் டெலிபோன், டீ.வி. போன்றவை... 'ஏன் இந்தப் போராட்டம்' என்பது பற்றிப் பிரசுரங்கள் விநியோகிக்கிறார்கள். மற்றொரு வாயில் வழியாக வெளியேறி, சின்னஞ்சிறிய தெருவுக்கு வருகிறோம். இந்த இடத்திலிருந்து நூறு அடி தொலைவில் மசூதிக்குள் இருக்கும் ஜன்மபூமியைக் காணக் காத்திருக்கும் மக்களின் கியூ துவங்குகிறது. சவுக்குக் கட்டைகளால் தடுக்கப்பட்டுத் தாற்காலிகமாக நிறுவப்பட்டிருக்கும் பாதைகளில் ஆண்களும், பெண்களும் தனித்தனியே...

சீதையின் சமையலறை...



வெள்ளையடிக்க மூற்பட்ட கூட்டம்.



மெடல் டிடக்டரில் சோதனை; தொடர்ந்து உடல் முழுவதும் தொட்டுச் சோதனை. எதையும் எடுத்துப் போக அனுமதி இல்லை. காமெரா மட்டுமல்ல. பர்ஸ், பால் பாயிண்ட், சாவி கூட அனுமதிப்பதில்லை. தோலினால் ஆன பெல்ட் அணிய அனுமதி இல்லை. இவற்றைப் பாதுகாத்துத் திருப்பிக் கொடுக்க எந்த வசதியும் இல்லை. தனியாகப் போனால் திண்டாட்டம்தான்!

கியூவில் இருப்பவர்கள் இரண்டு மணி நேரத்துக்கு ஒருமுறை உள்ளே அனுமதிக்கப்படுகிறார்கள். உள்ளே 20 அடி உயரத்தில் ஒரு மேடு. அதன் வழியே சென்று ஒரு பழைய காம்பவுண்டில் அமைக்கப்பட்டிருக்கும் சின்ன நுழைவாயிலை அடைகிறோம். உள்ளே போலீஸ் - போலீஸ் -போலீஸ் - பத்து அடிக்கு மூன்று பேர் வீதம் எல்லா இடத்திலும் போலீஸ்!

கண்ணெதிரே தெரியும் மசூதியின் மையப் பகுதிக்கு முன்னே இரு மேடைகள். ஒன்றில் அனுமாரின் சிலை.அதன் முன் அகண்டகீர்தன் (தொடர் பஜனை) இசைக்கும் குழுவினர் உச்சஸ்தாயியில் ''ரகுபதி ராகவ''பாடுகிறார்கள். 1949 டிசம்பர் 27ல் துவங்கிய இந்த பஜனை இடைவிடாமல் தொடர்ந்து கொண்டிருப்பதாகவும் 30 பேர் கொண்ட குழு மாறி மாறிப் பாடுவதாகவும் தெரிவிக்கிறார்கள். மற்றொரு மேடையில் வடக்கத்திய கோவிலுக்குரிய பாணியில் ராமர்,சீதை பளிங்குச் சிலைகள், அதைக் கடந்து மசூதியின் முகப்பை நோக்கும் போது பொறிக்கப்பட்டிருக்கும் குரான் வாசகங்கள் தெரிகின்றன.

மசூதியின் நடு டோமுக்கு (மேல் கூரை) மிகச் சரியாகக் கீழே சன்னமைக்காலில் செய்த பூஜை மண்டபம். அதன் நடுவே பளபளக்கும் மஞ்சள் பட்டுத் துணியில் மூடப்பட்ட ஒரு சிறிய மேடான பகுதி. இதுதான் ராமர் ஜனித்த இடம் என்று அங்கு நின்று கொண்டிருக்கும் ஊழியர் ஹிந்தி, ஆங்கிலம் இவற்றில் மாறி மாறிச் சொல்கிறார். அதன் வெகு அருகில் சின்ன விக்ரகங்கள். அதன் மேலே சுவரில் மாட்டப்பட்ட தவழும் கிருஷ்ணனின் படம். பக்தியுடன் மக்கள் கொண்டு வரும் மாலை, மலர் எல்லாம் இந்த விக்ரகங்களுக்கு முன்னே. பூஜை, ஆரத்தி, அர்ச்சனை, பிரசாதம் எதுவும் கிடையாது. இங்கும் போலீஸ் - நிறையப் பெண் போலீஸும் கூட. மாநில போலீஸ் மட்டுமின்றி, மத்திய ரிசர்வ் போலீஸ், ராணுவ போலீஸ் எல்லோரும். ஆறு மணி நேரத்துக்கு ஒருமுறை இவர்களுக்கு டியூட்டி மாறுவதால் டியூட்டி முடிந்தவர்களும் டியூட்டிக்கு வருபவர்களும் உட்கார ஒரு கயிற்றுக் கட்டில், பெஞ்சுகள். பத்திரிகை, பேப்பர் படிக்கும் போலீஸ்காரர்களுக்கு இடையே சமஸ்கிருதத்தில் விஷ்ணு ஸஹஸ்ரநாமம் படித்துக் கொண்டிருக்கும் பெண் போலீஸ் ஐ.பி.எஸ். அதிகாரி! (விசாரித்த போது மன்னிக்கவும் - விசிட்டர்களுடன் பேச எங்களுக்கு அனுமதியில்லை என்று பதில்.)

காலில் ஷூ அணியாத, கரங்களில் AK 47 உள்பட பலவிதமான ஆயுதங்களுடன் இருக்கும் போலீஸ் கும்பலுக்கு இடையே செக்யூரிட்டியைக் கடந்து வந்திருக்கும் நமக்கு ஒரு புனிதமான தலம் இது என்ற உணர்வு ஏற்படுவதில்லை. வெளியேறுவதற்கு வேறு வழி - அங்கும் ஒருமுறை சோதனை செய்கிறார்கள். (எதற்காக என்று தான் புரியவில்லை).

பிரச்னைக்குரிய வளாகத்தையொட்டி வெளியே, முதலமைச்சர் கல்யாண்சிங் ஆதரவில் விஸ்தரிக்கப்பட்டுள்ள பகுதி. சுத்தமாக்கப்பட்டு கான்க்ரீட் இடப்பட்டு, சீராக இருக்கிறது. அரைகுறையாக எழுந்திருக்கும் ஒரு கான்க்ரீட் தூணில் நீட்டிக் கொண்டிருக்கும் இரும்புக் கம்பியில் விச்வ ஹிந்து பரிஷத்தின் கொடி. 'இந்த நிலத்தில் கோவிலின் முன் மண்டபமும், கோவிலின் பிற பகுதிகளும் தொடர்ந்து கட்டப்படும் என்கிறார்கள். இப்போது மசூதி இருக்கும் இடம் வரை கோவில் கட்டப்படும். அங்குதான் சந்நிதி உருவாகும் என்று வரைபடம் தெரிவிக்கிறது!

அயோத்தியின் குறுகிய தெருக்கள் முழுவதும் கடைகள் - ராமர் படம், டாலர், காஸெட், ஸ்டிக்கர், பிரசாதம் (!) விற்கும் கடைகளில் நல்ல பிசினஸ். இவர்களில் சிலர் முஸ்லீம்கள் என்று அறியும் போது ஆச்சர்யமாக இருக்கிறது.

கடைகளைத் தாண்டி அருகிலுள்ள ஒரு பெரிய பழைய கட்டடத்துக்குச் செல்கிறோம். இந்தக் கட்டடத்தின் உள்ளே சீதை

கர்நாடகாவில் ராஜினாமா செய்த மந்திரிகள் மிகவும் சந்தோஷ மூடில்தான் இருக்கின்றனர். ஒரு மந்திரியை நிருபர்கள் சூழ்ந்து கொண்ட போது அவர், "இப்போதைய நிலைமை பற்றித்தானே தெரியணும்? ஒரு நிமிஷம்..." என்றவர் தம்முடைய பேரக் குழந்தையை அருகில் அழைத்தார். "இன்றைய பாப்புலர் ரைம் ஒன்று சொல்லு" - என்றார்.

யின் சந்நிதி இருக்கிறது. சீதை இங்கு சமைத்து ராமருக்கு உணவு படைத்ததாகவும் அந்த சமையலறையிலேயே அன்னபூரணியைப் பூஜித்து வழிபட்டதாகவும் சொல்லுகிறார்கள். சந்நிதிக்கு முன்னால் இரண்டு ஒற்றை அடுப்புகளும் ஒரு சப்பாத்திக் கல்லும் குழவியும் உள்ளன. மக்கள் பெருமளவில் இங்கு வந்து பூஜை செய்து பிரசாதம் பெறுகின்றனர். வெளியே வரும் நம் கண்ணில் படுவது ''ராமஜன்ம ஸ்தான்'' என்று எழுதப்பட்டிருக்கும் ஒரு சிறு கல்வெட்டு!

பக்கத்தில் இருக்கும் மசூதிதான் ராமர் பிறந்த இடம்; இந்த மண்டபத்தின் வழியாக அங்கு செல்ல ஒரு வாசல் இருந்திருக்க வேண்டும். எனவேதான் ராம் ஜன்ம ஸ்தான் என வழிகாட்ட கல் பதித்திருக்கிறார்கள் என்றெல்லாம் விளக்கம் சொல்லுகிறார்கள்.

''இதுதான் உண்மையிலேயே ராம ஜன்மபூமி; மற்றது வெறும் பிரச்னை'' என்கிறார் அங்கு வந்திருக்கும் ஒரு டூரிஸ்ட்!

**நா**ன்கு சக்கர தள்ளு வண்டி ஒன்றில் உட்கார்ந்த நிலையில் ஒரு சாமியார். வண்டியை ஒருவர் தள்ளிக் கொண்டு வருகிறார். இந்த சாமியார் அங்கங்கே நிறுத்தச் சொல்லி வணங்குவோர்க்குப் பிரசாதம் தருகிறார். ஊருக்கு வெளியே பத்து கி.மீ. தொலைவில் இருக்கும் ஓர் ஆசிரமத்திலிருந்து தினசரி இந்த இடத்துக்கு வந்து போகும் இந்த சாமியாரின் வயது 140 என்றும் சாமியார் பேசுவதில்லை; உணவும் அருந்துவதில்லை என்றும் சொல்கிறார்கள். பாதுகாப்புக் கருதி இவருடனும் ஒரு போலீஸ்!

**வெ**ள்ளைப் புடைவை, ஆரஞ்ச் நிற ஸ்கார்ப் அணிந்திருக்கும் ஒரு பெண்மணி ஆவேசமாகக் கோஷமிட்டு ஒரு சின்ன ஊர்வலத்தை நடத்திக் கொண்டு வருகிறார். உடன் வருபவர்கள் கையில் சுண்ணாம்பு நிறைந்த கலயங்களும் பிரஷ்களும். கொடி, கோஷங்கள், கலயங்கள் இவற்றுடன் பிரச்னைக்குரிய பகுதியின் உள்ளே போக முயற்சி செய்கிறார்கள். செக்யூரிட்டி தடுத்து நிறுத்த, wireless ல் செய்தி பறக்க, பெரிய போலீஸ் அதிகாரிகளின் கார்கள், ஜீப்கள் வருகின்றன. போலீஸ் அதிகாரி அந்தப் பெண்மணியிடம் பேசுகிறார். செக்யூரிட்டி விதிமுறைகளுக்கு உட்பட்டு உள்ளே போய் வாருங்கள் என்று சொல்கிறார். மறுத்த தலைவியையும் தொண்டர்களையும் போலீஸ் கைது செய்கிறது. அவர் திருமதி மீரா குமாரி என்றும், அவர் அகில பாரத ஹிந்து மஸ்தூர் சபாவின் செயலர் என்றும், அவரும் அவர் குழுவினரும் ராமஜன்ம பூமியை வெள்ளை அடித்துச் சுத்தம் செய்யப் போவதாக அறிவித்தவர்கள் என்றும் தெரிந்து கொள்கிறோம்.

''தினசரி இது மாதிரி ஏதாவது பிரச்னை இல்லாவிட்டால் எதிர்பாராமல் வி.ஐ.பி.க்களின் வருகை. ஏதாவது ஒரு வகையில் டென்ஷன்தான்'' என்று சொல்கிறார் - ஆர். எம். ஸ்ரீவத்ஸவா. இவர் இம் மாவட்டத் தலைமை போலீஸ் அதிகாரி.

**அ**யோத்தியாவில் பல புதிய கோவில்கள் உருவாகிக் கொண்டு இருக்கின்றன. சீதை, லக்ஷ்மணன், லக்ஷ்மணனின் மனைவி, வால்மீகி, வசிஷ்டர் என்று அங்கங்கே கோவில்கள். பெரும் செலவில் விரிவாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. வீடுகளும் கோவில்கள் ஆக்கப்படுகின்றன.

மாடியில் குடியிருக்கும் வீடு. அந்த கட்டடத்தின் மேல் பகுதி ஜானகி மாதாவின் கோவிலாக்கப்பட்டிருக்கிறது.

வேறொரு இடத்தில், முற்றத்தில் மாடு, வாசல் ரூமில் டீ.வி. தூளியில் குழந்தை. இவற்றைத் தாண்டியுள்ள ஓர் அறை சீதை விளையாடிய இடம் என்கிறார்கள். சீதை வழிபட்டதாகச் சொல்லப்படும் சிவ லிங்கம் - தோழிகளுடன் விளையாடியதாகச் சொல்லப்படும் இடம் - எனப் புதுப் புது புண்ணிய இடங்கள் முளைக்கின்றன...

நகரின் நடுவே ஒரு பிரம்மாண்டமான ஆஞ்சநேயர் கோவில். பார்த்தவற்றில் இது ஒன்றுதான் கோவிலுக்குரிய லட்சணங்களுடன் இருந்தது.

நகரில் வாழும் மக்களை அயோத்தி பிரச்னை நேரடியாகப் பாதித்ததாகத் தெரியவில்லை. இந்த நகரிலிருந்து ஒருத்தர் கூட கமிட்டிகளில் இடம்பெறவில்லை. ''பிரச்னை எங்களுக்கு அப்பாற்பட்டது என்று இதிலிருந்தே புரியவில்லையா?'' என்று கேட்கிறார் உள்ளூர் பள்ளி ஆசிரியர் ஒருவர்.

''பிரச்னையினால் கூட்டம், கூட்டத்தினால் வியாபாரம், பணப் புழக்கம். நல்லது தானே!'' என்கிறார் சிறு வியாபாரி ஹிமாம்.


கட்டுரை, படங்கள் : ரமணன்

குழந்தை மழலை மொழியில் சொன்னான் :

''ஏ ப்ளஸ் பி ப்ளஸ்
பங்காரப்பா ஹேரப்லஸ்!''

- அமுதவன்





# மழைக்கால விசாரணை!

“மழை தொடங்கி விட்டது!'' என்றாள் மனைவி, ஜன்னல் வழியே பார்த்து விட்டு.

''இந்த வருஷமாவது ஒரு குடை வாங்கி விட வேணும்!'' என்றேன் படு உறுதியுடன்.

''எதற்கு வாங்கணும்? எதற்கு வாங்கணும் என்கிறேன்!'' என்றபடியே, ஏதோ காற்றிலிருந்து வரவழைப்பது போல், ஒரு குடையைத் திடீரென்று விரித்துப் பிடித்தாள். ''நேற்று அடை மழை பிடித்துக் கொண்டதல்லவா? அப்போது பக்கத்து வீட்டுக்காரர்களிடமிருந்து வாங்கினேன்!''

''அதைக் காலையிலே திருப்பிக் கொடுப்பதற்கென்ன? அவர்களுக்குத் தேவையாய் இருக்குமென்று தெரியாதா உனக்கு?''

''அப்படி உடனே திருப்பிக் கேட்க அவர்கள் ஒன்றும் முட்டாள்கள் அல்ல. நம்மிடம் குடை எதுவும் இல்லை என்று அவர்களுக்குத் தெரியும்!'' என்றாள் அருமை மனைவி, துளியும் புன்னகை செய்யாமல்.

எனக்கு மகா கோபம். 'தெய்வப் பிறவி'யில் பத்மினி எஸ். எஸ். ஆரை ஒரு சீனில் குடையால் அடி அடியென்று அடித்து வெளுப்பாரே, அது மாதிரி செய்ய (மனசுக்குள்) ஆசை. முடியுமா அதெல்லாம்? அதுவும் தவிர, அது சினிமா. அதற்காக, பத்மினிக்குச் சிறந்த நடிப்புக்கான அவார்டு எல்லாம் கொடுத்திருப்பார்கள். இந்தக் காலத்தில் என்றால், பத்மினிக்கு மட்டுமல்ல, எஸ். எஸ். ஆருக்கும் (அடிவாங்கியதற்காக) கொடுத்திருப்பார்கள். குடைக்கும் கூட மூணு நாலு பரிசுகள் கொடுத்திருப்பார்கள் - கைப்பிடிக்கு ஒன்று, கறுப்புத் துணிக்கு ஒன்று, கம்பிகளுக்கு ஒன்று - என்று. ஏதுடா, குடை, தானே நடந்து மேடைக்குப் போய்ப் பரிசு எல்லாம் வாங்கிக் கொள்ளுமா என்றெல்லாம் தமிழ்ப்பட ரசிகர்களும் சரி, பரிசு கொடுக்கும் நீதிபதிகளும் சரி யோசனையே செய்ய மாட்டார்கள்... ஹ்ம்...

''சரி, அது போகட்டும். லேசர் வேலை பண்ணவில்லை என்று போன வாரம் எதிர் வீட்டுக்காரரிடமிருந்து ஸ்டவ் வாங்கி வந்தாயே, வெந்நீர் வைக்க? திருப்பிக் கொடுத்து விட்டாயோ?''

''எதற்குத் திருப்பிக் கொடுக்கணும்? எதற்குத் திருப்பிக் கொடுக்கணும் என்கிறேன்! நாளைக்கே காஸ் தீர்ந்து விடும் போல் இருக்கிறது. அப்புறம் மறுபடி அவர்களிடம்தானே ஸ்டவ்வுக்குப் போய் நிற்கணும்? இப்படியே வாங்கிக் கொண்டு போய், திருப்பிக் கொடுத்து, திருப்பிக் கொடுத்து வாங்கிக் கொண்டு போய்க் கொண்டிருந்தால் ஸ்டவ் அவர்களுடையதா, நம்மோடதா என்று சந்தேகம் வந்து விடும். எதற்கு அநாவசியக் குழப்பம் உண்டாக்கணும்?''

எனக்குக் கோபமான கோபம். ''சீ! அவர்கள் என்ன நினைப்பார்கள்?''

''உளறாதீர்கள்! ராஜி மாமி ரொம்ப நல்லவளாக்கும். எதையும் கொடுத்தால் திருப்பியே கேட்க மாட்டாள்! அதுவும் தவிர, அவர்களுக்கு வேணும் என்றால் திருப்பிக் கேட்க மாட்டார்களா என்ன!''

பார்வையை அவளிடமிருந்து திருப்பியது தவறாகப் போச்சு. கீழ் வீட்டிலிருந்து, வாங்கிய பெரிய தெர்மாஸ் பிளாஸ்க்! போன வாரம் முழுக்க மழைத் தூறலில் நனைந்த பின் ஜலதோஷமும் லேசாக ஜுரமும் வந்த போது, ஹார்லிக்ஸ் போட்டு வைத்து விடலாம் என்று வாங்கிக் கொண்டு வந்தது.

''அதை ஏன் இன்னும் கீழ் வீட்டில் கொடுக்கவில்லை?''

''எதை?''

''அந்த மஞ்சள் பிளாஸ்க்கை?''

''சும்மா கூச்சல் போடாதீர்கள். அதைத் திருப்பிக் கொடுக்க எடுத்துக் கொண்டு போனேன் நேற்று. மாலதி என்ன சொன்னாள் தெரியுமா?''

''என்ன சொன்னாள்?''

''மறுபடி உனக்கு வேண்டி வந்தால் யாரிடம் போய்க் கேட்பாய்? உன்னிடமே இருக்கட்டும் அது. என்கிட்டே வேறு ஒரு பிளாஸ்க் இருக்கிறது என்றாள்.''

இன்னும் வேறு என்னென்ன திருப்பிக் கொடுக்காத அந்நியப் பொருள்கள் இருக்கின்றன என்று சுற்று முற்றும் பார்த்தேன்.

நாலு செல் டார்ச்! போன வாரம் கரண்ட் போன போது மிஸஸ் ஜெயராமிடமிருந்து வாங்கியது!

''இன்னுமா டார்ச்சைத் திருப்பிக் கொடுக்கவில்லை?''

''எதற்குக் கூச்சல், கூப்பாடு எல்லாம் இப்போது? நாம் என்ன திருடிக் கொண்டா வந்து விட்டோம்? கரண்ட் ஒரு நாள் விட்டு ஒருநாள், அதிகாலையிலும் ராத்திரியிலும் போகிறது. ஒவ்வொரு தடவையுமா போய் அவளிடம் வாங்கிக் கொண்டு வர முடியும்?''

இவளை ஒன்றும் செய்ய முடியாது. சண்டை போட்டால், ரசாபாசமாகி விடும்.

இவள் குணத்தைத் திருத்த என்ன செய்யலாம் என்று நண்பனிடம் விசாரித்தேன்.

''ஒன்று செய். உன் மனைவி பக்கத்து வீடு, கீழ் வீடு, எதிர் வீடு, மேல் வீட்டிலிருந்தெல்லாம் கொண்டு வந்திருக்கும் பொருள்களை ஒரு எக்ஸிபிஷன் மாதிரி வை. ஐடியல் ஹோம் எக்ஸிபிஷன் மாதிரி இருக்கும். பலருக்கு உபயோகமாக பல ஐடியாக்கள் தோன்றும்!''

போயும் போயும் அவனைப் போய் யோசனை கேட்டேனே என்று நொந்து கொண்டேன். எக்ஸிபிஷனில் வைப்பதற்கென்றே சுற்று வட்டாரத்தில் எட்டு, பத்து வீடுகளிலிருந்து மேலும் பல பொருட்களை வாங்கி வந்து விடுவாள் என் மனைவி என்பது அவனுக்கு எங்கே தெரியப் போகிறது!

– சித்தார்த்


பொன்மலர்

ஆன்மீக, கலாச்சார
மாத இதழ்

கணையாழி

இலக்கிய மாத இதழ்

பத்திரிகைகளின்
விற்பனை, விநியோகப்
பொறுப்புக்களை கல்கி
நிர்வாகம் ஏற்றுக்
கொண்டுள்ளது.

நவம்பர் மாத
**பொன்மலர், கணையாழி**
இதழ்கள்
இப்போது விற்பனை
யாகின்றன.

இன்றே உள்ளூர்
கல்கி, மங்கையர் மலர்
ஏஜெண்டிடம்
**பொன்மலர், கணையாழி**
இதழ்களை
வாங்கி, வாசித்து,
மகிழ்ந்து
உங்கள் ஆதரவை
அளிக்க
வேண்டுகிறோம்.

கல்கி
ஈக்காடுதாங்கல்
சென்னை – 600 097



ஆல்பர்ட் A/c. அபிராமி A/c. கமலா A/c. ஸ்ரீபிருந்தா A/c. பாரத்
மற்றும் தமிழகமெங்கும்
குடும்பத்துடன் பார்க்க வேண்டிய
குதூகலமான படம்
Sp.முத்துராமன்
ரஜினிகாந்த்
இளையராஜா
பாண்டியன்
U
AVM AUDIO
Sp.முத்துராமன்!
வாலி பஞ்சு அருணாசலம்



# கல்கி



1992
நவம்பர் 15
மலர் : 51
இதழ் : 16
ஆங்கீரச
ஐப்பசி 30

தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா. - பாரதியார்.

# அமெரிக்கத் தேர்தல் ஆச்சர்யங்கள்

கிளின்டன்தான் வெற்றி பெறப் போகிறார் என்ற பரவலான கருத்து நிஜமாகிப் போனதில் வியப்பில்லை. ஆனால், 'புதிய வரிகள் விதிக்க மாட்டேன்' என்று உறுதி அளித்த புஷ் தோல்வி அடைய, 'வரிகளை உயர்த்து வேன்' என்று கூறிய கிளின்டன் வெற்றி பெற்றது ஆச்சர்யம்தான். அதை விட ஆச்சர்யம், அமெரிக்க மக்கள் பொருளாதாரச் சிக்கல்களைப் புரிந்து கொண்டு, 'நாம் தியாகம் செய்ய நேர்ந்தாலும் பரவாயில்லை; இந்தச் சிக்கல் களைச் சரிப்படுத்தக்கூடிய நபரைத் தேர்ந்தெடுக்க வேண்டும்' என்று திட்ட மிட்டுச் செயலாற்றியதுதான்.

அமெரிக்கா செல்வம் கொழிக்கும் நாடானபோதிலும் சமீப காலமாக அங்கு பொருளாதாரம் பலவீனப்பட்டுப் போயிருக்கிறது. கடந்த பல ஆண்டு களாகவே பற்றாக்குறை பட்ஜெட்தான் என்பதுடன், பற்றாக்குறை அதிகரித் துக் கொண்டே போகிறது. அந்நியச் செலாவணி நிலை திருப்திகரமாக இல்லை. வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரிக்க, தொழில் துறையில் கணக்கம். எனவே இந்தத் தேர்தல் பிரசாரத்தில் முக்கிய அம்சமாக இடம் பெற்றது, பொருளாதாரம்தான்.

'புதிய வரிகள் விதித்து மக்களை வதைக்க மாட்டேன்' என்றார் புஷ். 'உற்பத்திக்கு உதவாத அரசின் செலவினங்களைக் குறைப்பேன். தொழில் துறைக்கு ஊக்கமளிப்பேன். செல்வம் பெருக, பற்றாக்குறை தன்னால் குறை யும்' என்ற ரீதியில் பேசினார். கிளின்டனோ இதற்கு நேர்மாறாக, 'பணக் காரர்களுக்கு வரிகளை உயர்த்துவேன்; இதன் மூலம் கிடைக்கும் பணத்தை மக்களின் கல்வித் தரம் உயர முதலீடு (கவனிக்கவும்; முதலீடு - செலவு அல்ல) செய்வேன்; வருவாய் குறைந்தவர்களுக்கு மருத்துவ உதவி கிடைக் கச் செய்வேன்; சிக்கனத்தின் மூலம் பற்றாக்குறையைப் படிப்படியாகக் குறைப்பேன்' என்றெல்லாம் கூறினார்.

புது வரிகள் விதிக்காமலேயே பற்றாக்குறையைக் குறைத்து விட முடியும் என்ற புஷ் வாதத்தை மக்கள் நிராகரித்து விட்டனர். அப்படி குறைக் கப் போனால் பல சமுதாய நலத் திட்டங்கள் பலியாகி விடும் என்று உணர்ந்த னர். 'பணக்காரர்களுக்கு மட்டுமே வரிகளை உயர்த்துவேன் என்ற கிளின்ட னின் வாதம் அபத்தமானது; அவர் எதிர்பார்க்கிற அளவு வரி வருவாய் பெற அனைவருமே புதிய வரிகள் கொடுத்து அழ வேண்டியிருக்கும்' என்ற புஷ் தரப்பு வாதத்தையும் மக்கள் ஏற்கவில்லை.

இப்படியெல்லாம் தரமான விவாதங்கள் ஒருபுறம் நடக்க, தரக்குறை வான பிரச்சாரமும் ஓரளவு இடம்பெற்றது என்பது வருத்தத்துக்குரிய விஷயம். கிளின்டனின் செல்வாக்கு அதிகரித்து வருவது கண்டு அஞ்சியோ என்னவோ, அவரது ஒழுக்கமும், ஏன் தேச பக்தியுமே கூட சந்தேகத்துக் குரியன என்று கருத்து பரப்பப்பட்டது. ஆனால் கிளின்டன் அமைதி இழக்கா மல், தம்மை இழிவுபடுத்தியவர்களைக் 'கோமாளிகள்' என்று பழித்துரைக் காமல், கண்ணியம் காத்து, சரியான பதில்கள் அளித்து மக்களின் நன்மதிப் பில் உயர்ந்தார். கிளின்டனின் இளமைத் தோற்றம் அவருக்கு ஓரளவு உதவி யிருக்கலாம் என்றாலும், மக்கள் பொருளாதார ரீதியான சர்ச்சைகளை நன்கு புரிந்து கொண்டு செயல்பட்டனர் என்பதை, டீவி நிகழ்ச்சியில் அவர்கள் தொடுத்த கேள்விக் கணைகள் மட்டுமின்றி, தேர்தல் முடிவுகளும் நிரூபிக் கின்றன. கிளின்டன் மாநில கவர்னராக இருந்து புரிந்த சாதனைகளைக் கவனித்து வோட்டு அளித்துள்ளனர்.

மூன்றாவது வேட்பாளராக ராஸ் பெரோ தேர்தல் களத்தில் குதித்தது சுவாரஸ்யத்தை அதிகரித்தது. மற்ற இருவருக்கும் கட்சிப் பணம் உதவ, இவரோ கையை விட்டு 60 மிலியன் டாலர் செலவழிக்க நேர்ந்தது. ஆனால் அவர் சொத்தின் மதிப்பு 3 பிலியன் என்னும் போது இது அதிகமில்லைதான்! பெரோ தோற்றுப் போனாலும் கட்சிப் பூசல்களுக்கு அப்பாற்பட்டு வாதாடி யதால், மக்களின் கவனம் சில்லறைச் சச்சரவுகளில் சிதறுண்டு போகாமல் நாட்டின் முக்கியமான பிரச்னைகளில் நிலைக்கப் பெரிதும் உதவினார். வோட்டளிக்கு முன்னர் மக்களை நன்கு சிந்திக்கத் தூண்டியதில் பெரோவின் பங்கு கணிசமானது. அந்த அளவுக்கு அமெரிக்க மக்கள் மட்டுமின்றி, ஜனநாயகப் பற்றுள்ள அனைவருமே மகிழலாம்.



பெங்களூர்...
பங்காரப்பாவை மாற்ற வரலை!
கர்நாடக அரசியல் நிலைமையை முதல்ல தெரிஞ்சு கொள்ள வந்திருக்கோம்!
டெல்லி...
கல்தா கொடு... நீடிக்கட்டும்! கிளம்பு... ஜெயிக்கட்டும்! அசைக்க முடியாது...
கர்நாடக அரசியல் நிலைமை
140 − 80 + 2 ÷ 3 × 4 = 230 × 2/3 × 100...
பார்த்தீங்களா? நாமும் ஆரம்பிச்சோம்... நம்மை விட சுறுசுறுப்பா ஆயிட்டாங்களே?
வாய்யா, பார்த்திடலாம் ஒரு கை!
ஆமா, ஆமா... போற போக்கைப் பார்த்தா நாமும் காணாமப் போயிடுவோம் போலிருக்கு!
தினத்தந்தி
அய்யா, சாமிங்களா... கொஞ்சம் டைம் கொடுங்க! இப்பத்தான் ஆக்ரோஷமா முடிச்சேன்! கர்நாடகாவுக்கு ஆருங்களை அனுப்பிச்சிருக்கேன்... அதுக்குள்ள அவசரப்பட்டா எப்படி?
நாயக்
சரத் பவார்
பிரதமர்

# ஸ்ரீ கந்தசுவாமி
# பர்மனென்ட் பண்ட் லிமிடெட்

பதிவு அலுவலகம் : 60, சாமி பண்டாரம் தெரு
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை 2

துவக்கம் : 1990
பதிவு எண் : 19722

## பிக்சட் டிபாசிட் திட்டம்

| 45 நாள் | 90 நாள் | 6 மாதம் | 1 ஆண்டு | 2 ஆண்டு | 3 ஆண்டு | 4 ஆண்டு | 5 ஆண்டு* |
|---|---|---|---|---|---|---|---|
| 13% | 14% | 15% | 17% | 18% | 18.5% | 19% | 20% |

*குறைந்த அளவு டிபாசிட் ரூ. 20,000/- காலம் 5 ஆண்டுகள். மாத வட்டிக்கான செக்குகள் முன் கூட்டியே கொடுக்கப்படும்.

**சேவிங்ஸ் கணக்குகள் மீது 9.5% வரை வட்டி உங்கள் டிபாசிட்டுகள்**
**45 மாதங்களில் 2 மடங்காகிறது 90 மாதங்களில் 4 மடங்காகிறது**

## காமதேனு மணி பேக் திட்டம்

பிரதி மாதம் ரூ.100/- வீதம் தொடர்ந்து 15 வருடம் செலுத்துவீர்
5-ம் ஆண்டு முடிவில் ரூ. 6000/- ஐத் திரும்பப் பெறுவீர்
10-ம் ஆண்டு முடிவில் மீண்டும் ரூ. 6000/- ஐத் திரும்பப் பெறுவீர்
15-ம் ஆண்டு முடிவில் மிகப் பெருந்தொகையாக ரூ. 50,000/- பெறுவீர்

## பென்ஷனர் நலத்திட்டம்

சேமிப்பு ரூ. 13,000/- வட்டி வீதம் - **19%** கால வரம்பு 12 மாதங்கள் காசோலைகள் முன்னதாகவே வழங்கப்படும். முதியோர்களும், விதவைகளும், உடல் ஊனமுற்றோர்களும் மற்றும் கல்வி, சமய அறக்கட்டளைகளும் சேர்ந்து பயன் பெறலாம்.

## ரெக்கரிங் டிபாசிட் திட்டம்.

| பிரதி மாத டிபாசிட் | ரூ. 25/-ம் அதன் பெருக்கமும் பெற்றுக் கொள்ளப்படும் மாதங்கள் முடிவில் கிடைக்கும் தொகை | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | 12 | 24 | 36 | 48 | 60 | 72 | 84 |
| ரூ. 25 | 330 | 715 | 1,180 | 1,800 | 2,510 | 3,350 | 4,370 |
| ரூ.100 | 1,320 | 2,860 | 4,720 | 7,200 | 10,050 | 13,400 | 17,500 |

## செல்வக்களஞ்சியம் டிபாசிட் திட்டம்

உங்கள் குழந்தையைக் குபேரனாகக் காண ஆசையா! இதோ
ரூ. 7500/- ஐச் செலுத்தி 15 வருட முடிவில் ரூ. 1,20,000/- பெறலாம்
ரூ. 9000/- ஐச் செலுத்தி 15 வருட முடிவில் ரூ. 1,44,000/- பெறலாம்

கடன் வேண்டுமா? எங்களை அணுகுங்கள், நகைக்கடன் சவரனுக்கு ரூ. 2400/- வட்டி விகிதம் ரூ. 1.85 கடனுக்கு உச்சவரம்பு இல்லை. தருவதில் தாமதமில்லை. R.D கட்ட வேண்டியதில்லை...

(Friday Weekly Holiday)
பங்குதாரர்களுக்கு மட்டும்: Business Hours,
Week Days 9.00 A.M - 12.00 Noon.
&
2.30 P.M - 6.00 P.M
Sunday 9.00 A.M. 12.00 Noon.

சேர்மன்
**P. பாலசுப்பிரமணியம்,** B.Sc.,
சீனியர் டிரஸ்டி - ஸ்ரீ கந்தகோட்டம்,
சென்னை - 3.

SURESH

- சேமிப்பே செழிப்புக்கு வழிகாட்டி -

வட்டமேஜை

# சதிகார அரசுக்குச் சவுக்கடி!

◆ 'பெண் குழந்தையை அரசே வளர்க்கும்' - என்னங்க அநியாயம் இது! கிடக்கிற வேலையை விட்டுட்டுக் கிழவனைத் தூக்கி மடியில் வைத்துக் கொஞ்சுகிற கதையாய்....! தலையங்கம் இந்திர குமாரிக்கு மட்டும் அல்ல - இது போல சாத்தியப்படாத செயல்களைப் பேசி, சரித்திரம் படைக்க எண்ணும் சதிகார அரசுக்கு ஒரு பலத்த சவுக்கடியாய் அமைந்துள்ளது.

பாண்டிச்சேரி - 3, தா. செல்வராசன்.

◆ அனாதைக் குழந்தைகள் வளர்ந்து பெரியவர்களானதும் திருமணமாவது கஷ்டம் என்று கூறியுள்ளீர்கள் (தலையங்கம்). 'அனாதை கன்னிப் பெண்களை மணப்பவருக்கே அரசு வேலை' என்று பின்னால் அரசாங்கம் சட்டம் போட்டு விட்டால் பிரச்னை தீர்ந்து விட்டுப் போகிறது!

புதுக்கோட்டை - 3, தேவகி நாகராசன்.

◆ 'கல்கி' இதுவரை வெளியிட்டுள்ள நகரச் சிறப்பிதழ்களிலேயே சிறப்பானதும், படித்துப் பத்திரப்படுத்தி வைக்க வேண்டியதுமான இதழ் என்று தென் சென்னைச் சிறப்பிதழைக் குறிப்பிட்டால் மிகையாகாது. டாக்டர் ஸ்ரீதரனின் பேட்டியைப் படித்து, கண்கள் ஆச்சரியத்தில் விரிந்தன! ஒரு இடத்தில் கூட ஜெயலலிதாவைத் துதி பாடவில்லையே!

தக்கோலம், அ. முஸ்தபா.

◆ தென் சென்னை எம்.பி. தன்னம்பிக்கையின் 'எதிரொலி' சார்... 'எதிரொலி' அல்ல... கல்கியிலா இந்தக் கவனக்குறைவு!

கும்பகோணம், சித்ரா கிருஷ்ணமூர்த்தி.

◆ தென் சென்னைச் சிறப்பிதழில் பரங்கி மலை ரயில்வே கேட் அகற்றப்பட்டுச் சுரங்கப் பாதை அமைப்பது குறித்து ஆதரவான தகவல்கள் ஏதுமில்லை. எங்களைப் போன்ற பொது நல அமைப்புகள் போராடி, போராடி ஓய்ந்து விட்டோம். இந்தச் செய்தியைக் கண்ணுற்ற பிறகாவது, கொள்முதல் செய்யப்பட வேண்டிய நிலத்தின் சொந்தக்காரர்கள் தாங்களாகவே மனமிறங்கி நிலத்தை ஒப்படைத்தால்தான் வழிபிறக்கும்.

சென்னை - 91, அ.ரா. பார்த்தசாரதி
உபயோகிப்பாளர் பாதுகாப்புக் குழு
மடிப்பாக்கம் கிளை.

◆ நடைபாதை ஆக்கிரமிப்புகள் அகற்றல் வாக்குமூலங்கள் வரவேற்கத்தக்கவை. தி. நகர் எம்.எல்.ஏ. பாராட்டப்பட வேண்டியவரே! ஆனால் நடைபாதை ஆக்கிரமிப்புகள் எப்படி வந்தன? அரசியல் இனத்தைச் சேர்ந்த சிலரின் லஞ்ச லாவண்யங்களாலேதானே! தும்பை விட்டு வாலை பிடிக்கும் கதையே இங்கு தொன்று தொட்டு தொடங்கிய தொழு நோயாகிவிட்டது!

திருச்சி - 17, பி. கர்ணதாசன்.

◆ பிளாட்பாரக்கடைகளில் விற்கும் பொருள்கள் கொள்ளை மலிவு. தரமும் அவ்வளவு மோசமில்லை. நடுத்தரவர்க்கத்தினரும், வசதிகுறைந்தோரும் பேன்ஸி பொருள்கள் வாங்கும் சொர்க்கம் பிளாட்பாரக் கடைகள்தான். எனவே பிளாட்பாரக்கடைகள் அகற்றப் படக்கூடாது என்பதை நடுத்தர மக்கள் சார்பாகக் கூற விரும்புகிறேன்.

சென்னை - 78, கீதா அனந்த்.

◆ 'அரங்க நாயகி'யின் நாயகன் போல் பலரைக் கண்டாலும் அரங்க நாயகியாகச் சிலரால்தான் முடியும். நயமான நளினமான வெளிப்பாடு.

தஞ்சை - 4, கே. காமாக்ஷி.

◆ ஆண்களுக்குப் பெண்களின் உயர்வை, மேன்மையை ஒப்புக் கொள்ளும் பக்குவம் வரவில்லை என்பதை 'அரங்கநாயகி' விளக்கினாலும் பெண்களுக்கும் சமீபகாலமாக ஆண்களை எவ்விதத்திலாவது மட்டம் தட்ட வேண்டும் என்கிற ஆசை வருகிறது என்பதை அந்தக் கதை தெள்ளத் தெளிவாக்குகிறது என்று கூடச் சொல்லலாம்.

திருச்சி - 21, கே.என். இராமகிருஷ்ணன்.

◆ கல்கி 18.10.92 இதழில் அஜந்தா சோயா பங்குகள் வெளியீடு பற்றி எழுதும் போது, பொது மக்களிடமிருந்து ஒரு கோடி மூலதனம் எதிர்பார்ப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் சட்ட விதிகளின்படி ஒரு நிறுவனம் மூன்று கோடிக்குக் குறைவாகப் பங்குகள் வெளியிடவோ அதில் பொது மக்களின் பங்கு 1.80 கோடிக்குக் குறைவாகவோ இருக்க முடியாதே?

திருவனந்தபுரம், என். பார்த்தசாரதி.

(அஜந்தா சோயா வனஸ்பதி திட்டத்தின் பங்குகள் வெளியீடு 9.97 கோடி. இதில் பொது மக்கள் பங்கு 5.50 கோடி. மீதம் 4.47 கோடி அத்திட்டத்தைத் தொடங்குவோரின் முதலீடு. தவறு நேர்ந்தமைக்கு வருந்துகிறோம்.
- ஆசிரியர்.)

ரங்கராஜன் இவரை ஆச்சர்யத்துடன் பார்த்தான்.

''வாங்க சார்...! கடைசி நாள் கூட கரெக்ட் டயத்துக்கு வர்ற ஒரே ஆள் நீங்க தான்...!''

சற்று நேரம் எதை மறக்க நினைத்தாரோ அதையே ஞாபகப்படுத்தினான்.

ஆமாம். இன்று இவருக்குக் கடைசி நாள்தான். நாற்பது வருட உறவுச் சங்கிலி இன்று அறுபடுகிறது.

# ஒரு மழைவில்... ...ஆரம்பம்



மஜுமித்ரா

அலுவலகத்தில் வேறு யாருமில்லை. மின்விசிறிகளின் 'விர்ர்...' மெலிதாகக் கேட்கிறது. தன் சீட்டில் உட்கார்ந்தார்.

மிகுந்த வாஞ்சையுடன் தன் நாற்காலியைத் தொட்டுப் பார்த்தார்.

இன்றைக்கு ஒரு நாள்தான்.

அடிவயிற்றில் மெலிதாக ஒரு கலவரம் படர்ந்தது.

கலவரம் கோபமாய் உருமாறியது.

இந்த அலுவலகம் எனது நாற்பது வருட உழைப்பை உறிஞ்சி விட்டு இன்று சக்கையென்று துப்புகிறது.

சர்டிபிகேட்டில் வயது ஆகியிருக்கலாம். என் மனத்துக்கு என்றும் இருபதுதான். நேற்று வந்த இளைஞர்களை



''மளிகை வியாபாரம் செய்துக் கிட்டே அரசியலில் புகுந்தது தப்பாப் போச்சு!''

''ஏனுங்க?''

''தொண்டருங்க எடைக்கு எடை எடைக்கல் தர்றோம்கிறாங்க!''

– உ. ராஜாஜி

விட அதிக உழைப்பை என்னால் தர முடியும். ஆனால்...

நாளையிலிருந்து நான் இங்கே அந்நியன்.

அவருக்குள் சுயபச்சாதாபம் எழுந்தது.

சிவப்பு நிற ஃபைலை உருவினார்.

எர்ணாகுளம் கிளைக்கு ஒரு பதில் எழுத வேண்டும்.

இந்தக் காலத்துப் பசங்களுக்கு எங்க ஒழுங்கா நாலு வரி ஆங்கிலத்தில் எழுதத் தெரிகிறது?

எழுத ஆரம்பித்தார்...

இவருக்கு இங்க் பேனாதான் சௌகர்யம். பால்பாயிண்ட் பேனாவில் எழுதச் சொல்லி அலுவலகம் கட்டளையிடுகிறது.

''எல்லாம் அழிவை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறது!''

''ஹலோ... விஸ்வநாதன் சார்... குட்மார்னிங்!''

முதுகுக்குப் பின்னால் குரல் கேட்டது.

ரமணன் பெரிதாகச் சிரித்தான். இவனுக்குச் சிரிக்காமல் பேசவே தெரியாது.

அமெரிக்காவிலுள்ள கிழக்கு லாஸ் ஏஞ்சல்ஸ் பகுதியில்தான் போக்கு வரத்து உலகிலேயே மிக அதிகமாய் இருக்கிறது! 'ஹாலிவுட்' இங்கு இருப்பதும் இதற்கு ஒரு காரணம்! ஒரு நிமிடத்திற்கு 363 கார்கள் வீதம் இந்தப் பகுதிச் சாலைகளில் செல்லுகின்றன!

– சங்கை. மனோகரன்

(பொது அறிவு விஷயங்கள் - நூலிலிருந்து)



ஆபிஸிலுள்ள அத்தனை குட்டிகளுக்கும் இவன் மேல் ஒரு கிறக்கம். இந்தச் சிரிப்புக்கும், பேச்சுக்கும் எவள்தான் மயங்க மாட்டாள்?

''என்ன சார்... இந்தத் தொந்தரவை எல்லாம் விட்டிட்டு இன்னைக்காவது கொஞ்சம் ரிலாக்ஸ்டாயிருக்கக் கூடாதா?''

''நாளைலேர்ந்துதான் ரிலாக்ஸ்டாயிருக்கப் போறேனே...!''

ரமணன் சிரித்துக் கொண்டே நகர்ந்தான்.

சற்று நேரத்தில் ஜி.எம்.மிடமிருந்து அழைப்பு வந்தது.

ஜி.எம். இவரை விடச் சின்னவர். ஆரவாரமாய் வரவேற்றார்.

''வாங்க சார்... உட்காருங்க...!''

அருகிலிருந்த இளைஞனை இவருக்கு அறிமுகப்படுத்தினார்.

''சார்... இது சூர்யா... புதுப் பையன்.. இன்னைக்கு ஜாய்ன் பண்றார்... உங்க சீட்டுக்குத்தான் போட்டுருக்கோம். இவருக்கும் கொஞ்சம் சொல்லிக் கொடுங்கோ...!''

அந்தப் பையன் இவரைப் பார்த்து மெலிதாகச் சிரித்தான்.

இவருக்குப் பளீரென ஒரு கோபம் வந்தது.

''சூர்யா... சார் எல்லாம் சொல்லுவார்.. ஓ.கே. ஆல் தி பெஸ்ட்...!''

வெளியே வந்ததும் அவன் இவருடன் கைகுலுக்கினான்.

இவருக்கு அவன் மேல் வெறுப்பாக வந்தது.

எதிரில் உட்காரச் சொன்னார்.

வத்சலா வேகமாக வந்து இவர் டேபிளில் கையூன்றினாள்.

சனியன்! விவஸ்தை கெட்ட ஜென்மம். ஒழுங்கா உடுத்தத் தெரியாது.

''சார் யாரு? புதுசா...?'' அவனை அளந்தாள்.

''ஆமாம்... போய் உன் சீட்டுல உட்கார்...!''

அவள் விருட்டென நகர்ந்தாள்.

அவன் இவரையே பார்த்துக் கொண்டிருந்தான்.

''என்ன படிச்சிருக்கே..?''

''எம்.காம். செகண்ட் இயர்ல நிறுத்திட்டேன்!''

படித்துக் கொண்டு இருப்பவனுக்கு இப்ப வேலை ரொம்ப அவசியமோ?

''உன் பேர் என்ன சூர்யாவா...? இங்க பாரு சூர்யா.. நாற்பது வருஷம் இங்க நாயா உழைச்சேன். திடீர்னு இன்னைக்குத் தூக்கி எறிஞ்சுட்டாங்க.. புதுசா நீ வந்திருக்கேன்னு... நான் சொல்றேன்னு தப்பா எடுத்துக்காதே... இந்தக் காலத்துப் பசங்களுக்கு என்ன தெரியுது?''

சூர்யா புன்னகையுடன் அவரையே பார்த்துக் கொண்டிருந்தான்.

சற்று விருப்பமில்லாமலேயே வேலைகளைக் கொஞ்சம் கொஞ்சம் அறிமுகப் படுத்தி வைத்தார்.

சூர்யா நிறைய சந்தேகங்கள் கேட்டான். டைரியில் சிலவற்றைக் குறித்துக் கொண்டான்.

சம்பிரதாயப் பாராட்டுகளுக்குப் பின் எல்லோரும் இவரிடம் கைகுலுக்கி விடை பெற்றார்கள்.

அலுவலகம் காலியாகி விட்டது.

சூர்யா இன்னும் இவர் எதிரில் உட்கார்ந்திருந்தான்.

''என்ன நீ போகலையா?''

''நீங்க எங்க இருக்கீங்க சார்?''

சொன்னார்.

''நானும் அந்தப் பக்கம்தான் போகணும். ஒண்ணா போலாமே...!''

''வேண்டாம்.. நான் நடந்துதான் போவேன்... இனிமே நான் எதுக்குப்பா...!''

''இல்லே சார்.. போகலாம்...!''

கிளம்பினார்கள்.

சனியன்! ஏன் கூடவே வருது?

மௌனமாக நடந்தார்கள்.

சூர்யா மெள்ள இவரது கையைப் பற்றினான்.

''சாருக்கு என் மேல ரொம்பக் கோபம்னு எனக்குத் தெரியும்...!''

''ச்சே.. ச்சே... எனக்கு என்ன கோபம்... வயசாயிடுச்சு... அனுப்பிட்டாங்க... உன் மேல் கோபப்பட்டு என்ன பிரயோஜனம்?''

''இல்ல.. எனக்குத் தெரியும்... உங்களுக்கு ஒண்ணு தெரியுமா? எனக்கு இந்த வேலை கிடைக்கலேன்னா தற்கொலை பண்ணிட்டுருப்பேன்...!''

விஸ்வநாதன் அதிர்ந்தார்.

''ஆமாம்... அப்பா ஹார்ட் அட்டாக்ல திடீர்னு இறந்துட்டார். பெரிதாகச் சேமிப்பு ஒன்றுமில்லே.. நான் எம்.காம் படிச்சுட்டு இருந்தேன். எனக்கு மேல ரெண்டு அக்கா. கல்யாண வயசு தாண்டிட்டாங்க. கீழ ஒரு தங்கை. நான் படிப்பைப் பாதில நிறுத்திவேன்...!''

விஸ்வநாதன் அவனையே பார்த்துக் கொண்டிருந்தார்.

''அம்மாவும், அக்காவும் அப்பளம், ஊறுகாய் போட்டு வித்தாங்க. எவ்வளவோ இண்டர்வ்யூ... ஒண்ணும் கிடைக்கலை. வீட்ல பொம்பளைங்க கஷ்டப்பட்டாங்க. நான் ஆம்பிளை தண்டச்சோறு. ஒரு முடிவோடதான் இந்த வேலைக்கு அப்ளை பண்ணினேன். இண்டர்வ்யூ வரைக்கும் வந்தேன். கிடைக்கலைன்னா, தற்கொலை பண்ணிக்கலாம்னு முடிவு பண்ணியிருந்தேன். நல்லவேளை தப்பிச்சேன்...!''

மேலும் தொடர்ந்தான்.

''எப்படியும் எங்க அக்காக்களுக்குக் கல்யாணம் பண்ணிடுவேன்.. இந்த வேலை என் குடும்பத்தைக் காப்பாத்திடும்...!''

சூர்யாவின் கண்களில் மெலிதான கண்ணீர்.

விஸ்வநாதனுக்குள் ஒரு மின்னல் வெட்டியது.

''ச்சே...! எவ்வளவு சுயநலம் நான்? இது என்னோட முடிவுன்னு புலம்பிட்டு இருந்தேன்... இது இந்தப் பையனோட ஆரம்பம்னு தெரியலையே... தெரிஞ்சோ, தெரியாமலோ ஒரு குடும்பத்தைக் காப்பாத்தியிருக்கோம்... காலைலேர்ந்து எவ்வளவு கோப வார்த்தைகள் இவன் மேல் வீசினேன்...!

''ஸாரி.. சூர்யா... நான் கொஞ்சம் கடுமையா நடந்துகிட்டேன்...!''

''என்ன ஸார் இது? என் அப்பா வயசு உங்களுக்கு. என்கிட்ட ஸாரி கேட்டுக்கிட்டு...!''

''வீட்டுக்கு வா சூர்யா... காப்பி சாப்பிட்டுட்டுப் போகலாம்...!''

''ஓ. யெஸ்!'' சூர்யா மகிழ்ச்சியுடன் தலையாட்டினான்.





மாப்பிள்ளை முறுக்கு மடங்காமல் இருந்த சமயம் அது. காணாத புதையலைக் கைக்குள் அள்ளி விட்டதாக மனசு நிமிர்ந்திருந்த நேரம். கிருஷ்ணம்மாவை ஊரு உலகம் பார்த்திராத ஆடம்பரமான கல்யாணத்தில் கைப்பிடித்ததன் மூலம், ஆயுள் முழுக்க பணக்கார மைனராக வாழ்க்கை நடத்தலாம் என்று கனா கண்டு கொண்டிருந்த சுகக் காலம்.

பத்து வயசுச் சிறுமியாக இருந்த சொர்ணம் ''மாமா மாமா...'' என்று எந்நேரமும் கழுத்தைக் கட்டிக் கொண்டு கிடப்பாள். சின்னப் பிள்ளைகள் விளையாடுகிற விளையாட்டுக்களையெல்லாம் அவனிடம் விவரிப்பாள்.

இவனும் வேறு சில விளையாட்டுக்களைச் சொல்லிக் கொடுப்பான். கணக்குப் போடுவான். புதிர்க் கதைகள் போடுவான்.

மூத்த மகளைப் போல எந் நேரமும் ஒட்டிக் கிடப்பாள். விரலைப் பற்றிக் கொண்டு தன்னோடு சேர்ந்து தெருவில் நடந்து வருகிற சொர்ணம், அவனிடம் ஒரு மகளைப் போலவே பழகுவாள். இவனுக்கும் ஒரு தந்தை உணர்வுதான் இருக்கும்.

ஒருநாள் -

டீக்கடைக்கு வந்திருந்தான், நாராயணசாமி. இளவட்டங்களெல்லாம் ஒன்று சேர்ந்து கொண்டு கேலியும் சிரிப்பாணியுமாக அவனை நச்சரித்தனர், கல்யாண டீ வாங்கித் தரும்படி.

டீக்கடை முகப்பில் உட்கார்ந்திருந்த வேலய்யா தாத்தா குறுஞ்சிரிப்பு சிரித்தார். தப்பிக்க முடியாமல் தவித்த நாராயணசாமியை அன்பும் குறும்புமாகப் பார்த்தார்.

# முருங்கை

16

''பானைஞ்சு பைசா டீக்குப் பதறுதீயேடா, கோட்டிப் பயலே. எல்லாருக்கும் டீச் செலவு செய்யலாம்.''

''என்ன தாத்தா, நீரும் அப்படிச் சொன்னா... எப்படி?''

''வேற எப்படிச் சொல்லுவாக? பத்து ஊரு சம்சாரிகளுக்கும் 'மேல்கை' ராமாஜுஜம். அந்தச் சமுத்திரம் பூராத்துக்கும் நீதான் ஒத்தை ராஜா. டீச் செலவு மட்டுமில்லே, எல்லாருக்கும் இட்லி வடை கூட செலவு பண்ணலாம்.''

''ஒத்தை ராஜாவா? நானா? அதெப்படி? சொர்ணம் ஒருத்தி இருக்காள்லே? அவளுக்கு ஒரு ராஜா வருவான்லே?''

''போடா... கிறுக்குப் பயலே. ஒனக்கு அடிங்கிற ராஜாவும் வரப் போறதுல்லே, 'பிடி'ங்கிற மந்திரியும் வரப் போறதுல்லே. நீதான்டா... ஏக சக்கரவர்த்தி!''

''அதெப்படி தாத்தா?''

''நீ எல்லாருக்கும் டீச் செலவு பண்ணு முதல்லே. அப்புறம் அந்த சூட்சமத்தைச் சொல்லுதேன்.''



''இதென்னடாயிது? தாத்தா புதுக் கதை போடுதாரு'' என்றவன்... எல்லாருக்கும் டீ போட்டுத் தரும்படி ஆர்டர் தந்தான். இளவட்டக் கரைச்சல் ஒருவழியாக ஓய்ந்த பிறகு -

''இப்புடி உக்காரு'' என்றார் வேலய்யா தாத்தா. இவனும் ஆர்வத்துடன் உட்கார்ந் தான். டீ குடித்தவுடன் அவருக்குக் குப் பென்று வியர்த்தது.

''என்னமோ... சூட்சமம்னு சொன் னீரே... தாத்தா...''

''சொல்லுதேன், சொல்லுதேன்'' என்ற வர் மேல்துண்டால் உடம்பு முழுக்க துடைத் துக் கொண்டார்.

''ஏலேய்... நம்ம ஊர்லேயும் சரி... பக்கத்து ஊர்லேயிருக்கிற நம்ம சாதிகளிலே யும் சரி... ரெட்டைப் பொண்டாட்டி கட்டி யிருக்கிற ஆள்களையெல்லாம் நெனைக்கப் பாரு...''

என்று ஒரு சின்ன இடைவெளி விட் டார். அவனும் யோசித்துப் பார்த்தான். வரிசையாக ஒவ்வொரு ஆளாக மனசுக்குள் நினைத்துப் பார்த்தான்.

''அவுக கட்டியிருக்கிற ரெட்டைப் பொண்டாட்டிக பூராவும் கூடப் பொறந்த அக்கா தங்கச்சிகளாக இருக்காகளா?''

அவனுக்குள் பளிச் பளிச்சென்று ஒரு வெளிச்சம். ''அட... ஆமா...!'' என்று பெரிய இழுப்பாக இழுத்து வியப்போடு ஆமோதித்தான்.

அவர் முகச் சுருக்கங்களில் ஒரு மின் னல். முகத்தில் பொங்கி வந்த பெருமிதச் சிரிப்பு.

''அது மட்டுமில்லேடா... அந்த அக்கா தங்கச்சிக பொறந்த வீடுகளை நெனைக்கப் பாரு. அந்த வீடுகள்லே ஆண் வாரிசே இருக் காது'' என்றார்.

அவன் வியப்பும் மகிழ்ச்சியுமாகத் திணறினான்.

''ஆமா... தாத்தா... நீங்க சொல்றது நெசந்தான்'' என்று சத்தமாய் ஆமோதித் தான்.

''அதுதான்டா... சூட்சமம்...''

என்று முடித்தார். ஆனால், இவனுக் குள் இன்னும் புதிராக இருட்டு. புதரான இருட்டு.

''சூட்சமத்தை ஒடைச்சி முடிச்சிட்டீரு. எனக்கு ஒரு எழவும் புரியலே.''

''புரியலியா...?'' என்று கேட்டவர் கண்களில் ஏளனமும் பெருமிதமும் போட்டி போட்டு நின்றன. லேசாக அவர் கண்ணைச் சிமிட்டியது போலிருந்தது.

''ஏலேய்...'' என்று நீட்டி இழுத்தார். ஓர் உண்மைக் கதையைச் சொன்னார். நடந்த ஊர், ஆள் விவரமெல்லாம் கூறினார்.

ரெண்டு பொம்பளைப் புள்ளை இருந்த வீட்டில் கல்யாணம் செய்தான் ஒருவன். மூத்த பெண்ணைத்தான். ரொம்ப நாள் தவமிருந்து காலம் போன காலத்தில் ஒரு பையன் பிறந்து... அவனுக்கு மச்சினனாக இருந்தான். திரண்ட சொத்து. ஏகப்பட்ட நிலம். அத்தனைக்கும் அந்தச் சிறுவனே வாரிசு.

ஒரு திருவிழாவுக்கு மனைவியையும், மனைவி தம்பியையும் கூட்டிக் கொண்டு போனான், மருமகன். கூட்டத்தில் அந்தச் சிறுவன் தொலைந்து போனான். ஒரு வாரம் கழித்து... ஒரு சாக்கடையில் கிடந்தது, அந்தப் பையனின் உடல்.

**மேலாண்மை பொன்னுச்சாமி**



## கம்ப்யூட்டரின் எதிரி

கம்ப்யூட்டர்களுக்கும் எதிரி உண்டாம்! அந்த எதிரி நைலான் துணி. பிரிட்டனில் உள்ள 'லீட்ஸ்' பல்கலைக் கழகம் இதனைக் கண்டுபிடித்துள்ளது. நைலான் ஆடையை அணிந்தவர்கள் கம்ப்யூட்டரின் அருகில் வந்தால் அது திரை விழுந்து போகின்றதாம். நைலான் துணிகளின் உராய்வின் போது உண்டாகும் மின்னாற்றலே இதற்குக் காரணம் என்கிறார்கள்.

ஆதாரம் : சிந்தனைக்கு விருந்து
தகவல் : கு. பாரதி

போலீஸ் கேஸாயிற்று. விசாரித்துப் பார்த்தால் துப்பு துலங்கி விட்டது. அந்தச் சிறுவனைக் கொன்றது அந்த வீட்டு மருமகன்தான்.

வெலவெலத்துப் போனான் நாராயண சாமி.

''இதென்ன, கொடுமையாயிருக்கு'' என்று அதிர்ந்து போனான்.

''இது எப்ப துப்பு துலங்கிச்சு, தெரியுமா? அவன் ரெண்டாவது பொண்ணையும் தனக்கே கட்டி வைக்கும்படி நச்சரிக்க ஆரம்பிச்ச பிறகுதான்.''

''எதுக்கு?''

''என்னடா... கூறுகெட்ட பயலாயிருக்கே? இது கூடவா, தெரியலே? அந்தப் பயல் செத்தான்னா... சொத்து பூராவும் பொம்பளைப் புள்ளைகளுக்கு. பொம்பளைப் புள்ளைக ரெண்டையும் வளைச்சுப் போட்டுட்டா... சொத்து பூராவும் சிந்தாம, சிதறாம கைக்கு வந்துரும்லே?''

''அடப் பாவிகளா! சொத்துக்காகவா... சொந்த மச்சினனைக் கொன்னான்? பெரிய அநியாயமாயிருக்கே?''

''காலம் காலமா நடந்து வர்ற பாவங்களையெல்லாம் துப்பறிஞ்சு பாரு... மூல காரணம், சொத்துதான்னு வந்து முடியும்.''

''அடக் கொடுமையே! இப்படியுமா நாட்லே நடக்கு?''

''அது மட்டுமில்லேடா.. நாராயணா, நாளைக்கு நீயும் இதைத்தான் செய்வே''

''எதை?''

''கொழுந்தியாளையும் வளைச்சுப் போட்டு, சொத்துலே யாருக்கும் பங்கு குடுக்காம... மொத்தமா அமுக்கணும்னு ஆசைப்படுவே''

''சொத்துக்காகவா? ச்சே! இது, மனுசத் தன்மையேயில்லாத அக்கிரமம்!''

''காலம் காலமா இப்புடி நடந்துக் கிட்டுத்தான் இருக்கு. கருசக்காடு இதைப் பாத்துக்கிட்டுத்தான் இருக்கு. நீ ஒருத்தன் தான்... கட்டபொம்மு வசனம் பேசுதே.''

''அப்போ... கருசக் காட்லே மனுசத்தன்மையுள்ள மனுசங்க இருந்ததே கிடையாதா? இதை யாருமே தட்டிக் கேக்கலியா?''

''வழமை (மரபு)யிலே இருந்து வர்ற ஒரு பழக்கத்தை யாராச்சும் குத்தம் சொல்லுவாகளா? ஏன் எதுக்குன்னு எவனாச்சும் கேக்க முடியுமா?''

''ஏன் கேக்கக் கூடாது?''

''கேக்க ஆளும் இருக்காது. வாய்ப்பும் இருக்காதுடா. மூத்த பொண்ணுகல்யாணம் தான்டா, ஊர் அழைச்சு, பந்தி வைச்சி நடக்கும். ரெண்டாம் பொண்ணு கல்யாணம் கமுக்கமா முடிஞ்சு போயிரும். இதுலே யாரு போய்... என்னத்தைக் கேக்க?''

''அந்தப் பொண்ணு சம்மதிக்க லேன்னா...?''

''போடா... போக்கத்த பயலே...'' என்று வேலய்யா தாத்தா இளக்காரமாய்ச் சிரித்தார். 'இப்படியும் ஒரு கூறுகெட்ட பயலா...' என்கிற வியப்புடன் கூடிய இளக் காரம்.

''ஏலேய்... மண்ணும் பொண்ணும் ஒண்ணுடா. ரெண்டையும் பாதுகாக்கணும். பராமரிக்கணும். உழுது பண்படுத்தணும். உருட்டிப் புரட்டி உருமாத்தணும். ஆனா... அதுகிட்டே போய் யாராச்சும் சம்மதம் கேப்பாகளாடா? பேப் பயலே!''

அவரது கெக்கலிப்பில் இருக்கிற எகத்தாளம், பெண்ணைக் கிள்ளுக்கீரையாக அலட்சியப்படுத்துகிற அகங்காரம்..

இவனுள் கன்னென்று உறைத்தது. பெண்ணை ஒரு மனுஷியாகப் பார்க்காமல், வெறும் பண்டமாக நினைக்கிற அந்தத் திமிர்... நிலத்தோடு பின்னிய வாழ்க்கையின் இயல்பாக இருக்கிற கர்வம் -

எல்லாமே இவனை உசுப்பியது. இவனுள் தீவிரமான எதிர்ப்புணர்வு. பொங்கிப் பிரவகித்த தார்மீகக் கோபம்.

''இது வங் கொடுமை...'' என்று கொதிப்போடு சீறினான்.

''ஆமடா... வங்கொடுமைதான்... அது தான் வழமை. இதை யாரு தட்டிக் கேக்குறது?''

''நா கேப்பேன். செவிட்டிலே அறைஞ்சு கேப்பேன்...''

''ஒன்னைப் போல ஆயிரம் சவடால் காரங்களைப் பாத்தவன்டா... இந்தக் கிழவன்...''

என்றவர்... ரோஷப்பட்ட ஒரு முனிவரைப் போல... சாபம் போடுகிற மாதிரி சப்தத்தை உயர்த்தினார்.

''நீயே... இந்த வங்கொடுமையைச் செய்யத்தான்டா போறே!''

''நா செத்தாலும் சரி... இந்த வங்கொடுமையைச் செய்யவே மாட்டேன் தாத்தா...


MINIT MILK
MINIT MILK
MILK IN A MINUTE
இலவசம்!
ஒரு அழகிய கப் ஒவ்வொரு
மினிட் மில்க் பேக்குடனும்.
MINIT MILK
MINIT MILK
நிமிடத்தில் பால். டீ, காபி போன்றவைகளுக்கு சிறந்தது.

1141R

மனுசத்தன்மையில்லாத இந்தக் காரியத்தை எந்த மனுசனும் செய்யவே மாட்டான்.''

''நா 'இருந்து' பாக்காட்டாலும்... இந்த ஊரு இருந்து பாக்கத்தான் போகுது. நீ இப்ப இளவட்டம். இளரத்தத்துக்கு தர்ம நியாயம்தா தெரியும். நரம்பு முறுக்கா இருக்குறப்போ... நல்லதைத்தான் மனசு நெனைக்கும். பேசும். காலம் போகப் போக, இந்த வாழ்க்கை இருக்கே... இது எப்பேர்ப்பட்ட முரட்டுக் காளையையும் வசக்கி, வளைச்சு அடக்கிப் போட்டுடும்.''

**வே**லய்யா தாத்தா இன்றுதான் மண்டையைப் போட்டிருக்கிறார். அவர் சொன்னது பலித்தே விட்டது!

இதோ... சொர்ணத்தைத் தனக்கே முடித்துத்தரும்படி... அவள் அம்மாவிடமே சொல்லி விட்டு வந்தாயிற்று.

இளவட்டமாயிருந்த போது... மனசில் பொங்கிய தர்ம நியாயம், ஆத்திரப்பட்ட மனிதாபிமானம், 'வங்கொடுமை' என்று சாடிய வேகம், 'செவிட்டில் அறைந்து கேட்பேன்' என்று கொக்கரித்த வீரம்...

எல்லாம் எங்கே போயிற்று?

ச்சே... வாழ்க்கை என்னை எவ்வளவு சிறுமைப்படுத்தி விட்டது! என்னையே என் முகத்தில் காறித் துப்பும்படி வைத்து விட்டதே...!

என் விரலைப் பிடித்துக் கொண்டு மகளைப் போல தெருத் தெருவாக என்னோடு ஒட்டுதலோடு நடந்து திரிந்தவள், சொர்ணம்.

அவளைப் போய்... மனைவியாக்கி, மங்கிய இருட்டில் அவளுடன் முயங்கி... அது எப்படிச் சாத்தியமாகும்? அதுவும், கிருஷ்ணம்மாவைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு. ச்சே!

இப்படி மனிதனைத் தரம் தாழ்த்தி வீழ்த்துவது, எது...? என்ன காரணம்?

சொத்து... சொத்து... நிலம்... நில உடைமை... பட்டா. மனிதனுக்குத் தேவையாகவும், மனிதனை விட மேலானதாகவும் இருக்கிற நிலப் பட்டா!

வரப்புச் சண்டைகளும், வெட்டு குத்துகளும், சகோதரக் கொலை பாதகங்களும் எல்லாமே இந்தப் பாழாய்ப் போகிற நிலப்பட்டாவால்தான்!

மொத்த தேசமே... இந்த வார்ப்பில் - இந்த அச்சில் சுழன்று இயங்குகிற போது... நான் எப்படி புத்தனாக இருக்க முடியும்? மனிதனாக, யோக்யமானவனாக எப்படி இருப்பது?

சொந்த பம்ப் ஷெட் கிணறு வேண்டும். கூடுதல் நிலம் வேண்டும். அரண்மனை போன்ற வீடு வேண்டும்.

இதற்கான நேர்வழிகள் இல்லாவிட்டால்... குறுக்கு வழியிலாவது இலக்கை அடையத்தான் வேண்டும்.

மனச்சாட்சியின் கழுத்தை நெறி; மூச்சை அடக்கு; தீர்த்துக் கட்டு; பந்தங்களை மாற்று;

சொர்ணத்தின் இளமையை எண்ணி கிளர்ச்சி கொள். உன்மத்தமாகு. மோக வெறியை நெருப்பாக மூட்டு. நெருப்புக்கு முடிவில்லாமல் எண்ணெய் ஊற்று. தீ ஜ்வாலை விட்டெரியட்டும். திகுதிகுவென எரியட்டும். தீயின் நாக்குகளில் சகல புனித பந்த உணர்வுகளும் சாம்பலாகட்டும். உன் கனவுச் சமையல் நிறைவேறட்டும்.

அதோ... தலைதூக்குகிற மனச்சாட்சி. திமிறிக் கொண்டு எழுகிற தொல்லை. அதன் கழுத்தை நெறி. தொண்டைக் குழியில் விரலை வைத்து அழுத்து. விடாதே. அழுத்து. சாகட்டும்.

**இ**ழவு வீடு... உறவினர்கள் வருகையை எதிர்பார்த்து காத்திருக்கிறது. தேர் கட்டியாகி விட்டது. மெல்ல எழுந்தான், நாராயணசாமி.

வீட்டுப் பக்கமாய் நடந்தான். மனசு சிலந்தியாகி வலை பின்னியது. நிதானமாய் யோசித்தது. சொர்ணம் என்கிற ஈயைக் கவர்கிற சிலந்தி வலையாக இருக்க வேண்டும்.

நாளை மறுநாள் -

ஊர் நாட்டாண்மை வெங்கடாசலத்தைப் போய்ப் பார்க்க வேண்டும். பேச வேண்டும். வெறும் கையுடன் போகக் கூடாது. (தொடரும்)

---

## கீதா சாரம்

எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது. எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது. எது நடக்க இருக்கிறதோ அதுவும் நன்றாகவே நடக்கும்.

உன்னுடையது எதை இழந்தாய்?

எதற்காக நீ அழுகிறாய்?

எதை நீ கொண்டு வந்தாய், அதை நீ இழப்பதற்கு! எதை நீ படைத்திருந்தாய் அது வீணாவதற்கு!

எதை நீ எடுத்துக் கொண்டாயோ, அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது. எதைக் கொடுத்தாயோ, அது இங்கேயே கொடுக்கப்பட்டது.

எது இன்று உன்னுடையதோ அது நாளை மற்றொருவருடையதாகிறது. மற்றொரு நாள், அது வேறொருவருடையதாகும்.

இந்த மாற்றம் உலக நியதியாகும்.

- வை. வெங்கடேசன்

ஸ்ரீராமின் சீட்டு உற்சவம் விஜயதசமி 10-நாள் விழா!

ரூ. 20 லட்சம்

முதல் முறையாக

பரிசளிக்க மோகம்!

# பரிசுகள் பெற்ற 59,351 பேருக்கும் எங்கள் நல்வாழ்த்துக்கள்

ஸ்ரீராம் நடத்திய விஜயதசமி சீட்டு உற்சவத்தில் ரூ.20 லட்சம் மதிப்புள்ள பரிசுகள் அறிமுகப்படுத்துவோருக்கு வழங்கப்போவதாக அறிவித்திருந்தோம். அது முழுமையாக நிறைவேறிவிட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமை அடைகிறோம்.

மகத்தான மக்கள் இயக்கமான ஸ்ரீராம் சிட்ஸ் 62,000 புதிய உறுப்பினர்களை அடைந்ததன் மூலம் மேலும் வலுப்பெறுகிறது.

**டிவி வென்றோர்**



**திரு. அக்னி கணேசன்**
C/o. சௌந்தர-பாண்டியம்மாள்,
2/206, திலகர் தெரு,
குறிஞ்சி நகர், மதுரை-14.
(மற்றும் 20 பேர்)

**விசிபி வென்றோர்.**



**திரு. M. கலியமூர்த்தி,**
6/15, ரத்தினம் செட்டி பேட்டை,
உறையூர், திருச்சி-3.
(மற்றும் 23 பேர்)

**ஃபிரிட்ஜ் வென்றோர்.**



**செல்வி V. பூமா,**
18-A/4-F,
கௌசல்யா இல்லம்,
சிக்கந்தர் தெரு,
கடலூர்.
(மற்றும் 16 பேர்)

**சைக்கிள் வென்றோர்.**



**திரு. K. பிரபாகரன்,**
15, காமராஜ் நகர்,
பலகை
வாராவதி சாலை,
திருவான்மியூர்,
சென்னை-41.
(மற்றும் 105 பேர்)

**தங்கப்பதக்கம் வென்றோர்.**



**செல்வி கிருஷ்ணப்பிரியா,**
10, P.C.G.V. நகர், பேரூர் ரோடு,
கோயம்புத்தூர்-26.
(மற்றும் 20 பேர்)

பரிசுகள் வென்ற 59,351 பேருக்கும் அவை விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

SHRIRAM GROUP COMPANIES MADRAS

**ஸ்ரீராம் சிட்ஸ் & இன்வெஸ்ட்மெண்ட்ஸ் பி.லிமிடெட்.**
நிர்வாக அலுவலகம்: 'சுப்பிரமணியம் பில்டிங்'
1, கிளப் ஹவுஸ் ரோடு, சென்னை-600 002.
போன்: 474451/475536/470400/473932.

*ஸ்ரீராம் சிட்ஸ் — மேலும் பலருக்கும் பலவகையிலும் பலன்.*

ADWAVE/SC/4483

# வாய் உள்ள பிள்ளை பிழைக்கும்

**ஓர் இளைஞன் அரசியலில் நுழைய விரும்பினான். அவன் தந்தைக்கு விருப்பமில்லை. தந்தை சொன்னார், ''மகனே நீ கசப்பான உண்மைகளைச் சொன்னால் மக்கள் உன்னை விரும்ப மாட்டார்கள்; இனிப்பான பொய்களைச் சொன்னால் கடவுள் உன்னை விரும்ப மாட்டார். ஆக, நீ அரசியல்வாதியானால் மக்களும் உன்னை விரும்ப மாட்டார்கள்; கடவுளும் உன்னை விரும்ப மாட்டார். எனவே அரசியல் வேண்டாம்.'' வாய் உள்ள மகன் சொன்னான் : ''அப்பா, நான் கசப்பான உண்மைகளைச் சொன்னால் கடவுள் என்னை விரும்புவார்; நான் இனிப்பான பொய்களைச் சொன்னால் மக்கள் என்னை விரும்புவார்கள். ஆக நான் அரசியல்வாதியானால் கடவுளும் என்னை விரும்புவார். மக்களும் என்னை விரும்புவார்கள். எனவே நான் அரசியலில் நுழைவது சரியான முடிவே.''**

இந்தியா மட்டுமல்ல, எந்த நாட்டை எடுத்துக் கொண்டாலும் சரி; இன்றைக்குச் சக்திவாய்ந்த மனிதர்கள் அரசியல்வாதிகள் என்பது எல்லாரும் அறிந்ததே. ஆனால், அறிவு, கல்வி, திறமை, உழைப்பு இப்படி எந்தத் தகுதியை எடுத்துக் கொண்டாலும் நாம் அரசியல்வாதிகளுக்கு எந்தவிதத்திலும் குறைந்தவர்கள் இல்லை. ஆயினும் சட்டம் இயற்றும் அதிகாரம் அவர்களிடம்தான் இருக்கிறது. காரணம் என்ன? அவர்களுடைய பேச்சாற்றல். பேச்சாற்றலை நாமும் வளர்த்துக் கொண்டால் நாம் எவ்வளவு சக்திவாய்ந்த மனிதர்களாக ஆக முடியும் என்று நினைத்துப் பாருங்கள்.

எல்லாத் திறமைகளும் பெற்றிருந்தும் பேச்சாற்றல் இல்லாத காரணத்தால் வாழ்க்கையில் முன்னேற்றம் அடையாத பலரை நீங்கள் பார்த்திருக்கக்கூடும். பேச்சாற்றல் என்ற ஒரு திறமையைத் தவிர, வேறு எந்தத் திறமையும் இல்லாமல், வாழ்க்கையில் வியக்கத்தக்க வகையில் முன்னேறியுள்ள சிலரையும் நீங்கள் பார்த்திருக்கக்கூடும். பரீட்சையில் நிறைய மதிப்பெண்கள் பெற்றிருந்தும் பேச்சாற்றல் இல்லாத காரணத்தால் நேர்முகத் தேர்வில் தோல்வி அடைகிறார்கள் பலர். இதற்கு நேர்மாறாக, பரீட்சையில் குறைந்த மதிப்பெண்களே பெற்றிருந்தாலும், தங்களுடைய பேச்சாற்றலால் நேர்முகத் தேர்வில் நிறைய மதிப்பெண்கள் பெற்று வெற்றி அடைகிறார்கள் சிலர். ''அவன் பேசியே காரியத்தைச் சாதித்துக் கொள்வான்'' என்ற சொற்றொடரை நினைத்துப் பாருங்கள்.

வாய் திறந்து பேச வேண்டிய நேரத்தில் வாய் மூடி, பேசாமல் இருந்ததால் வாய்ப்பிழந்து தவிக்கிறார்கள் பலர். தான் விரும்பும் பெண்ணிடம், 'நான் உன்னை விரும்புகிறேன்' என்று சொல்லாத காரணத்தால் அவள் வேறு இடத்தில் திருமணமாகிப் போன பின் 'வாழ்வே மாயமாகி' உட்கார்ந்திருக்கிறார்கள் பல இளைஞர்கள். நண்பர்களுக்குக் கடன் கொடுத்து விட்டு, ''திருப்பிக் கேட்டால் தவறாக எடுத்துக் கொள்வார்

**பொன். இளங்கோ**



களோ'' என்று நினைத்துக் கடனை நன்கொடையாக மாற்றிக் கொண்டிருக்கிறார்கள் பல பேதைகள். 'வகுப்பில் என்ன சொல்லித் தருகிறீர்கள்?' என்று பெற்றோர் கேட்காத காரணத்தால் 'டியூஷன்' வகுப்பில் சேர்ந்தால்தான் தேற முடியும் என்ற நிலைமையை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள் பள்ளி உரிமையாளர்கள். இங்கே புகை பிடிக்கக் கூடாது என்ற பலகை தொங்கும் இடங்களில் கூட, 'வேறு இடத்திற்குச் சென்று புகை பிடியுங்கள்' என்று புகை பிடிப்பவர்களிடம் சொல்ல இயலாமல் அவர்கள் விடும் புகையைச் சுவாசித்து மூச்சுத் திணறிக் கொண்டிருக்கிறார்கள் பல அப்பாவி மக்கள். 'கேளுங்கள் கொடுக்கப்படும்' என்ற வாசகம் கிறித்துவ மதத்தினருக்கு மட்டும் அல்ல; எல்லா மதத்தினருக்கும் பொருந்தும். பெற்ற தாய் கூட அழுத பிள்ளைக்குத் தானே பால் ஊட்டுகிறாள்?

**வா**ழ்க்கையில் வெற்றி பெற இன்றியமையாதது பேச்சாற்றல். பேச்சாற்றல் என்பது மேடைப் பேச்சாகத்தான் இருக்க வேண்டும் என்பதில்லை. அரசியல்வாதிகளுக்கு அது அவசியம். எல்லோருக்கும் அல்ல. நம்மில் பலர் சிறந்த அறிவாளிகளாக இருந்தும், பேச்சாற்றல் இல்லாதவர்களாக இருப்பதற்குக் காரணம் தயக்கமும், அச்சமும்தான். இவற்றை உதறி விட்டால் எளிதாகப் பேச வரும். சிலர் இயல்பாகவே ஒதுங்கியிருப்பார்கள். நாலு பேருடன் பேசிப் பழக மாட்டார்கள். 'ஏதாவது தவறாகச் சொல்லி அசடு வழிய நேருமோ?' என்ற தாழ்வு மனப்பான்மை தயக்கத்துக்கு ஒரு காரணம்.

இதையெல்லாம் விரட்ட முதலில் ஏதாவது ஒரு சங்கம், கிளப் என்று சேரலாம். (சீட்டாட்ட கிளப்பாக இல்லாமல் இருப்பது நல்லது. அது வேறு வேண்டாத பழக்கங்களுக்குக் கொண்டு போய் விடும்.) இதில் நாலு பேரிடம் பேசிப் பழக வாய்ப்பு ஏற்படும். தன்னம்பிக்கை பிறக்கும்.

ஏதாவது தவறாகக் கூறி, திருத்தப்படுகிறீர்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள்... ''ஓ! அப்படியும் ஒரு கருத்து இருக்கிறதா? சரிதான்'' என்று. கூறுங்கள். அப்போது நீங்கள் குற்றம் செய்து விட்டது போன்ற உணர்வு ஏற்படாது.

பத்திரிகைகளைப் படியுங்கள். சில செய்திகள் பற்றி உங்கள் கருத்தை உருவாக்கிக் கொள்ளுங்கள். பிறகு நண்பர்களைச் சந்தித்து அவற்றைக் கூறுங்கள். ''உங்கள் அபிப்பிராயம் என்ன?'' என்று கேளுங்கள். இப்படி சிந்தித்துப் பேசப் பழகுங்கள்.



''அந்த மூணாவது சீன்லே உங்க நடிப்பைக் கண்டு என்னையுமறியாமல் 'பொல பொல'ன்னு கண்ணீர் விட்டுட்டேன்!''

''ஓ... ஓ... நிஜம்மாவா?''

''ஊம்... தயாரிப்பாளரை நினைச்சுத் தான்!''

- எஸ். ரமேஷ்



பெண் : என் கணவர் போற போக்கு எதுல போய் முடியுமோ... தெரியல!

தோழி : என்ன விஷயம்?

பெண் : டெலிபோன்ல பேசி முடிக்கறப்போ கூட கைதட்டணும்னு எதிர்பார்க்கிறார்!

- அம்பை தேவா

சர்வர் : ஏன் சார் ரெண்டு இட்லி, ஒரு தோசையோடு எழுந்துட்டீங்க?

வந்தவர் : இப்பல்லாம் என்னால அதிகமா மாவாட்ட முடியலைப்பா...!

- சீர்காழி வி. ரேவதி



செய்திகளைப் பற்றிச் சிந்தித்துப் பேசியதற்கு அடுத்த கட்டமாக, காரியாலயத்தில் நடப்பன பற்றிச் சிந்திக்கலாம். அதை மேலதிகாரிகளிடம், ''என் கருத்து இது; ஏற்பதும் ஏற்காததும் உங்கள் முடிவு'' என்பது போல் சொல்லலாம். உற்பத்திக்கு உதவுகிற, விற்பனையை அதிகரிக்கச் செய்கிற கருத்துக்களுக்கு வரவேற்பு இருக்கும்.

முக்கியமான விஷயம், பேசுவதற்கு முன் சிந்திப்பதுதான். சிந்தித்துப் பேசும் போது உளறல்கள் மிகக் குறைந்த பட்சமாகும். அநேகமாக இராது. 'சிந்தித்த பிறகுதான் பேசுகிறோம்' என்ற எண்ணமே தன்னம்பிக்கை அளிக்கும்.

சொந்த அலுவலாகவோ, காரியாலய வேலையாகவோ ஒரு முக்கிய நபரை சந்திக்கப் போகு முன்னர், 'அவரிடம் எப்படி ஆரம்பித்து, என்ன பேசுவது?' என்று முன்கூட்டியே சிந்தித்தால் நல்ல பலன் இருக்கும். ஒருவேளை எதிர்பார்க்கிற பலன் இல்லாவிட்டாலும், நிச்சயம் கெட்ட பெயர் வந்து சேராது! ''நீங்க சொல்றது எல்லாம் சரிதான்; ஆனா இப்ப இதை ஏற்கிற சந்தர்ப்பம் இல்லை'' என்பது போல் மரியாதையான பதில் கிடைக்கும். நீங்கள் மதிக்கப்படுவீர்கள்.

சிந்திப்பது என்பது இரண்டு வகைப்படும். 'என்ன கருத்தைச் சொல்ல விரும்புகிறோம்?' என்பது ஒன்று. 'அதை எப்படிச் சொல்கிறோம்?' என்பது மற்றது. இரண்டுமே முக்கியம். இரண்டையும் சிந்திக்க வேண்டும். ஒரு நல்ல கருத்தை, அது ஏற்கப்படும் விதத்தில் கூறாவிடில் பிரயோஜனமில்லை. எனவே நாம் யாரிடம் பேசுகிறோம் என்பதையும் கருத்தில் கொண்டு, அவர்கள் எளிதாகப் புரிந்து கொள்ளும் வகையிலும், அவரது மன இயல்புக்கு அனுசரணையான விதத்திலும் பேச வேண்டும்.

''இப்படி செய்யுங்க ஸார், பிரச்னை தீரும்'' என்பதற்கும், ''உங்களுக்குத் தெரியாததில்லை, ஞாபகப்படுத்தறேன் அவ்வளவுதான்; இப்படி செய்து பார்க்கலாமே'' என்பதற்கும் இடையில் எவ்வளவு வித்தியாசம் பாருங்கள்.

இதுவே எல்லா சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கும் பொருந்தும் என்று கூற முடியாது. தட்டிக் கேட்க வேண்டிய நிலையில் தட்டிக் கேட்காமலும் இருக்கக் கூடாது. உதாரணமாகத் திரும்பப் பெற வேண்டிய கடன்.

இதைத்தான் ''ஆடிக் கறக்கிற மாட்டை ஆடிக் கற; பாடிக் கறக்கிற மாட்டைப் பாடிக் கற'' என்றார்கள்!

# வானதி வழங்கும் புதிய வெளியீடுகள்

## சமயம், இலக்கியம், கட்டுரைகள்

| | ரூ.பை |
|---|---|
| ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளின் அருள்வாக்குகள் | |
| தெய்வத்தின் குரல் (இரண்டாம் பகுதி) | 95.00 |
| திருப்புகழ் (மூலம்) | 80.00 |
| ரா. கணபதி | |
| ஜயஜயசங்கர | 40.00 |
| டாக்டர். டி.வி.சுவாமிநாதன் | |
| காஞ்சிமா முனிவர் தரிசன அநுபவங்கள் | 12.00 |
| திரு.சம்பந்தம் | |
| வடலூர் இராமலிங்க சுவாமிகள் | 12.00 |
| நெமிலி. எழில்மணி | |
| தெய்வப் பாமாலை | 15.00 |
| டாக்டர். சரசுவதி ராமநாதன் | |
| கம்பனும் கண்ணதாசனும் | 15.00 |
| டாக்டர். ரா. இராசகோபாலாச்சாரியார் | |
| கம்பரின் ஐந்து நூல்கள் (உரையுடன்) | 30.00 |
| மு.மு. இஸ்மாயீல் | |
| ஒரு மறக்க முடியாத அநுபவம் | 35.00 |
| மும்மடங்கு பொலிந்தன | 40.00 |
| எஸ். கே. இராமராஜன் | |
| ஆழ்வார்களும் கம்பனும் | 20.00 |
| முனைவர் சுந்தரசண்முகனார் | |
| கிட்கிந்தாகாண்டத் திறனாய்வு | 35.00 |
| பாவலர் மணி சித்தன் | |
| பாட்டரங்கில் கம்பன் | 20.00 |
| டாக்டர். நா. மகாலிங்கம் | |
| நிர்வாக விஞ்ஞானம் | 37.00 |
| துறைவன் | |
| நாகரிகத்தின் புதுமலர்ச்சி | 38.00 |
| தி.சா. ராஜு | |
| நாமிருக்கும் நாடு | 22.00 |
| என். சி. ஸ்ரீதரன் | |
| எடுத்த காரியம் யாவினும் வெற்றி | 20.00 |
| டாக்டர். சுப. அண்ணாமலை | |
| ஜெயங்கொண்டார்! சதகம் | 20.00 |

## நாவல், சிறுகதைகள், சிறுவர் நூல்கள்

| | ரூ. பை. |
|---|---|
| கல்கி | |
| அலைஓசை | 135.00 |
| கோவி. மணிசேகரன் | |
| சேர சூரியன் (சரித்திர நாவல்) | 40.00 |
| மீ. ப. சோமு | |
| நந்தவனம் (நாவல்) | 65.00 |
| ரா. கி. ரங்கராஜன் | |
| மூவிரண்டு ஏழு (நாவல்) | 25.00 |
| அனுராதா ரமணன் | |
| தூங்கும் நினைவுகள் | 15.00 |
| பொன். பரமகுரு | |
| கறை படிந்த கரங்கள் | 30.00 |
| லா. ச. ராமாமிருதம் | |
| ஜனனி | 27.00 |
| உத்தராயணம் | 20.00 |
| சு. சமுத்திரம் | |
| மனம் கொத்தி மனிதர்கள் | 30.00 |
| இன்னொரு உரிமை | 27.00 |
| அவளுக்காக | 14.00 |

## இலக்கிய சிந்தனை - 12 பிரபல ஆசிரியர்கள்

| | |
|---|---|
| வெறுங்காவல் | 18.00 |
| தொகுப்பாசிரியர் : மகரம் | |
| வானதி சிறப்புச் சிறுகதைகள் (நான்கு பாகங்கள் I to IV) | 160.00 |
| பூதலூர் முத்து | |
| தங்கச் சுரங்கத்துக்கு ஒரு சாவி | 14.00 |
| நாகை. மனோகரன் | |
| காற்று நமக்கு நண்பன் | 8.00 |
| சு. கிருஷ்ணமூர்த்தி | |
| வங்காளப் பழமொழிகள் | 10.00 |
| குரும்பூர் குப்புசாமி | |
| பாரிசில் ஒரு பட்டிக்காட்டான் | 42.00 |
| சிவசங்கரி | |
| ஆஹா அரபுநாடுகள் (பயண நூல்) | 20.00 |

★ தேவையான பிரதிகளை வி.பி.பி.யில் பெற கடிதம் எழுதுங்கள். வி.பி.பி. தபால் செலவு தனி. புத்தக வியாபாரிகளுக்கும், பள்ளி, கல்லூரி நூலகங்களுக்கும் தக்க கழிவு தரப்படும்.

விபரங்களுக்கு :

**வானதி பதிப்பகம்,**

13, தீனதயாளு தெரு, தி.நகர், சென்னை - 600 017.

போன் : 44 28 10

!! தங்கத்தைப் போல் நூறாயிரம் மடங்கு மதிப்பு வாய்ந்தது ரேடியம்.

!! மிக பலமான ஓசையினால் திடப் பொருள்கள் கூட துளைபட்டுப் போகும்.

!! ஐஸ் கட்டிகள் மீது உப்பைத் தூவுவதால் அதன் குளிர்ச்சி மேலும் அதிகரிக்கிறது. எனவே ஐஸ் வேகமாகக் கரைவது தவிர்க்கப்படுகிறது.

!! ஒரு வைரக் கல் அமிலத்தில் கூடக் கரையாது. மிக அதிகமான வெப்பத்தால் மட்டுமே வைரக்கற்களை அழிக்க முடியும்.

!! கரியமில வாயுவை உறைந்த நிலைக்குக் கொண்டு வரும் போது கிடைப்பதே dry ice. இதை இளக்கினால் திரவமாகாது; மீண்டும் வாயுவாகி விடும்.

!! மிக நீண்ட நேரத்துக்கு நீடித்த குத்துச் சண்டை பந்தயம் 1893 இல் நியூ ஆர்லீன்ஸில் நடைபெற்றது. ஆண்டி போவனும் ஜாக் பர்க்கும் 110 ரவுண்டுகள் சண்டையிட்டார்கள். ஏழு மணி 19 நிமிடங்களுக்கு நீடித்த இச்சண்டையை நடுவர் போதும் என நிறுத்தி, இருவருக்குமே வெற்றி தோல்வி இல்லை என அறிவித்தார்.






!! உலகின் மிகச் சிறிய தபால் தலைகள் 1863 - 1866 இல் பொலிவியாவில் வெளியிடப்பட்டன. 8X9.5 மில்லி மீட்டர் அளவே அவை இருந்தன.

!! உலகின் மிகப் பெரிய நூலகம் வாஷிங்டனில் உள்ளது. 1814 இல் பிரிட்டிஷ் ராணுவம் தாக்கிய போது இந்த நூலகத்தின் அத்தனை நூல்களும் எரிந்து போயின. பிறகு அமெரிக்க ஜனாதிபதி தாமஸ் ஜெஃபர்ஸன் தனது சொந்த நூலகத்தின் 6487 புத்தகங்களை இந்நூலகத்துக்கு நன்கொடையாக வழங்க, புனருத்தாரணம் பெற்றது. இப்போது 20 மில்லியன் புத்தகங்கள், பத்து மில்லியன் படங்கள் மற்றும் புகைப்படங்கள், நான்கு மில்லியன் அட்லஸ்கள் மற்றும் தேசப் படங்கள் அந்த நூலகத்தில் உள்ளன. 64 ஏக்கர் தரைப் பரப்பு உடைய மூன்று கட்டடங்களில் அமைந்துள்ளது இந்த நூலகம். புத்தக அலமாரிகளில் உள்ள தட்டுகளின் மொத்த நீளம் 853 கிலோ மீட்டர். இந்த நூலகம் பொது மக்கள் உபயோகத்துக்காகவே செயல்படுகிறது.

!! உலகிலேயே மிக அதிக தூரம் பறந்து செல்லும் பறவை ஆர்க்டிக் டெர்ன். இது ஆறு மாதங்களுக்கு ஒருமுறை 22,000 மைல்கள் பறந்து செல்கிறது. ஆர்க்டிக் பகுதியில் பகல் நிலவும் ஆறு மாதக் கோடைக்காலத்தில் அங்கேயுள்ள கடல்நீரில் மீன் பிடித்து வாழும் இப் பறவை, வட துருவத்தில் பகல் மாறி இரவே நிலவும் அடுத்த ஆறு மாத காலத்துக்குத் தென் துருவத்துக்குக் குடிபெயர்ந்து விடுகிறது! அப்போது அங்கே (தென் துருவத்தில்) கோடைக் காலம் தொடங்கியிருக்கும். ஆறு மாதங்கள் கழிந்து மீண்டும் வட துருவம் நோக்கிச் சளைக்காமல் பறக்கிறது ஆர்க்டிக் டெர்ன். ஆக ஆண்டொன்றுக்கு 44000 மைல் பறந்து, உலகைச் சுற்றி வருகிறது! அது இருட்டில் வசிப்பதே இல்லை!

!! கடலில் மிதக்கும் ஒரு கப்பலின் எடை பகலில் கூடுதலாகவும் இரவில் குறைவாகவும் இருக்கும்! இதற்குக் காரணம் சந்திரன். சந்திரனின் ஈர்ப்புச் சக்தி கடல் நீரைப் பாதிப்பதைக் காட்டிலும் அதிகமாகக் கப்பல் மீது செயல்படுகிறது. அதனால் கப்பலின் எடையும் குறைகிறது.

தொகுப்பு :

**உதய்லால்**

# 22,000 மைல் பறக்கும் அதிசயப் பறவை!



# சிவகாமியின் சபதம்

## முப்பத்தொன்பதாம் அத்தியாயம்

## வாதாபி தகனம்

மா மல்ல சக்கரவர்த்தி தமது கூடாரத்தின் வாசலில் நின்று மாபெரும் பல்லவ சைன்யம் வாதாபிக் கோட்டை மதிளை நெருங்கிச் செல்லும் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தார். தமது வாழ்நாளிலேயே மிக முக்கியமான சம்பவம் தம் கண் முன்னால் நடைபெறத் தொடங்கியிருக்கிறது என்பதை அவருடைய அந்தராத்மா அவருக்குச் சொல்லிக் கொண்டிருந்தது. அன்றிரவு நடக்கப் போகும் மகத்தான கோட்டைத் தாக்கு

அமரர் **கல்கி**

தலின் காரணமாக ஆயிரமாயிரம் வருஷங்கள் வரையில் அவருடைய பெயர் 'வாதாபி கொண்ட நரசிம்மன்' என்று சரித்திரத்தில் பிரசித்தி பெற்று விளங்கப் போகிறது.

ஆனால், அவர் எந்த நோக்கங் காரணமாக இந்த மகத்தான சைனியத்தைத் திரட்டிக் கொண்டு வந்தாரோ, அந்த நோக்கம் நிறைவேறுமா? சிவகாமிக்கு அவர் கொடுத்த வாக்குறுதி அன்றிரவோ மறுநாளோ நிறைவேறுவது நிச்சயம். மூன்று நாளைக்குள்ளே வாதாபிக் கோட்டை தகர்ந்து வாதாபி நகரம் பற்றி எரிவது நிச்சயம்.. ஆனால், அதைப் பார்ப்பதற்குச் சிவகாமி உயிரோடிருப்பாளா? ஆஹா! அந்தப் பாவி உயிரோடிருந்து வாதாபி எரியும் காட்சியைப் பார்த்துவிட்டு வெளியேறி வந்தால்தான் என்ன? அவளுடைய வாழ்க்கை பழைய ஆனந்த வாழ்க்கையாகப் போகிறதா? ஒருநாளும் இல்லை. அவளுடைய மனோராஜ்யமெல்லாம் ஒரு சிதைந்த கனவாகி விட்டது. ஒருவேளை அந்தச் சிதைந்த கனவிலே சிவகாமி சில சில சமயம் இன்பத்தைக் காணக்கூடும். தமக்கோ அதுகூடக் கிடையாது. தமது பிற்கால வாழ்க்கை ஒரு வறண்ட பாலைவனமாகவே இருக்கும். அந்த எல்லையற்ற நெடிய பாலைவனத்தில் கானல் நீரைத் தவிர வேறு குளிர்ச்சியான காட்சியே தென்படப் போவதில்லை!



இவ்விதச் சிந்தனைகளில் ஆழ்ந்திருந்த மாமல்லர், தம்மிடம் முடிவாக விடைபெற்றுச் சென்ற பரஞ்சோதி மீண்டும் வருவதைக் கண்டு சிறிது வியப்புற்றவராய், அவர் தம் அருகில் நெருங்கியதும், "சேனாதிபதி! ஏதாவது புதிய விசேஷம் உண்டா?" என்று கேட்டார்.

"ஆம், பிரபு! சத்ருக்னன் திரும்பி வந்தான்" என்று சேனாதிபதி கூறி, அவன் சொன்ன விஷயங்களைச் சுருக்கமாகத் தெரிவித்தார்.

எல்லாவற்றையும் கேட்ட மாமல்லர், "இந்தச் செய்திகள் காரணமாக நமது யோசனையில் ஏதேனும் மாறுதல் உண்டா?" என்று கேட்டார்.

"விசேஷமாக ஒன்றுமில்லை, பிரபு! ஆனால், கோட்டைத் தாக்குதலைக் கூடிய விரைவில் நடத்தவேண்டிய அவசியம் அதிகமாகிறது. எதிரில் பாயும் புலியைக் காட்டிலும் காலடியில் நெளிந்து ஓடும் பாம்பு அதிக அபாயம் உள்ளதல்லவா?"

"அப்படியானால் காபாலிகையின் கதையை நீர் நம்புகிறீரா? உமக்கு யுத்தச் சீட்டு அனுப்பியது புலிகேசி இல்லை. நாகநந்தி பிக்ஷுதான் என்று நினைக்கிறீரா? அப்படியானால் சிவகாமி தேவி பற்றிய கவலை அதிகமாகிறது. நானும் உங்களுடனே கோட்டைக்குள் இப்போதே வந்துவிடட்டுமா?"

"வேண்டாம், பிரபு! தாங்கள் இங்கே இருப்பதுதான் உசிதம் என்று கருதுகிறேன்."

எது எப்படிப் போனாலும் இந்தத் தடவை தளபதி பரஞ்சோதி சிவகாமி தேவியைத் தாமே முதலில் சந்திக்க வேண்டும் என்று தீர்மானித்திருந்தார். முன் தடவை மாமல்லர் சிவகாமியைச் சந்தித்துப் பேசியதன் விபரீத விளைவை அவர் மறந்துவிடவேயில்லை. அம்மாதிரி இம்முறை ஏற்படாமல் தடுப்பது தம் கடமையெனக் கருதினார்.

மாமல்லரும் பல காரணங்களினால் சிவகாமியை உடனே சந்திக்க விரும்பவில்லை. எனவே, அவர் பின்வருமாறு கூறினார் :

"அப்படியே ஆகட்டும், சேனாதிபதி! ஒரு விஷயத்தை மறந்துவிட வேண்டாம். புலியைவிடப் பாம்பு கொடியது என்று நீர் கூறியது முற்றும் உண்மை. நாகநந்தி விஷயத்தில் தாட்சண்யமே பார்க்க வேண்டாம். அந்தக் கள்ள பிக்ஷு உயிரோடிருக்கும் வரையில் இந்த வாழ்க்கையில் நம் இருவருக்கும் நிம்மதி கிடையாது. இதை மறக்க மாட்டீர் அல்லவா?"



''மறக்கமாட்டேன், பிரபு!''

இதற்குப் பிறகும் சேனாதிபதி தயங்கி நிற்பதைக் கண்டு மாமல்லர், ''இன்னும் ஏதாவது சொல்லுவதற்கு இருக்கிறதா?'' என்றார்.

பரஞ்சோதி, ஆம் இன்னும் ஒரே ஒரு விஷயம். மன்னிக்க வேண்டும். வாதாபி நகரை எரித்துவிட வேண்டும் என்ற கட்டளையில் மாறுதல் ஒன்றும் இல்லையே?'' என்று கேட்டார்.

''சேனாதிபதி! போதும்! இந்த நிமிஷமே நான் கோட்டை வாசலுக்குப் போகிறேன். இனி உம்மை நம்பிப் பயனில்லை. நீர் திருநீறு தரித்து ருத்ராட்சம் அணிந்து சிவ பஜனை செய்யச் செல்லும்!''

''பிரபு! திருநீறு தரித்த பெருமான் திரிபுரத்தையே எரித்தார். இந்த வாதாபியை எரிப்பது அவருக்குப் பெரிய காரியமில்லை. இன்று இரவே வாதாபி நகரம் பற்றி எரிவதைக் காண்பீர்கள்!''

''அப்படியானால் ஏன் இந்தத் தயக்கம், கேள்வி எல்லாம்?''

''தங்களுடைய விருப்பத்தை நிச்சயமாகத் தெரிந்து கொள்வதற்காகத்தான். கோட்டைக்குள் புகுந்தபிறகு நகரை எரிக்க வேண்டும் என்று தாங்கள் கட்டளையிட்டீர்கள். அதை மாற்றிச் செய்ய விரும்புகிறேன். முதலில், வாதாபி தகனம் ஆரம்பமாகப் போகிறது. வெளியிலிருந்தபடியே நெருப்புப் பந்தங்களை நகருக்குள் எறியும்படி கட்டளையிடப் போகிறேன்.''

''இதற்கு என்ன அவசியம்?''

''நகரத்துக்குள்ளேயிருந்து நம் வீரர்கள் கொண்டு வரும் பொருள்களில் பாதி அவரவர்களுக்கே சொந்தம் என்று சொல்லியிருக்கிறேன். ஆகையால், நகரம் பற்றி எரிவதைக் காணும்போது நம் வீரர்களின் வேகம் ஒன்றுக்குப் பத்து மடங்காகும். பிரபு! நாளைச் சூரியோதயத்துக்குள்ளே நான் இந்தக் கோட்டைக்குள்ளே பிரவேசித்தாக வேண்டும். அதற்குமேல் தாமதித்தால் சிவகாமி தேவியைக் காப்பாற்றுவது அசாத்தியமாகி விடலாம். சூரியோதயமாகும் சமயத்தில் தாங்களும் ஆயத்தமாயிருக்க வேண்டும். இன்று ஓரிரவு தூங்காமல் வாதாபி தகனத்தைப் பார்த்துக் கொண்டிருங்கள்!'' என்று சொல்லி விட்டுச் சக்கரவர்த்தியின் மறுமொழிக்குக் காத்திராமல் சேனாதிபதி விரைந்து சென்றார்.

சேனாதிபதி சொன்னபடியே அன்றிரவு நடுநிசி நேரத்தில் வாதாபி தகனம் ஆரம்பமாயிற்று. கோட்டை மதிளைச் சுற்றி ஆங்காங்கு பெரிய உயரமான தூக்கு மரங்கள் நிறுத்தப்பட்டன. அந்த மரங்களின் மீது ஏறி நின்று அதற்கென்று பயிற்சி செய்யப்பட்டிருந்த பல்லவ வீரர்கள், கொளுத்தப்பட்ட தீப்பந்தங்களையும் கந்தக வெடிகளையும் நகருக்குள் வீசி எறிந்தார்கள். தீப்பந்தங்கள் போகும்போதே காற்றினால் ஜுவாலை விட்டுக் கொண்டு சென்று விழுந்த இடங்களில் எல்லாம் குபீர் குபீர் என்று தீ மூட்டின. கந்தக வெடிகள் ஆங்காங்கு வெடித்து நெருப்பைப் பரப்பின.

அன்றிரவு மூன்றாம் ஜாமத்திற்குள் இலட்சோப இலட்சம் ஜனங்கள் வசித்த அந்த வாதாபி மாநகரத்தில் நாற்புறமும் தீ மூண்டு எரியத் தொடங்கியது.

அக்கினிதேவனுக்கு உதவி செய்ய வாயு பகவானும் வந்து சேர்ந்தார். மூண்டடித்த காற்றினால் தீயின் ஜுவாலைகள் குதித்துக் குதித்துப் பாய்ந்து வாதாபி நகரின் மாடமாளிகைகள் கூட கோபுரங்கள் எல்லாவற்

றையும் விரைந்து விழுங்கத் தொடங்கின.

தீயோடு புகையும் படலம் படலமாக எழுந்து எட்டுத் திசைகளையும் வானத்தையும் மறைத்தது.

அதே சமயத்தில் பல்லவ, பாண்டிய வீரர்கள் கோட்டையை நாற்புறமும் சூழ்ந்து கொண்டு மதிள் மீது ஏறிக்குதிக்க முயன்றார்கள். மதிள் மீதிருந்த சளுக்க வீரர்கள் அவர்களைத் தடுத்தார்கள். அவர்களுடைய வாளாலும் வேலாலும் அம்புகளாலும் தாக்கப்பட்டு ஆயிரமாயிரம் தமிழ் வீரர்கள் உயிரிழந்து விழுந்தார்கள். ஆயினும் சமுத்திரத்தில் பெருங்காற்று அடிக்கும்போது ஓர் அலைக்குப் பின்னால் இன்னோர் அலை இடைவிடாமல் வந்து கரையை மோதுவது போலத் தமிழ் வீரர்கள் மேலும் மேலும் வந்து கொண்டேயிருந்தார்கள்.

அதோடு கோட்டையின் நாலுபுறத்து வாசல்களும் பலமாகத் தாக்கப்பட்டன. ஏக காலத்தில் பத்துப் பன்னிரண்டு யானைகள் தங்கள் துதிக்கையினால் பிரம்மாண்டமான மரத் தூண்களையும் இரும்புலக்கைகளையும் தூக்கி ஆவேசமாகக் கோட்டை வாசல் கதவுகளின் மீது மோதியபோது அந்தக் கதவுகள் படார் படார் என்று தெறித்து முறிந்து விழுந்தன.

சேனாதிபதி பரஞ்சோதி சக்கரவர்த்தியிடம் கூறியவண்ணமே அன்றிரவு நாலாம் ஜாமம் முடியும் தறுவாயில் வாதாபிக் கோட்டை வாசல்களைத் தகர்த்த பல்லவ வீரர்கள், ஏற்கெனவே எரியத் தொடங்கியிருந்த வாதாபி நகருக்குள் பிரவேசித்தார்கள்.

கோட்டை மதிளைத் தாக்கிய பல்லவ வீரர்களும் நாற்புறத்திலும் உள்ளே குதிக்கத் தொடங்கிவிட்டார்கள்.

வாதாபி நகரம் தீக்கிரையாகும் இந்தச் சரித்திரப் பிரசித்தி பெற்ற சம்பவத்தைக் கீழ் வானத்தில் உதித்திருந்த விடி வெள்ளி கண் கொட்டாமல் பார்த்து வியந்து கொண்டிருந்தது.

(தொடரும்)

## அருள்வாக்கு

தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்கிற நாலில் தர்மத்துக்கு அடுத்தது அர்த்தம். 'அர்த்தம்' என்பதற்கு இங்கே அர்த்தம், நடைமுறை வாழ்க்கை நடத்துவதற்குப் பிரயோஜனமாகிற பொருட்கள் என்பதே. வாழ்க்கை நடப்பதற்கு வீடு, வஸ்திரம், ஆஹார தானியம் முதலிய என்னவெல்லாம் வாங்குகிறோமோ அவையெல்லாம் 'அர்த்தத்'தில் சேர்ந்தவைதான். இப்படி வாங்குவதற்காக நாம் ஸம்பாதிக்கிற பணத்துக்கும் 'அர்த்தம்' என்று பெயர். நடைமுறை வாழ்க்கை வாழ்ந்து என்றைக்கோ ஒரு நாள் செத்துப் போய் விட்டு, மறுபடி இதே மாதிரி பிறந்து கொண்டிருப்பதற்கே இந்த ''அர்த்தம்'' என்று ஆக்கிக் கொண்டு விட்டோமானால், அப்போது



அது அனர்த்தந்தான். ''அர்த்தம் அநர்த்தம் பாவய நித்யம்'' என்பதாக இந்த உண்மையைத்தான் நினைவூட்டிக் கொள்ளும்படி ஆசார்யாள் 'பஜ கோவிந்த'த்தில் உபதேசித்திருக்கிறார். இதில்லாவிட்டால் வாழ முடியவில்லை; ஆத்மாவை, பரமாத்மாவைத் தெரிந்து கொள்வதற்காக எல்லாரும் ஸந்நியாஸியாகப் போய் விட்டால் யார் அவர்களுக்கு பிக்ஷை பண்ணுவது? அதனால் ஸம்பாதித்துத்தான் ஆக வேண்டும் என்பதற்காகவே 'அர்த்த'த்தில் ஈடுபட வேண்டும். ஸாதாரண மநுஷ்யர்களாக இருக்கப்பட்டவர்கள் எல்லாருக்கும் இருக்கக்கூடிய சில ஆசைகளையும் மிஞ்சிப் போகும்படி விடாமல், அந்த அந்த ஆசைகளின் பூர்த்திக்காகவும் ''அர்த்த''த்தை நாடிச் சேர்த்துக் கொள்ளத்தான் வேண்டும். இங்கே 'அர்த்தம்' என்பது அதற்கு அடுத்ததாக வரும் 'காம'த்துடன் சேர்கிறது. ஆனால் அதோடேயே நின்று விடக் கூடாது; முடிவாக உள்ள புருஷார்த்தமான 'மோக்ஷத்'தை மறந்து 'அர்த்தம்' என்பதிலேயே தலைதெறிக்கப் போய் விழப்படாது. எனவே இதற்கெல்லாம் அடிப்படையாக முதலில் வரும் 'தர்ம'த்தில் ஆரம்பத்திலிருந்தே பிடிப்பு இருக்க வேண்டும்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

# அன்புள்ள அலமு அத்தை,

நீ லெட்டர்ல எழுதினதையெல்லாம் அதான் ஸாடிலைட் பற்றி... என் ஃப்ரெண்ட்ஸ்கிட்டே சொன்னேன். பேசாம நீயே எங்க ஸயன்ஸ் டீச்சரா வந்திருக்கலாம்னு கிச்சா சொன்னான். கரெக்ட்தான்.

ஆனால் எல்லா ஃப்ரெண்ட்ஸுக்கும் என்னை மாதிரியே சந்தேகம்... ஸாடிலைட்லேருந்து எப்படி பூமிக்கு போட்டோவெல்லாம் வரும்? புயல் அடிச்சா ஸாட்டிலைட் நனைஞ்சு போய் ரிப்பேர் ஆயிடாதா...? இப்படியெல்லாம் கேட்க ஆரம்பிச்சாங்க. உடனே கிச்சா என்ன சொன்னான் தெரியுமா? இங்கேயிருந்து ராக்கெட்ல போஸ்ட்மேன் மாதிரி ஒருத்தர் போய் ஸாடிலைட் எடுக்கிற போட்டோவையெல்லாம் வாங்கிட்டு வருவார்னான்! அவன் எப்பவுமே இப்படித்தான் - ஜோரா ரீல் விடுவான்.

அப்புறமா எல்லாருமா சேர்ந்து அப்பாகிட்டே போய்க் கேட்டோம். அவர் ரொம்ப ஈஸியா சொல்லிக் குடுத்தாரு...

'டெல்லியில படிக்கற நியூஸும் ஆஸ்திரேலியாவுல ஆடற கிரிக்கெட்டும் நம்ம வீட்டு டீ.வி.யில எப்படி தெரியுது...?'னு கேட்டார். அப்புறம் அவரே சொன்னார். எந்தப் படத்தை ஒரு இடத்துலேருந்து இன்னொரு இடத்துக்கு அனுப்பணுமோ அதை எலக்ட்ரானிக் குழாய் உதவியுடன் சின்னச் சின்ன புள்ளிகளாகப் பிரிச்சுடுவாங்களாம். அப்படி பிரிச்ச புள்ளிகளை வானவெளி மூலமா அனுப்பலாமாம். அது சரியான இடத்துக்கு வந்து சேர்ந்ததும் அங்கே இருக்கிற ரொம்ப 'புத்திசாலியான' எலெக்ட்ரானிக் கருவிகள் அதைத் திரும்பவும் படமாக்கிடுமாம். கேட்கவே ரொம்ப ஆச்சரியமா இருந்தது. 'மாஜிக் மாதிரி இருக்கே'ன்னு சொன்னோம்.




இன்னும் பெரிய கிளாஸுக்குப் போனா, இன்னும் நிறைய 'மாஜிக்' புரியும்னு சொன்னார் அப்பா. பப்லுவுக்குத்தான் எதுவுமே புரியலை. ஆனாலும் புரிஞ்ச மாதிரி காமிச்சுக்கிட்டா.

ஸாடிலைட் மழையில நனையாதான்னு கிச்சாதான் ஞாபகமா அப்பாகிட்டே கேட்டான். வானத்துல ரொம்ப உயரமாப் போயிட்டா காற்று, மேகம், எதுவுமே இருக்காதுன்னு அப்பா சொன்னார். அதனாலே அங்கே புயல், மழை எதுவுமே தெரியாதாம்.

இவ்வளவு நாளா, பெரியவனாகி பைலட் ஆகணும்னுதான் இருந்தேன். ஆனா இப்போலேருந்து எனக்கு ராக்கெட்ல போகிற ஆஸ்ட்ரனாட் ஆகணும்னு ஆசையாயிருக்கு அத்தை...

அன்புள்ள,

அருண்

# அரியர்ஸ் போய்



சென்ற மாதம் வாராது வந்த அரியர்ஸ் பணத்தால் தியாகுவுக்குத் தலைவலி வந்தது இப்படித்தான் :

மனைவி மல்லிகாவுக்கும், தங்கை வினிதாவுக்கும் எதிர்பாராத சந்தோஷத்தைக் கொடுக்க, இருவருக்கும் புடைவை எடுத்துக் கொண்டு வீட்டுக்குள் நுழைந்த தியாகுவின் முகம், அடுத்த அரைமணி நேரத்தில் பார்லிலோனா சென்று திரும்பிய இந்திய வீரன் போல் ஆகி விட்டது.

''ஏன் அண்ணா! எனக்கும் அண்ணி புடைவை போல ப்ளைனா எடுத்திருக்கலாமே! இப்பவெல்லாம் என்னை மாதிரி யங்ஸ்டர்ஸ், எல்லாம் அப்படித்தான் கட்றாங்க. அண்ணி புடைவைதான் காகக்கு ஏத்த மாதிரி சூப்பரா இருக்கு'' என்று கூறி விட்டு, புழக்கடைப் பக்கம் நகர்ந்த வினிதாவின் முகம் ஒரு முழத்தில் இருந்தது.

மல்லிகாவின் புடைவையை விட வினிதாவின் புடைவை இருபது ரூபாய் குறைவாகப் போனதே அதற்குக் காரணம்.

தங்கை அளித்த ஊசிக்குத்தலின் வலி குறைவதற்குள் மனைவியின் இடிதாக்குதல் ஆரம்பித்தது.

''ஏங்க! நீங்க புடைவை எடுக்கவேன்னு யாருங்க அழுதாங்க? ஏன் இப்படி கிழவி கட்ற புடைவையெல்லாம் எடுத்துக்கிட்டு வந்து கழுத்த அறுக்கறீங்க. தங்கச்சிகாரிக்கு மட்டும் நிதானமா செலக்ட் பண்ணத் தெரியுது. பொண்டாட்டி காரிக்கு மட்டும் ஏதோ கடனுக்கு! என்ன இருந்தாலும் அவ பாச மலராச்சே...!'' என நீட்டி முழக்கியவள், வினிதா வரும் ஓசை கேட்கவே, ''உங்களை அப்புறம் பேசிக்கறேன்'' என்று சொல்லி விட்டு அடுப்பங்கரைக்குள் நுழைந்து கொண்டாள்.

மனைவிக்கும், தங்கைக்கும் எதிர்பாராத மகிழ்ச்சியைக் கொடுக்கப் போய், எதிர்பாராத விதமாக தனது மகிழ்ச்சியும் புஸ்வாணமாகி, வீட்டில் சரவெடிகள் வெடிக்கும் எனச் சற்றும் நினைக்காத தியாகு, வினிதா ஹிந்தி கிளாஸ் போனதும் மெள்ள அடுப்பங்கரைக்குள் நுழைந்தான்.

''மல்லி! ஒரு நல்ல யோசனை. உன் புடைவையை வினிக்கும், வினி புடைவையை உனக்கும் மாற்றிக் கொள்ளலாமே?''

''நல்லா இருக்கே நீங்க சொல்றது. கல்யாணம் ஆகி முதல் முதலா இப்பத்தான் புடைவன்னு எடுத்துத் தந்திருக்கீங்க. அதை உங்க பாசமலருக்காக உடனே மாத்திக்கணுமாக்கும்!''

''சரி சரி எப்படியாவது தொலை. நீ நனையவும் மாட்டே, காயவும் மாட்டே'' என்று சலித்துக் கொண்டே நகர்ந்தான் தியாகு.

வினி வந்த பிறகு, ''அடுத்தமாதம் தீபாவளி போனஸ் வரும். அதில் தீபாவளிக்கு ஆளுக்கு ஒரு புடைவை எடுத்துக் கொள்ளுங்கள். நீங்களே செலக்ட் பண்ணிக்கங்க'' என்று இருவரையும் சமாதானப்படுத்தினான் தியாகு. அவர்கள் முகமும் ஒருவாறு நார்மலுக்கு வர, தன் இரட்டைத் தலைவலிக்கு அமிர் தாஞ்சன் பூசிக் கொண்டது போலிருந்தது அவனுக்கு.

இன்று போனஸ்.



''ஏங்க! அடுத்த மாசம் என் தங்கச்சி கல்யாணம் வருதே... அதனால போனஸ் பணத்தில் இரண்டு புடைவையா வாங்கிக் கொடுத்தீங்கன்னா நல்லாயிருக்கும்'' என்றவாறே தியாகுவின் காலரைச் சரிசெய்து விட்டாள் மல்லிகா.

''இல்லை மல்லி. ஆளுக்கு ஒரு புடைவைதான். இன்னும் மீதி செலவெல்லாம் வேற இருக்கே'' என்று சொல்லிவிட்டு வினிதாவையும் அழைத்து ஆளுக்கு முந்நூற்று ஐம்பது ரூபாயைக் கொடுத்துவிட்டு ஆபீஸ் புறப்பட்டவனை, தங்கையின் குரல் தடுத்து நிறுத்தியது.

''அண்ணா! ஆபீஸ் முடிஞ்சதும் நேரா குமரன் வந்தீங்கன்னா நாம ரெண்டு பேருமே செலக்ட் பண்ணலாம் என்றாள் வினி.

''முடிந்தால் வரேம்மா'' என்றதும் பல்லவனைப் பிடிக்கப் பறந்தான் வினி.

''ஏங்க!''

# போனஸ் வந்தது...



ஜெனிஜா சேகரன்



தையல்காரர் : என் மகனைக் கடத்திக்கிட்டுப் போன ஆசாமி கடிதம் எழுதியிருக்கான் சார்!

போலீஸ் அதிகாரி : என்னவென்று?

தையல்காரர் : 1991 தீபாவளிக்குத் தைக்கக் கொடுத்த என் பேண்ட் ஷர்ட்டைத் தைத்துக் கொடுத்தால்தான் உன் மகனை விடுதலை செய்வேன்னு!

- உ. ராஜாஜி

மல்லிகாவின் அவசரக் குரல் தியாகுவை ரிவர்ஸ் கீர்போட்டு இழுத்தது...

''ஏங்க! நான் நல்லியில்தான் எடுக்கப் போறேன். 'முடிந்தால்' வர்றீங்களா?'' என்று 'முடிந்தாலு'க்கு அதிக அழுத்தத்தைக் கொடுத்தாள்.

''நான் எங்கேயும் வரலே. ஆளை விடுங் கடி'' என்று கத்த வேண்டும் போலிருந்தது தியாகுவுக்கு. மாறாக ஒருமுறை மல்லிகா வைக் கோபமாகப் பார்த்துவிட்டு பஸ் ஸ்டாப்பை நோக்கி ஓடினான் தியாகு.

''என்ன தியாகு; வேலை ரொம்ப மும்முரமா நடக்குது போலிருக்கு?''

மாலை ஆறு மணி வரை ஃபைலில் மூழ்கி இருந்த தியாகுவை அக்கௌண்டன்ட் மாதவ னின் குரல் நிமிரச் செய்தது.

''தியாகு! தலை தீபாவளிக்கு என் மாப் பிள்ளைக்கு குமரன்ல போய் டிரஸ் எடுக்க ணும். நீங்க போடற டிசைன்ஸ் நல்லாருக்கு. அதனால நீங்க வந்து செலக்ட் பண்ணி உதவணும்... போகலாமா'' என்றார்.

தியாகுவுக்குத் தர்மசங்கடமாக இருந்தது. ''நாளைக்கு போகலாமே சார்'' என்றான்.

''இல்லை தியாகு. தைச்சு வாங்க லேட் ஆயிடும்.''

''அப்படின்னா மவுண்ட் ரோட்ல ஏதா வது கடைக்குப் போவமே ஸார்.''

''மவுண்ட் ரோட் கடைன்னா கைவிட்டுக் காசு தரணுமே! எனக்கு இன்றோடு குமரனில் பரிசுக் கூப்பன் முடிகிறது.''

தியாகு நெளிந்தான். வேறு வழியில்லை. மாதவனால் அவனுக்குச் சில காரியங்கள் நடந்தாக வேண்டும்.

குமரனுக்குச் சென்று இறங்கும் போது மணி ஏழுக்கு மேல் ஆகிவிட்டது.

வாசலிலேயே வினிதா தோழி ரீட்டா வுடன் நின்றிருந்தாள்.

''என்னண்ணா! ஆறு மணிக்கு வரச் சொன்னா இப்ப வர்றீங்களே! நானும் ரீட்டா வுமே செலக்ட் பண்ணிட்டோம்'' என்று இரண்டு புடைவைகளை நீட்டினாள்.

''ஏதும்மா இரண்டு புடைவை? இன் னொன்று ரீட்டாவுடையதா?'' என்றான் தியாகு.

''இல்லண்ணா! நீங்க கொடுத்த பணத் தில் ஒண்ணு இன்னொண்ணு என் சேமிப்பில் எடுத்தது'' என்று வினி கூறியதும் தன் மனைவியின் 'கருணை முகம்' நினைவுக்கு வந்தது. சொல்லி வைத்தாற்போல் மல்லிகா வும் ஆட்டோவிலிருந்து இறங்கினாள்.

''அண்ணி! என் புடைவைங்களைப் பாருங்க. எப்படி என் செலக்ஷன்?'' என இரண்டு புடைவைகளையும் வினி மல்லிகா விடம் கொடுக்க, தியாகுவின் முகம் அஷ்ட கோணலாகி வழிந்தது. மல்லிகாவின் சூரிய தரிசனத்தின் சூடு தியாகுவைச் சுட ஆரம் பித்தது.

'நான் கூப்பிட்டதற்கு வர முடிய வில்லை. பாசமலருக்கு செலக்ஷன் செய்ய வந்துட்டீங்களா? இதிலே அவளுக்கு இரண்டு புடைவை வேறா' என்று பார்வையிலேயே பேசி அவனுக்கு மட்டும் தெரியும்படி பல் லைக் கடித்தவள், 'விருட்'டென்று ஆட்டோ வில் புகுந்து கொண்டாள்.

வினியும் விடை பெற்றுக் கொண்டாள்.

அரியர்ஸ் தந்து விட்டுப் போன தலை வலிக்கு, போனஸ் மருந்து தடவும் எனப் பார்த்தால் அது இருகுவலியைத் தந்து விட்டதே என எண்ணியபடியே தியாகு அருகிலிருந்த மெடிக்கல் ஷாப்பில் நுழைந்து ''இரண்டு தலைவலி மாத்திரை, ஒரு அமிர் தாஞ்சன்'' என்றான்.

ஒன்றும் புரியாமல் தியாகுவைப் பரிதாப மாகப் பார்த்தார் மாதவன்.



'' 'கட்-அவுட்'டுக்குத் தடை விதிக்கக் கூடாதுன்னு ஒருத்தர் 'ஸ்டே' வாங்கியிருக்காராம்...!''

''எதுக்கு...?''

''அவர் எழுதி அனுப்பின கட்-அவுட் ஜோக்ஸ் ஏமெட்டு பிரசுரமாக வேண்டியிருக்காம்...!''

- சீர்காழி வி. ரேவதி



# பாலம்

●● AMIE (Mechanical Engineering) முடித்து விட்டேன். GATE எழுதலாம் என்று இருக்கிறேன். இருவர் மூவராகச் சேர்ந்து ஒரே நோட்ஸ் வாங்கிப் படித்தால் செலவும் குறையும்; சந்தேகங்களும் விலகும். எனவே, மதுரையில் GATE-1993 (Mechanical Engineering) எழுத விருப்பமுள்ளவர்கள் தொடர்பு கொள்க.

*- வீ. கர்ணன்,*
*20, கிருஷ்ணா பாளையம் முதல் தெரு,*
*ஆரப்பாளையம் குறுக்குச் சாலை,*
*மதுரை - 625 010*

●● பல வருடங்களாக ட்ரைஜெமினல் நியூரால்ஜியா என்ற நரம்பு வலியால் (வலது பக்க முகத்தில்) அவதிப்படுகிறேன். பலவித வைத்திய முறைகளையும் கையாண்டு பார்த்தும் பயனில்லை. இந்த வலியால் அவதிப்பட்டுப் பூரணமாகக் குணமடைந்த நேயர்கள் யாரேனும் இருந்தால் அவர்கள் கையாண்ட வைத்தியம் பற்றித் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

*- கே. சுப்பிரமணியம்,*
*7, சத்ய தீப்,*
*அம்பேத்கார் ரோடு,*
*முலுண்ட், பம்பாய் - 400 080.*

●● "புளோ மோல்டிங்" பற்றிய பயிற்சி பெற விரும்புகிறேன். யாராவது அளிக்க இயலுமா?

*- எஸ். எம். கோபால்,*
*19/10 7வது கிராஸ்,*
*மஞ்சுநாத நகர்,*
*பெங்களூர் - 23.*

●● மிளகாய்த் தூள், தனியாத் தூள், மசாலாத் தூள், மஞ்சள் தூள் போன்ற சமையல் பொடிகள் விற்பதில் நல்ல அனுபவம். என் திறமையால் நிறைய ஆர்டர்கள் வாங்கித் தர முடியும். தேவைப்படுவோர் தொடர்பு கொள்க.

*- சோ. ம. சிதம்பரம்,*
*வி. கரு. சித. இல்லம்,*
*6, மு. ராம. கி. லெ. தெரு,*
*தேவகோட்டை - 623 302.*

●● அமெச்சூர் ரேடியோ ஆபரேட்டர் (HAM) ஆக விருப்பம். லைசென்ஸ் பெறுவது எப்படி? என்ன சாதனங்கள் தேவை? செலவு எவ்வளவு? HAM நண்பர்கள் தெரியப் படுத்தினால் நல்லது.

*- ஆ. சுப்ரமணியன்,*
*11, வள்ளி இல்லம்,*
*கவிதா நகர், மகராஜ நகர் (அ)*
*திருநெல்வேலி - 627 011.*

●● பி.ஈ. (மெகானிக்கல்) இறுதி யாண்டு படிக்கிறேன். 'பிராஜெக்ட் ஒர்க்', செய்ய எனக்கு 'வேல்யூ இன்ஜினீரிங் பற்றித் தெரிந்து கொள்வது அவசியம். இது குறித்துப் புத்தகமோ அல்லது வேறுவித தகவல்களோ தந்து உதவினால் படித்து விட்டுத் திருப்பிக் கொடுத்து விடுகிறேன்.

*- ஆர். ஸ்ரீனிவாசன்,*
*D-8, பி.ஏ. ஃப்ளாட்ஸ்,*
*43, வெங்கடகிருஷ்ணா சாலை,*
*மந்தவெளி, சென்னை - 28.*

●● சுமார் ஐந்நூறுக்கும் மேற்பட்ட நாவல்கள் உள்ளன. நூலகங்கள் வைத்திருப்போர் அணுகவும். நல்ல விலைக்குத் தரத் தயார்.

*- வீ. முருகன்,*
*4, ஆரிமுத்து ஆச்சாரி தெரு,*
*திருவல்லிக்கேணி, சென்னை - 5.*

●● "துக்காராம்" திரைப்படத்தில் முசிறி சுப்பிரமணிய அய்யர் பாடியுள்ள பாடல்களின் ரிகார்டுகளோ அல்லது காஸெட் பதிவுகளோ தேவை.

*- பி. எஸ். தேசிகன்,*
*D-57, முதல் கிராஸ்,*
*நியூஃபேர்லேண்ட்ஸ்,*
*சேலம் - 636 016.*

●● நான் எழுதிய சிறுகதை ஒன்று 24.5.92 "தமிழன்" நாளிதழில் வெளியானது. அதை வைத்திருக்கக் கூடியவர்கள் தயவு செய்து அனுப்பினால் தபால் செலவு ஏற்றுக் கொள்கிறேன்.

*- கமலா கந்தசாமி,*
*14 C, சாமியப்பா நகர்,*
*திருத்துறைப்பூண்டி - 614 713.*

(பாலம் மூலம் இணையும் வாசகர்களின் வெற்றி தோல்விகளுக்குக் கல்கி நிறுவனம் பொறுப்பேற்க இயலாது.)

பெண், மாப்பிள்ளை, சம்பந்திகள் ஊருக்குக் கிளம்புகிறார்கள். விஜயலக்ஷ்மியின் தகப்பனார் டாக்ஸி அழைத்து வரப் போயிருக்கிறார். மத்தியானத்திலிருந்தே விஜயலக்ஷ்மியின் முகம் சரியாக இல்லை. இத்தனை நேரம் அவள் உள்ளே என்ன செய்து கொண்டிருக்கிறாள்? இரயிலுக்குச் சாப்பாடு ஏற்பாடுகள் முடிந்து விஜயலக்ஷ்மியின் தாயார் அறைக் கதவைத் தட்டுகிறாள். வெளியே டாக்ஸி வந்து நிற்கிறது. விஷயத்தைக் கேட்டதும் அவள் கணவர் முகமே மாறி விடுகிறது. இரே சம்பந்திகள்



4

டீ.வே.சிவகுமார்

டாக்ஸியில் லக்கேஜ் ஏற்றிக் கொண்டிருக்கிறார்கள். மூடிய கதவை மோதித் திறக்க விஜயலக்ஷ்மியின் தகப்பனார் பின்னுக்கு நகர்கிறார்.

கதவு திறக்கிறது. வெட்கத்தில் ஓடி வந்து விஜயலக்ஷ்மி, தாயாரை அணைத்துக் கொள்கிறாள். முகத்தில் ஒரு காரியம் முடிந்த திருப்தியுடன் வெளிப்பட்டு லக்ஷ்மி நாராயணன், மாமனாரைக் கேட்கிறான்.

''போகலாமா?''

சென்னையில் ஒரு வழியாய்க் கல்யாண அமர்க்களங்கள் முடிந்து லக்ஷ்மிநாராயணனின் அப்பாவும், அம்மாவும் சொந்த ஊர் மதுரைக்குத் திரும்புகிறார்கள்.

புறநகரில் காய்கறி கடை. குடித்தனம் வைத்து வாழ்வில் முதல் முறையாகக் காய்கறி வாங்க வந்த லக்ஷ்மிநாராயணனை ரொம்பவும் தெரிந்தவன் போல் கடைக்காரன் வரவேற்க, அவன் எதுவும் புரியாமல் விழிக்கிறான்.

''அட என்ன சார் அதுக்குள்ள மறந்துட்டீங்க. எப்பவும் சார் தமாஷ்தான்'' என்றெல்லாம் பலவாறு அதிரடியாய்ப் பேசி, ஏகப்பட்ட காய்கறிகளை லக்ஷ்மிநாராயணன் தலையில் கடைக்காரன் கட்டி விடுகிறான்.

இரயில் தண்டவாளம் ஓடுகிற செம்மண் மேடு. கடற்கரையிலிருந்து தெரிகிற கப்பல் போல் முதலில் தலை தெரிந்து, கண்டபடி காய்கறி சுமந்து லக்ஷ்மிநாராயணன் வெளிப்படுகிறான். தண்டவாளத்தில் இரயில் ஒன்று வந்து கொண்டிருக்கிறது. வெயில் முகத்தில் அடித்து, வியர்வையில் மூக்குக் கண்ணாடி நழுவியது குறித்து எதுவும் செய்ய முடியாமல் இரண்டு கைகளிலும் பைகள் சுமந்து நடக் நடக்

## [illegible] கனவுகள்

கென்று இரயில் பெட்டிகள் கடந்து செல்ல லக்ஷ்மிநாராயணன் காத்திருக்கிறான். மனத்தில் சிறுவயதில் திருஷ்டிப்பட்டு விடக் கூடாதேயென்று தன் தாயார் தன்னை மறைத்து உட்கார வைத்து உணவு பரிமாறியதும், அந்தத் தாயாரிடமேகூட சோற்றுத் தட்டைப் பிடிவாதமாய்த் தள்ளி விட்டு எழுந்து கொண்ட சந்தர்ப்பங்களும் நிழலாடுகின்றன. இரயில் கடந்து செல்கிறது. லக்ஷ்மிநாராயணன் இருப்புப் பாதையைக் கடக்கிறான்.

வீட்டில் நண்பர்கள் காத்திருக்கிறார்கள். அலுவலகத்தில் சிறிய யூனியன் பிரச்னை. விஷயம் அனாவசியமாய்ப் பெரியதாகிக் கொண்டிருக்கிறது. லக்ஷ்மி நாராயணன் வேலையில் சேர இன்னும் பத்து நாட்கள் இருக்கிறது. அதில் ஒரு வாரம் பெங்களூர், மைசூர் போகலாமென்றிருக்கிறான். எல்லா விவரங்களும் அவர்களுக்குத் தெரிந்ததுதான். ஆனாலும் அவன் உடனடியாய் வேலைக்குச் சேர்வது யூனியனுக்கு நல்லது. அவன் நேரே வந்து ஒரு அதட்டல் போட்டால்தான் விஷயங்கள் சரியாகும். அதுதான் அவர்கள் வந்திருக்கிறார்கள்.

''யூனியன் பிராப்ளம். யூனியன் உடனே ட்யூட்டிலே நான் உடனே ட்யூட்டிலே சேரணும். அதனால ஹனிமூனுக்கு பெங்களூர் ட்ரிப் அடிபடும். என்ன சொல்றே? பரவாயில்லையா?''

''ஒரு நிமிஷம்...''

தன் அல்ப கமிட்டி மெம்பர், அந்தஸ்துக்கு நண்பர்கள் கொடுக்கிற மரியாதையில் நெகிழ்ந்தவனாக் லக்ஷ்மிநாராயணன் சமையலறையில் அவர்களுக்குக் காப்பி கொடுக்கும்படி விஜயலக்ஷ்மியைக் கேட்கிறான். அவள் இதற்குள் தயாராய் இருக்கிற தட்டை அவனிடம் நீட்டுகிறாள்.

''உன்னை மாதிரி நாலு பொண்டாட்டி... வேணாம், நீ ஒருத்தியே போதும், அமைஞ்சிட்டா வாழ்க்கையில மனுஷனுக்குக் கவலையே கிடையாது.''

காப்பித் தட்டை வாங்கி மேடையில் வைத்து லக்ஷ்மிநாராயணன் புது மனைவியிடம் சில்லறை விஷமம் ஒன்று செய்கிறான்.

''டேய் லக்ஷ்மி. அங்க என்னடா பண்றே?''

நண்பர்களில் ஒருவன் ஜூகித்துக் குரல் கொடுக்க, வரவேற்பறையில் மற்றவர்கள் சிரிக்கிறார்கள்.

"ஏய், யூனியன் பிராப்ளம். நான் உடனே ட்யூட்டிலே சேரணும். அதனால ஹனிமூனுக்கு பெங்களூர் ட்ரிப் அடிபடும். என்ன சொல்றே? பரவாயில்லையா?"

முகத்தில் சிரிப்பு மாறாமல் விஜய லக்ஷ்மி பதில் சொல்கிறாள்.

"போனாலும் பரவாயில்லே. போகாட்டாலும் பரவாயில்லே."

"வெரிகுட். பொழைக்கக்குவே. அப்ப நான் உடனே ஆபீஸ் கிளம்பறேன். தைரியமா இரு. போரடிச்சா நவகோடி அம்மா இருக்காங்க. யாருக்குமே தராத அலமாரி சாவியை ஆணியிலே மாட்டியிருக்கேன். படம், கிடம் பாரு. முடிஞ்சா படி. வேற ஒண்ணும் இல்லியே? வரட்டுமா? சாயங்காலம் காப்பிப் பொடி வாங்கிட்டு வர்றேன். வேற ஏதாவது வேணும்னா சொல்லு. என்ன வேணுமா?"

கட கட என்று விளையாட்டாய், நினைத்த மாத்திரத்தில் - அவன் குரலில் அல்லாமல் சட்டென்று வேறொருவர் போல் சஞ்சாரிக்க எப்படித் தன் கணவரால் முடிகிறது என்று விஜயலக்ஷ்மி அதிசயித்து நிற்கிறாள். லக்ஷ்மிநாராயணனைப் பொறுத்த வரை அதிசயங்களுக்குப் பஞ்சமேயில்லை என்பதை அவள் நாள்பட, நாள்பட அறிவாள்.

கடற்கரை ஸ்டேஷன் எதிரே பலமாடி அலுவலகம்.

கரங்கப் பாதை கும்பலில் லக்ஷ்மிநாராயணனும், நண்பர்களும் ஏறி வருகிறார்கள்.

சரியாக மணி பத்து. அலுவலகத்தில் ஏற்கெனவே வந்திருக்கிற அனைவரும் ஆமைகள் போல் அவரவர் காகிதங்களிலிருந்து தலை நிமிர்த்திப் பார்க்க, ஒன்றே போல் உடையணிந்த லக்ஷ்மிநாராயணனும், நண்பர்களும் அவன் தலைமையில் அணிவகுத்துக் கேஷ் டிப்பார்ட்மெண்ட் கதவு திறந்து நுழைகிறார்கள்.

தள்ளுவண்டி ஒன்றில் பணப்பெட்டிகள் ஏற்றப்படுகின்றன. மேலாகக் கிரீடம் போல் ஒரு ரூபாய் நாணய மூட்டைகள், சிறிய அலுமினியப்பெட்டி என்று நிரம்பிய வண்டியை முன்னால் இரண்டு பியூன்கள் இழுத்து வர, பாலக்காட்டு அக்கவுண்டண்ட், வயதான பக்திமான் தலைமைக் கேஷியர் இருவரும் கையில் சாவியுடன் நடந்து வர, பக்கவாட்டில் நேப்பாளத்து பகதூர் துப்பாக்கியுடன் தொடர, நண்பர்கள் நடுவே வருகிற லக்ஷ்மிநாராயணன் ரேடியோ குரலில் வர்ணனை கொடுக்கிறான்.

"டைட்டில் போடுறப்பவே பின்னணில ஒப்பாரிக் குரல் கேட்குதே... ஏன்?"

"படம் தோல்வியடைஞ்சா புரொடியூசரோட நிலை என்னங்கிறத சிம்பாலிக்கா காட்டறாங்க!"

- அம்பை தேவா

"மறைந்த தலைவரின் பூத உடல் வைக்கப்பட்ட பீரங்கி வண்டி இதோ நகரத் துவங்குகிறது. இங்கிருந்து நான் பார்க்கிறேன். எங்கும் மக்கள் வெள்ளம். பெரியப்பா, பெரியப்பா என்று மறைந்த தலைவருக்குக் கண்ணீரஞ்சலி செலுத்துகிறார்கள்..."

பாலக்காட்டு அக்கவுண்டண்ட் திரும்பிப் பார்க்கிறார். அலுவலகத்தில் அவருக்குச் சித்தப்பா என்றும், உள்ளே மேனேஜருக்குப் பெரியப்பா என்றும் லக்ஷ்மிநாராயணன் பெயர் வைத்திருப்பது அவருக்கே தெரியும்.

"நீங்க போங்க சார்."

அக்கவுண்டண்ட் மேலே நடக்கிறார். கரண்ட் அக்கவுண்ட் மேஜையில் எவர்க்ரீன் வனஜா வெண்டை விரலில் கழுத்துச் சங்கிலி சுற்றி, தலை குனிந்து இரசித்துச் சிரித்ததில் உற்சாகம் கூடியவனாக லக்ஷ்மி நாராயணன் வர்ணனையைத் தொடர்கிறான்.

"இதோ ஊர்வலம் இறுதிக் கட்டத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறது. இவ்வளவு கூட்டத்தைப் பார்க்க மறைந்த தலைவர் உயிருடன் இல்லையே என்று ஏங்குகிற வண்ணம் மக்கள் வெள்ளம்."

பாலக்காட்டு அக்கவுண்டண்ட் லக்ஷ்மி நாராயணனைச் சற்று நேரம் கம்மாயிருக்கும்படி அபிநயிக்கிறார். "கேஷ் டிப்பார்ட்மெண்ட். அசந்தால் கையை விட்டுப் பணம் போய் விடும். இங்கே இவ்வளவு விளையாட்டுத் தனமாய் இருந்தால் எப்படி? புது மனைவி வந்த பிறகாவது ஆள் மாறியிருப்பாய் என்று பார்த்தால் அப்படியே வந்திருக்கிறாயே. மொத்தத்தில் நீ இங்கு இருக்க வேண்டியவனே இல்லை."

"டேய் கவனி. நீ விட்னஸ். நீ விட்னஸ். பயங்கர யூனியன் பிராப்ளம். என்னைப் பார்த்து கிளார்க் வேலைக்கு லாயக்கில்லேன்னுட்டாரு. வுடக் கூடாது. ஹெட் ஆபீஸ் வரைக்கும் போய், சித்தப்பாவை அங்குச்செட்டிப்பாளையம் மாத்தலே, என்



பேரு லக்ஷ்மிநாராயணன் கிடையாது.''

அத்தனை சொல்லியும் திருந்தாத கடுப்பில் முகம் கருங்கிய பாலக்காட்டு அக்கவுண்டண்ட் தன் இருக்கையில் அடிக்கிற டெலிபோனை எடுக்கப் போகிறார். நண்பர்கள் வேலையைப் பார்க்கப் போகிறார்கள். லக்ஷ்மிநாராயணன் கரண்ட் அக்கவுண்ட் வனஜாவைப் பார்க்கப் போகிறான்.

மணி பத்தே முக்கால். கரண்ட் அக்கவுண்ட் டிப்பார்ட்மெண்ட் ஸ்தம்பித்திருக்கிறது. அந்தப் பக்கமாய் நடந்து போகிறவர்களெல்லாம் நின்று கேட்க, லக்ஷ்மிநாராயணன் தன் புதுடில்லி தாஜ்மஹால் அனுபவங்களைச் சொல்லிக் கொண்டிருக்கிறான்.

''சே,மோசமான ஆளுங்கப்பா!''

கண்களை மூடிக் கொண்டு தோள்களைக் குலுக்கிக் கொள்கிறான்.

''அதுசரிப்பா லக்ஷ்மிநாராயணன். நாளைக்கு ஆபீஸ் பரீட்சை எழுதி பெரிய ஆபிசர் ஆயிட்டேனா வடக்கிலே கண்டிப்பா வேலை பார்த்தாகணுமே?''

''பரீட்சையா? நானா? ஹ. வேற ஆளப்பாரு. தமிழன் ஒரு நாளும் வடக்கே போகமாட்டான். வடக்கத்தியான் இங்க வர்றானா? வரமாட்டான். வந்தா வட்டிக்கடை வைப்பான்.''

அவுட்டுச் சிரிப்பில் அலுவலகம் கவனம் கலைகிறது. அக்கவுண்டண்ட் மேஜை மணியை அடிக்கிறார். யாரும் கவனிக்க வில்லை.

''லக்ஷ்மி!''

டெஸ்பாட்ச் லக்ஷ்மி திரும்பிப் பார்க்கிறாள்.

''உங்களையில்லே... அவன்... லக்ஷ்மி நாராயணன்.''

அக்கவுண்டண்ட் உரக்கக் கத்தியதில் அவரவர்களும் இருக்கைகளுக்குப் போகிறார்கள். லக்ஷ்மிநாராயணன் அக்கவுண்டண்ட் டேபிளுக்கு வருகிறான்.

''குட் மார்னிங் சார். கூப்பிட்டீங்களா?''

''மணி என்ன பார்த்தேளா? பத்தே முக்கால் ஆறது. இன்னமும் நீங்க சீட்டுக்குப் போகல்லை.''

''ஓ.''

''லக்ஷ்மிநாராயணன்!..... விளையாடாதீங்கோ. திஸ் ஈஸ் ஆபீஸ்.''

''ஆமா சார். ஸாரி சார்.''

''சீட்டுக்குப் போய் வேலையைப் பாருங்கோ. போங்கோ.''

''சார், பேனா இல்லை சார்.''

''பேனா கூட இல்லாம பின்னே எதுக்காக ஆபீஸ் வர்றீங்க? இந்தாங்க. டேக் இட்..''

அக்கவுண்டண்ட் தன் பேனாவை மேஜையில் வைக்கிறார்.

''வேணாம் சார்.''

''அட, எடுத்துக்கோப்பா.''

''ஐயோ! வேணாம் சார்.''

''ஏன்?''

கொதிப்புகளை அடக்கக் கற்றுப் புலனடங்கிய பாலக்காடு அக்கவுண்டண்ட் பொறுமையாய்க் கேட்க, லக்ஷ்மிநாராயணன் மேலே சொல்கிறான் :

''நான் கேவலம் கேஷியர் சார். பேனா இல்லாம வேலை செய்யலேன்னா பரவாயில்லே. ஆனா நீங்க அக்கவுண்டண்ட். எங்கிட்ட பேனாவைக் கொடுத்துட்டு வேலையில்லாம ஒரு அக்கவுண்டண்ட் கத்தினா பாக்கறவங்க என்ன சார் நெனைப்பாங்க?''

''நான் சொல்றதைக் கேளுங்க மிஸ்டர் லக்ஷ்மிநாராயணன். நீங்க இப்படி தொடர்ந்து விளையாட்டுத் தனமாயிருந்தா நான் மேனேஜரிடம் ரிப்போர்ட் பண்ண வேண்டியிருக்கும்.''

கடைசி ஆயுதமாக அக்கவுண்டண்ட் எச்சரிக்கை விடுத்துப் பார்க்கிறார்.

''மிஸ்டர் கிருஷ்ணமூர்த்தி. என் சர்வீஸ்ல நான் பாக்கற நாற்பத்தியேழாவது அக்கவுண்டண்ட் நீங்க. என் பின்னாடி யூனியன் இருக்கற வரைக்கும் நீங்க என்னை ஒண்ணுமே செய்யமுடியாது'' என்று பிரசித்தி பெற்ற அந்த வில்லனைப் போலவே சிரித்து லக்ஷ்மிநாராயணன் கதவு திறந்து கேஷ் டிப்பார்ட்மெண்ட் உள்ளே போகிறான்.

அங்கு நடந்தவற்றையெல்லாம் இரசித்துக் கவனித்து வாடிக்கையாளர் ஒருவர் கவுண்டருக்கு அந்தப் பக்கம் லக்ஷ்மிநாராயணனைக் காட்டி அவனைப் பற்றிய விவரங்கள் சேகரித்துக் கொண்டிருக்கிறார்.

பிரபல திரைப்பட இயக்குனர் விஸ்வநாத ரெட்டி.

(தொடரும்)



# பாண்டியன்

சின்னக் கடத்தல் கூட்டத்தைக் கண்டு பிடிக்க வரும் ஒரு போலீஸ் அதிகாரி அந்தக் கூட்டத்தினரால் அழிக்கப்பட்டு விட, அடுத்து வரும் அதிகாரி அந்தக் கொலைக்குக் காரணமானவர்களைக் கண்டுபிடித்து அழித்து விடுகிறார்.

இந்தக் கடுகளவு மையக் கருத்தைப் பதினேழு ரீல்களுக்கு நீட்டிச் சுவாரஸ்ய விறுவிறுப்பைக் கூட்ட முடிந்திருக்கிறது என்றால், அது தெளிவுபடுத்துவது இயக்குனர் எஸ். பி. முத்துராமனின் அனுபவ முதிர்ச்சியை.

சின்னச் சின்ன சஸ்பென்ஸ். அதில் யார், ஏன், எதனால், எப்படி என்கிற எதிர்பார்ப்புகளைக் கூட்டிக் கொண்டே போய்ப் பாத்திரங்களையும் பின்னணிகளையும் படிப்படியாகக் கட்டவிழச் செய்திருப்பதில் கதையைப் பின்னியிருக்கும் நூல் மிக மிக மெலிதாக இருந்தும் கூட விண் என முறுக்கேறி விடுகிறது.

ரஜினியின் இமேஜுக்கு முற்றிலும் பொருந்துகிற பாத்திரப் படைப்பு. அவர் தன்னைப் பற்றிய உண்மைகளை அக்காவிடம் வெளிப்படுத்த வேண்டிய கட்டாயச் சூழ்நிலைகளிலும் கூட அவரிடம் கருதி அடங்கிப் போய், பின்னர் அவனைக் காப்பாற்ற வேண்டிய ஒரு சிக்கலான தருணத்தில் உண்மையை வெளிப்படுத்திப் பொங்கியெழுவது கதையை நகர்த்திச் செல்ல உதவும் பரபரப்பான திருப்பம். அதற்கு மெருகு சேர்க்கும் புதிய வண்ணம் : அக்கிரமக்காரர்களுக்குத் துணை போகும் அரசியல்வாதிகளுக்கெதிரான போராட்டக் குரல்.

அவ்வப்போது தோன்றிக் கலகலப்பு ஏற்படுத்துகிறவர் குஷ்பு. பொங்கித் ததும்பும் உற்சாக வெள்ளம். ஆடலுக்கும் பாடலுக்கும் குறும்புத்தனங்களுக்கும் குறைவில்லை. படகில் இடம்பெறும் டூயட் பாடல படுககம்.

இதற்கு நேர்மாறாகப் போலீஸ் அதிகாரி ஜெயசுதா. நெஞ்சம் நிறையச் சோகம். நேர்மைப் பாதையிலிருந்து விலக மறுக்கும் கடமையுணர்வு. கலகலப்பு வெள்ளத்துக்கு நடுவில் அவருடைய கசந்து போன வாழ்க்கை வித்தியாசச் சுவை சேர்க்கும் பாகற்காய்.

கதையைப் பொறுத்தவரையில் மற்ற அனைவருமே கறிவேப்பிலைதான்.

யோசிப்பதற்கு இடம்தராத வேகம். போதும் என்கிற அளவுக்குப் பொழுது போக்கு.

- சி. ஆர். கே.

படத்தைத் தமிழய்யா
பாடமாக நடத்துகிறார்....

"அன்பு மாணாக்கர்களே, இன்றைய விமர்சன பாடத்தில் நாம் எடுத்துக் கொண்ட திரைப்படம் : தாய்மொழி! இதில் தாய் என்றால் அன்னை என்பதுவும், மொழி என்றால் அவர்தம் வார்த்தை எனவும் பொருள் கொள்ளலாம். இவ்விடத்து, தாய் என்கிற அன்னை என்கிற அம்மா என்கிற தாய் ஒரு கைம்பெண். அவரின் தனிமை துன்பம், சுற்றுப்புற ஏசுதல், சிறுமைந்தனின் கேள்விகள் என வேதனையுற்று சுயமரணம் எய்தி விடுகிறாள் அன்னை. சிறுவன் வளர்ந்து முரடனாக உருப்பெறுகிறான். எதெற்கெடுத்தாலும் அடி, உதை, குத்து... குத்து என்பது தமிழ்ச் சொல்லா, மணிப்பிரவாளமா என்பது பற்றி அடுத்த வகுப்பில். இங்கே பாடத்திற்கு வருவோம்... முரடனாகிய, கதையின் முக்கிய பாத்திரம் சரத்குமார், விசயகுமார் எனும் காவல் துறை அதிகாரியால் சாம, பேத, தான, தண்ட முறையால் புத்திமதி சொல்லப்பட்டு, திருந்தி மனிதனாகிறான். பழகின மீனவ நண்பர் செமினி கணேசு (அவரேதான் மாணவர்களே) அவர்களின் புதல்வியாக வரும் மோகினி என்கிற விதவைப் பெண்ணால் கவரப்பட்டு காதல் மலர்கிறது. வில்லனாக மரியதாசு என்கிற தீயசக்தி. அந்தத் தீய சக்தியால் என்னென்னவெல்லாம் பிரச்னைகள் அதை எப்படி கதைமாந்தன் வெல்கிறான், முடிவில் காதல் வெல்கிறது எனச் சொல்ல விரும்பி இருக்கிறார்கள்.

இந்த இடத்தில் மாணவர்களே! குழு, பெருந்தவறு புரிந்திருக்கிறது. தலைப்புக்கு நியாயம் இல்லை. திருந்தியவனை நல்ல காட்சி அமைத்து அன்பு வழியில் வெல்லும்படி வைக்காமல் ...முழுக்க முழுக்க மோதல் எனத் தடம் பிறழ்ந்து ஏமாற்றம் தான் மிகுகிறது. பாராட்ட விரும்பினால் அந்த அழகிய படப்பிடிப்புத் தளத்தையும், அம்மா இறந்தது தெரியாத சிறுவனின் நடிப்பையும், நடனக் குழுவின் துள்ளாட்டத்தையும், அண்ணார் சரத்குமாரின் போர் புரியும் திறத்தையும் பகரலாம். இசை வெகுகமார் என்பது உள்ளங்கை நெல்லிக் கனி. இயக்கம் புதியவர். சங்க காலத்தில் மத்சய பவ முனிபுங்கவரின்... ஆ! இது என்ன வகுப்பில் யாருமே இல்லை...?"

வெளியில் மாணவர்கள் :

"படமும் போரு, பாடமும் போரு மச்சி. எவன் குந்திகினு இருப்பான்."

- சுந்தர்ஜி



சென்னை, ஸ்டெல்லா மாரிஸ் கல்லூரியில் இந்திய நுண்கலைப் பிரிவில் பேராசிரியையாகப் பணியாற்றிய கௌரி நாயக், விடுமுறைக்காக ஆஸ்திரேலியா சென்றார். அங்கு ஒரு பல்கலைக் கழகத்தில் இந்திய நுண்கலை பயிற்றுவிக்க விண்ணப்பித்தார். அவர் விண்ணப்பம் ஏற்கப்பட்டு இன்று அப்பல்கலைக் கழகத்தில் ஒரு தனித்துறையைத் தலைமையேற்று நடத்தி வருகிறார்

# ஆஸ்திரேலியா: சில அதிசயங்கள்!

கௌரி நாயக்... அவரது அனுபவங்கள் :

நீண்ட கடற்கரையையுடைய நாடு என்பதால் ஆஸ்திரேலியா சுற்றுலாத் துறையில் நிறையக் கவனம் செலுத்துகிறது. அயல்நாட்டுப் பயணிகளைக்கவர 'டைவிங்'. 'ஸ்கீயிங்' போன்ற நீர் விளையாட்டுகளுக்கான வசதிகள் ஏற்பாடு செய்துள்ளார்கள். கடற்கரையோர நகரங்களில் நல்ல ஓட்டல்களை நிறுவி வருகிறார்கள். இதன் விளைவாக ஓட்டல் துறையில் படித்துப் பட்டம் பெற்றவர்களுக்கு இங்கே சிறந்த வேலை வாய்ப்புக்கள். சென்ற முறை நான் இந்தியாவிலிருந்து ஆஸ்திரேலியா திரும்புகையில் என்னுடன் ஓர் இளம் தம்பதி பயணம் செய்தனர். அவர்கள் கையில் இருந்ததோ இருபதே டாலர்கள். 'அதனாலென்ன! கேடரிங் பட்டம் கையில் இருக்கிறதே' என நம்பிக்கையுடன் சொன்னான் கணவன்!

கடற்கரையோரங்களில் இயற்கை வளமும் தொழில் வளமும் நிறைந்திருந்தாலும், கடற்புரத்திலிருந்து விலகி கண்டத்தின் மையத்தில் உள்ள 'out back' என்ற நிலப் பிரதேசத்தின் பல பகுதிகள் வறண்ட பாலை வனங்களாகவே காணப்படுகின்றன. இங்கும் சிறிய பகுதிகளைத் தேர்வு செய்து, அவற்றை வளமையாக்க இயற்கையுடன் போராடி வருகிறார்கள். இத்தகைய பகுதி களில் அங்கொன்றும் இங்கொன்றுமாய் வாழும் குடும்பங்களின் மருத்துவ வசதிக்கு, 'பறக்கும் மருத்துவர் படை விமானங்களுடன் இயங்குகிறது.

இந்தியாவை விட இரு மடங்குக்கும் அதிக மாகப் பரப்பளவு இருந்தாலும் ஆஸ்திரேலியாவின் மொத்த ஜனத்தொகையே 17 மில்லியன்தான். (அதாவது ஏறத்தாழ பம்பாய் + பங்களூர் ஜனத் தொகை) ஜனநெரிசல் அதிகமாக உள்ளதெனக் கருதப்படும் சிட்னியில் கூட $4^1/_2$ மில்லியன் பேரே வசிக்கிறார்கள்.



✱ பழமையும்....



பதினாறு வயதுக்கு மேல் ஆகியும் வேலையில்லாமல் இருப்போருக்கு வார உதவித் தொகையாக 150 டாலர் வழங்குகிறது ஆஸ்திரேலிய அரசு. இத்தகையவர்களுக்குக் கால் ஏக்கர் பண்ணை நிலமும் வழங்கப்படுகிறது. ஒரு நிபந்தனையின் பேரில் : ஒரு வருடத்துக்குள் அந்த நிலத்தில் வீடு கட்டிக் கொண்டு குடிபுக வேண்டும்!

கடைநிலை ஊழியர்கள் வீட்டில் கூட ஃப்ரிஜ், வாஷிங் மெஷின் போன்ற உபகரணங்கள் வைத்துள்ளார்கள். சாலைகள் வாரம் ஒருமுறை சோப்பு நீரால் கழுவி விடப்படுகின்றன. ரயில் 9 மணி 3 நிமிடத்துக்குப் புறப்பட்டு பத்து மணி ஒரு நிமிடத்துக்குப் போய்ச் சேரும் என அறிவித்து, அந்த நேரத்தைத் துல்லியமாகக் கடைப்பிடிக்கவும் செய்கிறார்கள்.

நுகர்வோர் விழிப் புணர்வும் நிறைய இருக்கிறது. தயாரிப்பாளர்களோ வியாபாரிகளோ நுகர்வோரை ஏமாற்ற முயன்றால் டி.வி., பத்திரிகைகளில் அந்த தில்லுமுல்லுகளைப் பிட்டு பிட்டு வைத்து நாறடித்து விடுகிறார்கள்!

இவ்வளவு நவீனமான நாட்டில் அதன் பாதிப்பு துளியும் இன்றி வாழும் பழங்குடிகளும் உண்டு. 'அபாரிஜின்' எனப்படும் இப் பழங்குடியினருள் சிலர் இன்னமும் ஆடை அணியக்கற்றுக் கொள்ளவில்லை. இவர்கள் தாங்கள் வாழும் நிலத்தையே புனிதமானதாகக் கருதுகிறார்கள். இவர்கள் மதச் சடங்குகளின் போது பாடும் பாடல்களின் மெட்டுகள், இவர் களுடைய ஆடலின் தாளக்கட்டு, முகத்துக்கு இவர்கள் பயன்படுத்தும் அரிதாரம்... யாவுமே இந்தியப் பழங்கலைகளை நினை வூட்டும் வண்ணம் உள்ளன.

உலகக் கோப்பை கிரிக்கெட் பந்தயங்களின் போது ஆஸ்திரேலி யர்கள் தாங்கள் ஜெயிக்காவிட்டாலும் இங்கிலாந்து ஜெயிக்கக் கூடாது என்பதில் குறியாய் இருப்பார்களாம். இப்படி ஒரு கருத்து எழக் காரணம் இருக்கிறது : முன்பு இங்கிலாந்தில் குற்றம் செய்தவர்கள் ஆஸ்திரேலி யாவுக்கு நாடு கடத்தப்பட்டார்கள். எனவே பிரிட்டிஷாரை விரும்பாத ஆஸ்திரேலியக் கூட்டம் 'பாம்மிகள்' என அவர்களை அழைத்தது; இன்றும் அழைக்கிறது.

இந்தியாவைப் பற்றி ஆஸ்திரேலியர் களுக்குப் பிரமாதமான அபிப்பிராயம் ஏதுமில்லை. இந்தியர்கள் 'அசைவ உணவைத் தொடாதவர்கள்; பசுக்களைப் பூஜிப்பவர் கள்; இந்தியத் தெருக்களில் பாம்பும் புலியும் உலவும்..' என்றே பல ஆஸ்திரேலியர்கள் இன்றும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்!

தொகுப்பு :
**நிர்மலா சக்ரவர்த்தி**

# ஆபரேஷனால் முடியாதது அழுத்தத்தால் நிறைவேறும்!



அமெரிக்கப் பெண்மணி ஆன் கிளெமன்ட் தம் கணவரின் இறுதிச் சடங்குகளுக்கான ஏற்பாடுகளில் கூட இறங்கி விட்டார்! அவர் இனி பிழைக்க மாட்டார் என டாக்டர்கள் கூறி விட்டனர்! சிறுநீரகங்கள் செயல்படாது ஓய்ந்து விட்டன; இதயத்துக்கு ரத்தம் எடுத்துச் செல்லும் தமனிகள் (coronary arteries) அடைபட்டுப் போய் அதன் இயக்கத்தை வேகமாக ஃபுல் ஸ்டாப்புக்குக் கொண்டு வந்து கொண்டிருந்தன.

''61 வயது கிளெமன்ட் பை-பாஸ் ஆபரேஷனைத் தாங்க மாட்டார். அவர் மெள்ள மெள்ள இறந்து விடுவார்...'' என்றனர் டாக்டர்கள்.

ஆனால் இன்று கிளெமன்ட் நி_ாக இருக்கிறார். வலியைக் குறைக்க மருந்துகள் சாப்பிடுவதை நிறுத்தி விட்டார்; சக்கர நாற்காலிக்கு 'டாடா' காண்பித்து விட்டார். தினமும் காலை உடற்பயிற்சிக்காக இரண்டு மைல் நடக்கிறார்!

இந்த ஆச்சரியம் எப்படி சாத்தியமாயிற்று...? Enhanced External Counterpulsation என்ற புதிய சிகிச்சை முறையினால் தான்...

ரத்த அழுத்தத்தை நிர்ணயிக்க உபயோகிக்கும் கருவியில் உள்ளது போன்ற ரப்பர் பட்டைகள் இடுப்புக்குக் கீழே உடல் முழுவதிலும் சுற்றி இறுக்கப்படுகின்றன. இந்தப் பட்டைகள் ஏற்படுத்தும் அழுத்தத்தினால் கால் மற்றும் இடுப்புப் பகுதியிலிருந்து ரத்தம் இதயத்துக்கு வேகமாகவும் வலியின்றியும் செலுத்தப்படுகிறது. இவ்வாறு 36 மணி நேரம் விட்டு விட்டு சிகிச்சை அளித்தால், இதய இயக்கமும் ரத்த ஓட்டமும் சீரடைகின்றன.

இந்த சிகிச்சை முறை எவ்வாறு வெற்றிகரமாகச் செயல்படுகிறது என்பதற்கான தெளிவான விளக்கம் இன்னமும் மருத்துவ விஞ்ஞானிகளால் கொடுக்கப்படவில்லை. ஆனால் இதய பை-பாஸ் அறுவை தேவைப்பட்ட பதினெட்டு அமெரிக்கர்கள், அதனைச் செய்து கொள்ளாமலேயே இந்த முறையினால் பயன் அடைந்துள்ளார்கள்.

ஆபரேஷன் செய்து கொள்ளும் நிலைமையில் இல்லாத உடல் தளர்ந்த முதியவர்களுக்குக் கை கொடுக்கக்கூடிய இம்முறையைக் கண்டுபிடித்தவர் டாக்டர் ஹாரி ஸாராஃப். இம் முறையை அவர் 30 ஆண்டுகளுக்கு முன்னரே கண்டுபிடித்திருந்தார். எனினும், பலூன் சிகிச்சை, பை-பாஸ் அறுவை போன்றவை ஏறத்தாழ அதே சமயத்தில் வழக்கத்துக்கு வந்ததால் டாக்டர் ஸாராஃபின் கண்டுபிடிப்பின் மகிமை உணரப்படவில்லை.

தமது ஆராய்ச்சியைப் போலவே சைனாவில் டாக்டர் Zhen Shen Zheng என்பவர் நிகழ்த்தி அதே முறையைக் கையாண்டு வருகிறார் என அறிந்து, அந்தச் சீன டாக்டரை அமெரிக்காவுக்கு வரவழைத்தார் ஸாராஃப். இருவரும் சேர்ந்து இப் புதிய சிகிச்சை முறையை மேலும் பக்குவப் படுத்தியிருக்கிறார்கள்.

இச் சிகிச்சை முறை எவ்வாறு பலன் அளிக்கிறது, எத்தனை காலம் அப் பலன் நீடிக்கும் என்பதை அறுதியிட்டுச் சொல்ல இயலவில்லை. எனினும் இதன் மூலம் உயிர் பிழைத்ததோடு இயல்பான இயக்க நிலைக்குத் திரும்பியவர்களும் உண்டு.


மற்ற சிகிச்சை முறைகள் பலன் தராத நிலையில் மட்டுமே இன்று கையாளப் பட்டு வரும் இம் முறை குறித்து மேன் மேலும் ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன. நாளை ஒருவேளை பைபாஸுக்கே அவசியம் இராது போகலாம்!

நன்றி : **நியூஸ்வீக்**

சாதாரணமாக வீட்டின் கொல்லைப்புறத்தில் வளரும் பப்பாளிக் காயிலிருந்து பல இலட்சக்கணக்கான ரூபாய் சம்பாதிக்கலாம் என்றால் நம்ப முடிகிறதா?

# பல லட்சம் தரும் பப்பாளி!

**ப**ப்பாளியில் வைட்டமின் ஏ மிக அதிக அளவில் (3000 யூனிட்/100 கிராம்) அடங்கியுள்ளது. ஆகவே நமது கண்ணுக்கு மிக இன்றியமையாத வைட்டமின் ஏ அடங்கிய மலிவான பொருள் பப்பாளியைத் தவிர வேறொன்றும் இருக்க முடியாது.



● பால் வடியும் பப்பாளிக்காய்


மேலும் நோய் எதிர்ப்புக்குத் தேவையான வைட்டமின் சி, எலும்பு வளர்ச்சிக்குத் தேவையான கால்ஷியம் போன்றவையும் இரும்புச்சத்து, பாஸ்பரஸ், புரதம் ஆகியவையும் பப்பாளியில் உள்ளன. சிட்ரிக், டார்டாரிக், காலிக் போன்ற அமிலங்களும் இதில் சிறிதளவு உள்ளன எனப் பப்பாளியின் ஊட்டச்சத்து பற்றி நிறையவே கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் பப்பாளி பற்றிப் பலரும் அறியாதது, அதில் 'பப்பாயின்' அல்லது 'பாப்பின்' என்ற வேதிப்பொருள் உள்ளது என்பதுதான்.

வளரும் குழந்தைகளுக்கு உணவு சீராக செரிக்கவும் தோல் சம்பந்தமான நோய்களைக் குணப்படுத்தவும் வல்லது பாப்பின். பலவித முக கிரீம்களும், லோஷன்களும் தயாரிக்க 'பப்பாயின்' மூலப் பொருளாகப் பயன்படுகிறது. எனவே உள்நாட்டிலேயே பப்பாயினுக்கு நல்ல மார்க்கெட் உள்ளது.


## பப்பாயின் பெறுவது எப்படி?

**இ**ரப்பர் மரத்தில் பால் எடுப்பதைப் போன்று பப்பாளி மரத்திலும் பால் எடுக்கப்படுகிறது. ஆனால் இரப்பர் மரத்தில் பட்டையை வெட்டிப் பால் பெறுவதைப் போலன்றி பப்பாளியில் 'காயை' வெட்டிப் பால் எடுக்கப்படுகிறது.

நன்கு வளர்ந்த மரத்தில் காய் விட்டு 80 முதல் 90 நாட்களுக்குள் பால் வெட்டி எடுக்கலாம்.



● செழிப்பான வளர்ச்சி




பால் வெட்டி எடுக்கலாம். முதலில் மரத்திலுள்ள உலர்ந்த, பழுத்த இலை தழைகளை நீக்கி, மரத்தைச் சுத்தம் செய்ய வேண்டும். பின்னர் கத்தி அல்லது அதற்கெனச் செதுக்கப்பட்ட கூரிய மரத் துண்டினால் 2 மில்லி மீட்டர் ஆழத்திற்குக் காயின் நடுப் பகுதியிலிருந்து கீழ் நோக்கி மூன்று அல்லது நான்கு இடங்களில் கீற வேண்டும். இவ்வாறு வெட்டப்படும் இடங்களிலிருந்து பீறிட்டு வரும் பாலை, கொட்டாங் கச்சி, சட்டி போன்ற மண்பாண்டம் அல்லது அதற்கென வடிவமைக்கப்பட்ட அலுமினியப் பாத்திரங்களில் சேகரிக்க வேண்டும். ஒவ்வொரு மரத்துக் காயிலும் உள்ள பாலைச் சேகரித்து, பெரிய பாத் திரங்களில் விட்டு, சூரிய ஒளியில் உலர விட வேண்டும். நன்றாகக் காய்ந்ததும் பப்பாயின் 'மைக்கா' தகடுகள் போல் பளபளப்பாகக் காணப்படும்.

## ஏற்ற நேரம் :

அதிகாலை 3 மணி முதல் 7 மணி வரையுள்ள குளிரான சூழ்நிலையே பால் வெட்ட ஏற்ற நேரம். மாலை வேளைகளில் சூரியன் மறைந்த பின்னரும் வெட்டலாம். ஆனால் வெயில் மிகுந்த பகல் வேளைகளில் கண்டிப்பாக வெட்டக் கூடாது. வாரத்திற்கு ஒரு முறைதான் வெட்ட வேண்டும். பப்பாளிக் காய், பழம் ஆவதற்கு முன் குறைந்தபட்சம் நான்கு முறையாவது வெட்டலாம்.

## எவ்வகை இனம் ஏற்றது?

பப்பாயின் தயாரிக்க மிகவும் ஏற்றது CO-5, CO3, CO-4, CO-6 ஆகிய இனங்கள். CO-5 இனத்திலிருந்து காய் ஒன்றிற்கு 15 கிராம் என்ற விகிதத்தில், ஹெக்டேருக்கு ஒரு சாகுபடியில் சராசரியாக 1450 கிலோ கிராம் பப்பாயின் பெறலாம். 250 முதல் 260 நாட் களுக்குள் பலன் தரும் Co-5 இன மரங்கள் தொடர்ந்து 2½ ஆண்டுகள் வரை பலன் தருபவை. இதர இனங்களிலிருந்து ஹெக் டேருக்கு 900 கிலோ கிராம் வரை 'பப்பாயின்' பெறலாம். இம்முறையைக் கோயமுத்தூர் விவசாயப் பல்கலைக் கழகத்தில் பலமுறை சோதனை நடத்தி அபரிமித லாபம் பெற்றுள்ளனர்.

பப்பாளி முதன் முதலில் மெக்ஸி கோவில் மட்டுமே காணப்பட்டதாகவும் அங்கிருந்து உலகம் முழுவதும் பரவிய தாகவும் கொள்ள சான்றுகள் உள்ளன. இந்தியாவில் சுமார் 400 வருடங்களுக்கு முன்னர் போர்ச்சுகீசியர்களால் கேரளாவில் அறிமுகப்படுத்தப்பட்டது இந்த மரம். மேலை நாட்டவர்கள் பப்பாளியின் மகத்துவத்தைப் பண்டைக் காலத்தி லிருந்தே தெரிந்து வைத்திருந்தனர். நம் நாட்டிலும் பப்பாளி வயிறு சம்பந்தமான நோய்களுக்குக் கிராமங்களில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. தேள்கடி, பூச்சி கடி போன்றவைகளுக்குப் பப்பாளியின் விதை வலிநிவாரணியாகப் பயன்பட்டு வருகிறது. இத்தகைய பலன் தரும் பப்பாளியைப் பயிரிடுவோர் படிப்படியாகப் பல லட்சத்திற்கு அதிபதியாகலாம்.

புகைப்படம், கட்டுரை :
**எம். இராதாகிருஷ்ணன்**

# 6. திரிசங்கு

விசுவாமித்திரர் தவம் செய்து கொண்டிருந்த காலத்தில் சூரிய குல அரசன் திரிசங்கு என்பவன் பெரும் புகழுடன் அனேக ஆண்டுகள் அரசு புரிந்து, தேகத்துடன் சுவர்க்கம் போக வேண்டும் என்று ஆசை கொண்டான். அதற்காக வசிஷ்டரிடம் சென்றான்.

வசிஷ்டர் அவனுடைய குல குரு. அவர், ''உம்மால் இது இயலாது. வேண்டாம், இந்த யோசனையை விட்டு விடுவீராக'' என்றார். திரிசங்குவுக்கு இது பிடிக்க வில்லை. வசிஷ்டருடைய புத்திரர்களிடம் போய், ''உங்களுடைய தகப்பனார், என்னுடைய குருவானவர், முடியாது என்று சொல்லி விட்ட இந்த யாகத்தை நீங்கள் நடத்தித் தாருங்கள். என் னுடைய குரு என்னைக் கை விட்டுவிட்டார். நீங்கள் என் வேள்வியை நடத்தித்தர வேண்டும்'' என்றான்.

வசிஷ்ட குமாரர்களுக்கு மிருந்த கோபம் வந்தது.

''ஏன் உமக்கு இந்தத் துர்ப்புத்தி பிடித்தது? உம்முடைய குருவும் எங்கள் பிதாவும் சொன்ன சொல்லுக்குக் கட்டுப்படாமல் எங்களிடம் வந்திருக்கிறீர். திரும்பிப் போவீராக'' என்றார்கள். திரிசங்கு அதைக் கேட்காமல், மீண்டும் மீண்டும் வற்புறுத்திக் கொண்டே நின்றான்.

''மூர்க்க அரசனே! எங்கள் பிதாவை அவமதிக்க எங்களை நீர் பயன்படுத்திக் கொள்ளப் பார்க்கிறீர்; திரும்பிப் போவீராக!'' என்றார்கள்.

''உங்களால் முடியாவிட்டால் வேறு யாரையாவது நான் தேடியடைந்து என் காரியத்தை முடித்தே தீருவேன்'' என்று திரிசங்கு அவர்களுக்குக் கோபம் அதிகரிக்கும் முறையில் சொன்னான்.

அவர்கள் அதைப் பொறுக்காமல் அரசனை, ''நீ சண்டாளன்'' என்று சபித்து விட்டு, அவனை அனுப்பி விட்டார்கள்.



சக்கரவர்த்தித் திருமகள்

ராஜாஜி





**அ**ன்றிரவு தூங்கினவன் காலையில், தன் அழகிய உருவம் மாறிப் போய், காந்தியும் நிறமும் இழந்து, அவலட்சண வடிவத்தோடு, பீதாம்பரத்துக்குப் பதில் அழுக்குத் துணியோடு எழுந்தான். அவன் அணிந்திருந்த ஆபரணங்கள் எல்லாம் மாறி விட்டன. மந்திரிகளும் பரிவாரமும் நகரத்து ஜனங்களும் அரசனுடைய புது உருவத்தைப் பார்த்துத் தூர விலகி ஓடினார்கள். எல்லாரும் அவனைக் கண்டு வெறுத்தார்கள். வெட்கம் மேலிட்டு அரசன் தன்னந்தனியாக ஊரை விட்டு விலகி ஊண் உறக்கமின்றி இரவும் பகலும் திரிந்தான்.

சண்டாள வேஷத்தோடு திரிசங்கு ராஜன் தபோதனராகிய விசுவாமித்திரர் ஆசிரமத்துக்குச் சென்றான். அவர் இவனைக் கண்டதும் கருணை மேலிட்டு, ''நீ திரிசங்கு ராஜா அல்லவா? ஏன் இந்த வடிவம் அடைந்தாய்? யாருடைய சாபம்?'' என்று கேட்டார்.

திரிசங்கு நடந்த விஷயம் எல்லாம் சொல்லி, ''நான் என் ராஜ்யத்தைத் தருமம் தவறாமல் பரிபாலித்தேன். சத்திய வாழ்க்கை நடத்தினேன். நான் ஒரு பாபமும் செய்ததில்லை. எந்த விதத்திலும் யாருக்கும் தீங்கு செய்தது கிடையாது. என் குருவும் அவருடைய குமாரர்களும் என்னைக் கை விட்டு, என்னை இந்த நிலை அடையச் சாபமிட்டு விட்டார்கள். நீர்தான் காப்பாற்ற வேண்டும்'' என்று கூறி அவர் காலில் விழுந்தான்.

சாபத்தின் பயனாகச் சண்டாளனாகி விட்ட அரசனிடம் விசுவாமித்திரருக்கு அனுதாபம் பொங்கி வந்தது. விசுவாமித்திரருடைய கஷ்டம் இதுவே. அவருடைய கோபம், இரக்கம், அன்பு முதலிய உணர்ச்சி வேகங்கள் அதிக தீவிரம்.

அவனைப் பார்த்து மதுரமான மொழியில் சொன்னார்: ''அப்பனே! இக்ஷ்வாகு குலந்தரசனே! உனக்கு நல்வரவு. உன் தரும வாழ்க்கையைப் பற்றி நான் நன்றாக அறிந்தவன். உனக்கு நான் அபயம் தந்தேன். ரிஷிகள் உள்பட எல்லோரையும் அழைத்து, நீ நடத்த வேண்டும் என்று விரும்பிய வேள்வியை நான் நடத்தித் தருவேன். குருவின் கோபத்தால் நீ அடைந்த இந்தச் சண்டாள வடிவத்தோடேயே நீ சுவர்க்கம் சேருவாய். இது நிச்சயம்'' என்று வாக்களித்து விட்டார்.

**யா**கத்துக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்துவிட்டு, ''உன் குருவால் உனக்கு நேர்ந்த இந்தச் சண்டாள தேகத்தோடே நீ சுவர்க்கம் அடைவாய். எப்போது நீ கௌசிகனிடம் சரணமடைந்தாயோ அப்போதே நீ கோரிய எண்ணம் நிறைவேற்றினதாக வைத்துக்கொள்'' என்று திரிசங்கு மகாராஜனுக்கு மறுபடியும் தைரியம் சொன்னார்.

சொல்லிவிட்டுத் தம் சீடர்களுக்கு உத்தரவிட்டார்: ''நீங்கள் போய் எல்லா ரிஷிகளையும் சிஷ்யர்களோடு வேள்விக்கு வரும்படி நான் அழைத்ததாகச் சொல்லுங்கள்'' என்றார்.

சீடர்களும் அவ்விதமே எல்லாப் பெரியோர்களிடமும் சென்று விசுவாமித்திரருடைய அழைப்பைத் தெரிவித்தார்கள். அநேகமாக எல்லாரும் வருவதற்குச் சம்மதித்தார்கள். மகா தபஸ்வியான விசுவாமித்திரருடைய அழைப்பை நிராகரிக்க அவர்களுக்குத் தைரிய

மில்லை.

ஆனால் வசிஷ்டரின் குமாரர்களை அழைத்த போது அவர்கள், ''நாங்கள் வர மாட்டோம் என்று ரிஷியிடம் சொல்லுங்கள். ரிஷி எவ்வளவு தபஸ்வியா யிருந்தாலும் க்ஷத்திரியரான ஒருவர் எப்படி இவ்விதமான மந்திரச் சடங்குகளை நடத்தக் கூடும்? அதிலும் சண்டாளனுக்காக எப்படி யாகம் நடத்தலாம்?'' என்று ஆட்சேபித்து மறுத்து விட்டார்கள்.

இதைக் கேட்டதும் விசுவாமித்திர ரிஷி கடுங்கோபங் கொண்டு, ''நான் செய்யும் காரியத்தில் ஒரு தவறுமில்லை. கர்வங் கொண்ட இந்த வசிஷ்ட குமாரர்கள் இறந்து சாம்பலாகக் கடவார்கள். அவர்கள் ஏழு ஜன்மம் வரையில் நாய் தின்னும் ஜாதியாகக் கடவார்கள்'' என்று சபித்து விட்டு, நிச்சயித்தபடி யாகத்தைச் செய்ய ஆரம்பித்தார்.

கூடியிருந்த பெரியோர்களுக்கெல்லாம் காரியத்தை எடுத்துச் சொன்னார்.

''மகா தர்மவான், சத்யவான், இக்ஷ்வாகு குலத்தரசன், இவன் சரீரத்தோடு சுவர்க்கம் செல்ல வேண்டுமென்று இந்த வேள்வியைச் செய்ய நான் நிச்சயித்திருக்கிறேன். நீங்கள் அனைவரும் கலந்து கொண்டு காரியத்தை நிறைவேற்றித் தர வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்.

'இவர் மகா பலம் பெற்ற தபஸ்வி, இவருடைய கோபத்தை நாம் தாங்க முடியாது' என்று பயந்து எல்லாரும் வேள்வியில் கலந்து கொண்டார்கள். எல்லாச்சடங்குகளையும் கௌசிகருடைய தலைமையில் கிரமப்படி நடத்தினார்கள்.

வேள்வியின் முடிவில் தேவர்களை அழைத்து ''அவியைக் கொள்ளுங்கள்'' என்று சொல்ல வேண்டிய காலம் வந்தது. அப்படியே விசுவாமித்திரர் அழைத்தார். ஆனால் யாரும் வரவில்லை! வேள்வி வீணாயிற்று. அழைப்புக்குப் பயந்து வந்த ரிஷிகள் மனத்துக்குள் விசுவாமித்திரரைப் பரிகசித்தார்கள்.

விசுவாமித்திரருக்குக் கடுங் கோபம் வந்து, தன் கையில் வைத்திருந்த நெய்க் கரண்டியை உயரத் தூக்கித் திரிசங்கு ராஜனை நோக்கி, ''என் தவத்தின் வலிமையைப் பார்ப்பாய், திரிசங்குவே! என் முயற்சியும் தவமும் சக்தி அவ்வளவும் உனக்குப் பயன் படுவதாக. என் தவத்துக்குச் சிறிதளவேனும் சக்தி உண்டாயின் நீ உன் சரீரத்துடன் சுவர்க்கம் ஏறுவாய்! தேவர்கள் அவி எடுத்துக் கொள்ளாதது பற்றி எனக்குக் கவலையில்லை. அரசனே, செல் மேலே!'' என்றார்.

அப்போது அந்த அற்புதம் நடந்தது. அங்கே கூடியிருந்த ரிஷிகள், பிராமணர்கள் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருக்கச் சண்டாளனான ராஜா அப்படியே ஆகாயத்தில் கிளம்பினான்.



விசுவாமித்திரருடைய தவவலிமையை அப்போது உலகம் கண்டது.

திரிசங்கு சுவர்க்கத்தை அடைந்தான். உடனே இந்திரன் பார்த்தான். ''சண்டாள சரீரத்துடன் எவன் இங்கே வருகிறான்? குருவினிடம் சாபம் பெற்ற மூடனே, போ!'' என்று கீழே தள்ளி விட்டான். சுவர்க்கத்திலிருந்து திரிசங்கு கதறிக் கொண்டு தலைகீழாக விழுந்தான். கீழே விழவிழ ''ஐயோ, என்னைக் காப்பாற்றுவீர்! காப்பாற்றுவீர்!'' என்று திரிசங்கு கதறினான்.

இதைப் பார்த்துக் கொண்டிருந்த விசுவாமித்திரர் தம் தபோ பலத்தை தேவர்கள் இப்படியா இகழ்கிறார்கள் என்று கோபாவேசங் கொண்டு, ''நில்! நில்!'' என்று தைரியமாகச் சொல்லி அத்தனை ரிஷிகளுக்கு மிடையில் ஒரு புது சதுர்முகப் பிரம்மாவைப் போல் ஜொலித்தார். தலைகீழாக விழுந்த திரிசங்கு, விசுவாமித்திரர் 'நில்' என்றதும் நடு ஆகாயத்தில் ஒரு நட்சத்திரமாகப் பிரகாசித்துக் கொண்டு அப்படியே நின்றான். அந்தக் கணமே ஆகாயத்தில் திரிசங்கு நின்ற தென் திசையில் புதிய துருவம், புதிய சப்தரிஷிகள் இன்னும் பல நட்சத்திரங்களையும் சிருஷ்டித்து நிறைத்து விட்டார்.

''புது இந்திரனையும் உண்டாக்கி நிலை பெறச் செய்வேன். புது தேவர்களையும் உண்டாக்குவேன்'' என்று சொல்லி, சொன்னபடியே செய்ய ஆயத்தமானார்.

இது என்ன! விபரீதமாக முடியும் போலிருக்கிறதே'' என்று எண்ணித் தேவர்களும் ரிஷிகளும், விசுவாமித்திரரிடம் வந்தார்கள்.

விசுவாமித்திரரிடம் நயமாகப் பேசி, ''இந்தக் காரியம் வேண்டாம். திரிசங்கு முதலிய எல்லா நட்சத்திரங்களும் தாங்கள் நிர்ணயித்த படியே சாசுவதமாக இருக்கட்டும். தங்களுடைய புகழுக்குக் குறைவு வேண்டாம். கோபத்தைத் தணித்துக் கொண்டு எங்களைக் காப்பாற்ற வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்கள். இப்படி விசுவாமித்திரரை ஒருவாறு சமாதானப் படுத்திவிட்டு திரும்பினார்கள். அதுவரையில் விசுவாமித்திரர் செய்த தவம் இவ்வாறு செலவழிந்து போய் விட்டது.

(தொடரும்)


உங்கள் ஜாதக பலனை கேட்டறியுங்கள்

ஜோதிட போன்

வார பலன்கள்

☎ 001 609 936 34+

மேலே கொடுத்துள்ள பதினொரு எண்ணையும் டயல் செய்வதுடன் உங்கள் சூரிய ராசிக்கு கொடுத்துள்ள இரண்டு எண்ணையும் சேர்த்து டயல் செய்யவும்

51 மேஷம்
52 ரிஷபம்
53 மிதுனம்
54 கடகம்
55 சிம்மம்
56 கன்னி
57 துலாம்
58 விருச்சிகம்
59 தனுசு
60 மகரம்
61 கும்பம்
62 மீனம்

டாரட் பலன்கள்

ஒரு பண்டைய ஆருட முறை. உங்கள் குறிப்பிட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கிறது.

அழையுங்கள் :
001609 936 3450

பொருத்தம்

நீங்களும் உங்கள் துணையும் எவ்வாறு ஒத்துப்போக முடிகிறது?

அழையுங்கள் :
001609 936 3474

Anthem

# ஜெயலலிதாவின் தவறுகளுக்குச் சிகிச்சை என்ன?



● எல். ஜி. சங்கர், கோவை.

*? அமெரிக்கப் பாணியில் கருணாநிதியும் ஜெயும் ராமதாஸும் ஒரே மேடையில் விவாதம் நடத்தினால்...?*

! அந்த அரசியல் நாகரிகத்தை இங்கே எதிர் பார்க்க முடியாது என்பது ஒருபுறமிருக்க, காங்கிரஸையும், கம்யூனிஸ்டுகளின் இரு பிரிவுகளையும் மற்றும் பல கட்சிகளையும் விட்டு விட முடியாது என்பதால் மேடை கொள்ளாது! பார்வையாளர் அளவுக்கு மேடையிலும் ஆட்கள் இருப்பார்கள்!

● ஆர். தமிழரசி, சிதம்பரம்.

*? கட்அவுட் கலாசாரமும், 2000 கார் பவனியும், மலர்ப் பாதையில் ஊர்வலமும் பயிலும் தமிழக முதல்வர், "உலக சிக்கன நாள்" கொண்டாடுவது பற்றி...?*

! 'படிப்பது ராமாயணம் இடிப்பது பெரு மாள் கோயில்' என்ற கதைதான். அது சரி, ஸ்பெஷல் விமானத்தை மறந்து விட்டீர் களே!

● அ. அப்துல்காதர், அரியநாயகிபுரம்.

*? "மலிவு விலையில் சாராயம் கிடைக்க வழி செய்ய வேண்டும்" என்று மத்திய அமைச்சர் சித்தா மோகன் கருத்து சொல்லியிருக்கிறாரே?*

! அவர் சிந்தாமோகன் அல்ல; சிந்திக்கா மோகன்!

● தா. சிந்துகுமார், திருவட்டார்.

*? "பொன்மலர்", "கணையாழி" மாத இதழ்களின் விநியோகப் பொறுப்பைக் கல்கி ஏற்கக் காரணம்?*

! அந்த நிறுவனங்கள் எங்கள் உதவியைக் கோரியதுதான்.

● லீலா இராம், தக்கலை.

*? இந்தியன் எந்தத் துறையில் பிரகாசிக்க வாய்ப்பு?*

! 'வாய்ச் சவடால் துறையிலா? லஞ்ச ஊழல் துறையிலா?' என்று பட்டிமன்றமே நடத்தலாம்!

● பி. ஜெயப்பிரகாஷ், நவமலை.

*? பாரம்பரியம் மிக்க கல்கிக்கு ரேடியோ விளம்பரங்கள் தேவைதானா, சார்?*

! உங்களைப் போன்ற பரம்பரை வாசகர் கள் பாரம்பரியம் மிக்க இந்தப் பத்திரி கைக்குக் காசு கொடுத்து வாங்கும் புதிய வாசகர்களைப் பெற்றுத் தந்தால், ரேடியோ விளம்பரம் அவசியமில்லைதான். உதவுங் களேன்!



● ....விவாதம்



● ...நடத்தினால்?

● எம். சந்திரசேகர், மேட்டுமகாதானபுரம்.

*? சென்னையில் கொலை, கொள்ளை அதி கரித்திருப்பது பற்றி?*

! வி.ஐ.பி. பாதுகாப்புக்கே போலீஸ் படை போதவில்லை; பொது மக்கள் பாது காப்புக்கு அவர்கள் எப்படி உதவ முடியும்? சமீபத்தில், ஒரு ஓய்வு பெற்ற போலீஸ் உயர் அதிகாரி, "முதல்வருக்குக் கோட்டைக்குள் ளேயே ஒரு வீடு கட்டித் தந்து விடலாம்; அல்லது, பிரிட்டனில் 10, டௌனிங் தெரு மாதிரி போயஸ் தோட்டத்து வீட்டையே அதிகாரபூர்வமான முதல்வர் காரியாலய மாக்கி விடலாம்" என்று கூறியிருப்பது இந்த நோக்கில்தான்!

● எஸ். ப்ரியா, பாளையங்கோட்டை.

*? 'பிச்சை எடுத்தால் ஐந்து ஆண்டு சிறை' என்ற மத்திய அரசின் சட்டத்தினால் பிச்சையை ஒழித்து விட முடியுமா?*

! தெருவிலே பிச்சை எடுப்பவர்களை உள்ளே தள்ளி, கூழோ கஞ்சியோ ஊற்ற லாம். அதுவும் ஒரு வகையில் பிச்சை போடு வதுதான்! ஆனால் கௌரவப் பிச்சை எடுப் பவர்களையும் லஞ்சப் பிச்சை வாங்குபவர் களையும் குறித்து அரசு என்ன செய்யப் போகிறது!

**நீங்கள் கேட்டவை - தராசு**



● வளர்ச்சியும்
வலிமையும்



● மறக்கலாமா?

● ஜெய சுகந்தி, திருத்துறைப்பூண்டி. ப

*? ஜெயலலிதாவின் தவறுகளுக்குத் தாங்கள் கூறும் சரியான சிகிச்சை என்ன?*

! தி.மு.க.வும் சரி, நல்லாட்சி இயக்கமும் சரி, ஜெ மீது குற்றச்சாட்டுக்களைப் பட்டிய லிடுகின்றன. அதிகாரபூர்வமான விசா ரணைக் கமிஷன் நியமிக்குமாறு மத்திய அர சைக் கோருகின்றன. உடனே இதில் சட்டப் பிரச்னைகள் எழுகின்றன. ஆளுனர், ஜனாதி பதி, தேர்தல் கமிஷன் முதலியவர்கள் என்ன செய்யலாம், கூடாது என்று வாதப் பிரதி வாதங்கள் உருவாகின்றன. மத்திய அர சுக்கோ நாடாளுமன்றத்தில் அ.தி.மு.க. ஆத ரவு தேவை என்ற நிலை. எனவே, இதெல் லாம் போகாத ஊருக்கு வழியாக எனக்குத் தோன்றுகிறது. அணுகுமுறையை மாற்ற வேண்டும். ஜெ மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள், சட்டரீதியான குற்றம், தார்மீக ரீதியான தவறுகள் என்று இரு வகைப்படும். இரண்டு விதமாகவும் அலசி ஆராய, அதிகாரபூர்வமற்ற, ஆனால் மக்க ளின் நன்மதிப்பைப் பெற்ற நடுநிலையா ளர்கள் சிலரை ஒரு கமிட்டியாக அமைக்க லாம். அவர்கள் முன்னிலையில் சு. சுவாமி யும் மு.க.வும் தங்களிடம் உள்ள சாட்சியங் களைச் சமர்ப்பிக்கலாம். இந்தக் கமிட்டி யின் தீர்ப்பைத் தலைவணங்கி ஏற்பதாகக் கூறலாம். கமிட்டி தீர்ப்பு ஜெக்கு பாதகமாக இருந்தால் அவரே ராஜினாமா செய்து விடு வார். மானமின்றி பதவியில் நீடித்தால் தேர் தலில் மக்களின் இறுதித் தீர்ப்புக்கு விட்டு விடலாம். அதிகாரபூர்வமான கமிஷன்தான் சாட்சிகளை அழைத்து, தட்டிக் கேட்டு விசா ரிக்க முடியும்; தஸ்தாவேஜுக்களை அரசிடம் கோரிப் பெற முடியும் என்பது மெய்தான். ஆயினும் அதிகாரபூர்வமற்ற கமிட்டியும் கூட இருக்கின்ற சாட்சியங்களின் அடிப் படையில், தவறுகள் நடந்துள்ளன அல்லது இல்லை; மேலும் ஆய்வு தேவை அல்லது வேண்டாம் என்ற அளவுக்கு நிச்சயமாகக் கூற முடியும்.

● சா. பொன்ராஜ், பாளையங்கோட்டை.

*? சிவகாமியின் சபதத்தில் இடம்பெறும் சிவகாமி என்னும் கதாபாத்திரம் ஒரு வரலாற்றுக் கதாபாத்திரமா?*

! இலக்கிய வரலாற்றில் இடம்பெற்று விட்ட ஒரு கற்பனைக் கதாபாத்திரம்.

● எல். மாறன், மேல்பட்டி.

*? சிவகங்கை கிராஃபைட் தொழிற் சாலைக்கு, ராஜீவ் (1987), ப. சிதம்பரம் (1991) ஜெ (1992) ஆகிய மூவரும் மூன்று முறை அடிக்கல் நாட்டி விட்டார்கள். முற்றுப் பெறுவது எப்போது?*

! அடிக்கல் நாட்டு விழாக்களுக்குச் செல விட்ட தொகையைத் தொழிலகத்துக்குச் செலவிட்டிருந்தால் கிட்டத்தட்ட முற்றுப் பெற்றிருக்கும்!

● என். ஆர். சுப்பிரமணியம், பூனாம்பாளையம்.

*? பொருளாதாரத் துறையில் இந்தியா தன்னிறைவு பெற்று விட்டதாக இ. காங்கிரஸ் பெருமிதம் கொள்கிறதே?*

! அயல்நாடுகளில் வாங்கிய கடனுக்கு வட்டியோடு சேர்த்துத் தவணைகளைத் திருப்பித் தரப் புதிய கடன்கள் பெற்ற அள வில் தன்னிறைவுதான் - இப்போதைக்கு.

● கே. ஏ. காசிமுத்து, இராணிப்பேட்டை.

*? ''பிரபாகரனைப் பிடிக்க இலங்கைக்குத் திறனில்லை'' என்று உள்துறை அமைச்சர் சவான் கூறியிருப்பது குறித்து?*

! இந்தியா அனுப்பிய ''அமைதிப் படை''க்கும் அந்தத் திறன் இருக்கவில்லை என்பதை மறந்து பேசியது அசட்டுத்தனம்.

● ஏ. எஸ். மீனாட்சிசுந்தரம், கடம்பநல்லூர்.

*? நீங்கள் தி.மு.க. வை எதிர்த்து எழுதக் காரணம்?*

! ''ஜெயை மட்டுமே எதிர்க்கிறோம்'' என்று புலம்பும் வாசகர்களே, மீனாட்சி சுந்தரத் தின் வாக்குமூலத்தைக் கவனியுங்கள்!

● த. குணசேகரன், கவுந்தப்பாடி.

*? ''காங்கிரஸின் வளர்ச்சி குறையவில்லை; வலிமைதான் போதவில்லை'' என்கிறாரே மூப்பனார்?*

! முதுகை விட்டு இறங்கி நடந்தால் வலிமை வரும்; இல்லாவிட்டால் ஊளைச் சதைதான் போடும்' என்றொர் போலும். உண்மைதான்.

● கே. ஆர். தேவேந்திரன், கொணவட்டம்.

*? 'ஜெ மீது சு. சுவாமி கூறும் குற்றச் சாட்டுக்கள் இ. காங்கிரஸுக்கு உடன் பாடானது அல்ல' என்று இ. காங்கிரஸ் தரப்பில் கூறப்படுகிறதே?*

! குற்றச்சாட்டுக்கள் பற்றி இ. காங்கிரஸ் அறிக்கை குறிப்பிடவில்லை. சு. சுவாமியின் அணுகுமுறைக்குத் தங்கள் ஆதரவு இல்லை; அதில் காங்கிரஸின் தூண்டுதலும் இல்லை என்ற அளவுக்குத்தான் கூறப்பட்டுள்ளது.

❑ ரூ 25 பரிசு பெறுபவர் :
ஜெய சுகந்தி,
5, குமரன் தெரு,
திருத்துறைப்பூண்டி - 614 713



# காவ்யாவின் கல்யாணம்

**அஸ்வினி**

**பெ**ண் பார்க்கும் படலம், வாதப் பிரதிவாதங்களுடன்தான் தொடங்கியது.

அர்ஜுன் தனக்கென்று சில கொள்கைகளில் பிடிப்புள்ளவன். அதற்கு ஒத்து வந்தால்தான் திருமணம் என்பது அவன் தீர்மானம்.

''அப்பா! நான் பெண் பார்க்க வரணும்னா, என்னோட சில நிபந்தனைகளுக்குக் கட்டுப்படணும் நீங்க இரண்டு பேரும்.''

''என்னடா, நிபந்தனை, அது இதுன்னு பெரிசா கண்டிஷன் போடறே? நீதான்டா எங்களுக்குக் கட்டுப்படணும். உன்னை வளர்த்து ஆளாக்கினதுக்கு,'' என்றாள் அவன் தாய் மதுராம்பாள் வேகமாக.

''அம்மா! நீங்க என்னை வளர்த்து ஆளாக்கினது உங்க கடமை. அதே மாதிரி உங்களைக் காப்பாத்தறது என் கடமை. அதுக்காக, என் தன்மானத்தை இழந்து, நீங்க சொல்றதுக்கெல்லாம் ஜால்ரா போட என்னால முடியாது,'' என்றான் அர்ஜுன்.

''நீ என்னதான்டா சொல்ல வர்றே?'' என்றார் அப்பா.

''இப்பவே கிளியரா சொல்லிடறேன். பொண்ணு என் மனசுக்குப் பிடிச்சிருந்தாப் போதும். மத்தபடி வரதட்சணை, சீர் செனத்தி அது, இதுன்னு எதுவுமே 'டிமாண்ட்' பண்ணக் கூடாது. கல்யாணச் செலவைக் கூட சரி பாதி நாம ஏத்துக்கணும். கல்யாணத்துல குத்தம், குறை கண்டு பிடிக்க அனாவசிய தகராறு பண்ணி, கலாட்டா கூடாது. ரொம்ப பெருந்தன்மையா நடந்துக்கணும். இதுக்கெல்லாம் நீங்க ஒத்துக்கிட்டாதான் நான் பெண் பார்க்க வருவேன்'', என்ற அர்ஜுனின் ஆணித்தரமான பேச்சில் மௌனமானார் வைத்தியலிங்கம்.

**பெ**ண் வீட்டில் அவர்கள் போய் இறங்கிய போது, வாசலிலேயே காத்திருந்த பெண்ணின் பெற்றோர் அவசரமாக வந்து வரவேற்றனர்.

''மீட்டருக்கு மேலே ரெண்டு ரூபா போட்டுக் கொடுங்க சார்'', என்ற ஆட்டோ டிரைவரை முறைத்தார் வைத்தியலிங்கம்.

''உழைக்கற காசுதான்யா ஒட்டும்,'' என்றார் வேதாந்தமாக, ஆட்டோ டிரைவரிடம்.

''அது உங்களுக்கும் தான்பா,'' என்றான் அர்ஜுன் முணுமுணுப்பாகத் தந்தையிடம்.

ஆட்டோ சார்ஜை கொடுக்க முன் வந்த பெண்ணின் தகப்பனாரைத் தவிர்த்து, அர்ஜுன் கொடுத்தான்.

சம்பிரதாயமான பேச்சுக்களைத் தொடர்ந்து பெண் வந்தாள். பெயர் காவ்யா.

உண்மையிலேயே காவியமாகத்தான் இருந்தாள். பார்த்த மாத்திரத்திலேயே அர்ஜுனுக்குப் பெண்ணைப் பிடித்துப் போய் விட்டது.

ஒரு வாரம் கழித்துத் தெரிவிக்கிறோம் என்ற மழுப்பல் இல்லாமல், அங்கேயே தங்கள் சம்மதத்தைத் தெரிவித்து விட்டனர்.

''சம்பந்தி! எங்க பையனுக்குப் பொண்ணை ரொம்ப பிடிச்சுப் போச்சு. எங்களுக்கும்தான். சீக்கிரமா ஒரு முகூர்த்த தேதி குறிச்சுட்டா, கல்யாணத்தை ஜாம் ஜாமுனு நடத்திடலாம்,'' என்றார் வைத்தியலிங்கம்.

''அப்படியா? ரொம்ப சந்தோஷம். எங்க பொண்ணுக்கும் ரொம்ப பிடிச்சுப் போச்சு. மீதி லௌகிக விஷயமாப் பேசி முடிச்சுடலாமா?'' என்றார் பெண்ணின் தந்தை சிவராமன் பூரிப்பாக.

''இங்கே, பாருங்க சம்பந்தி! எங்க பையன் ரொம்ப முற்போக்குக் கொள்கை இருக்கறவன். வரதட்சணை, சீர் செனத்தி நகை, நட்டு எதுவுமே பொண்ணு வீட்ல

வாங்கக் கூடாதுங்கறது அவன் எண்ணம். அதோடு கல்யாணச் செலவையும் பாதி ஏத்துக்கறதா இருக்கோம்'' என்ற வைத்திய லிங்கத்தை, ஆச்சரியத்துடன் பார்த்தார் சிவ ராமன்.

''இந்தக் காலத்துல, இப்படி ஒரு மாப் பிள்ளை கிடைக்கறதுக்கு, நாங்க ரொம்ப கொடுத்து வெச்சிருக்கணும்.''

''நீங்க இவ்வளவு பெருந்தன்மையா இருக்கறதைப் பார்த்து எங்களுக்கு ரொம்ப சந்தோஷம்தான். இருந்தாலும் பொண் ணைக் கொடுக்கற எங்களுக்கும் சில கடமைகள் இருக்கு. நாங்களா இஷ்டப் பட்டுக் கொடுக்கறதையாவது நீங்க கட்டா யமா ஏத்துக்கணும்,'' என்றாள் அதுவரை பேசாமல் இருந்த சரோஜா - பெண்ணின் தாய்.

அதுவரை பேசாமல் இருந்த அர்ஜுன், ''தயவுசெய்து என்னை மன்னிச்சுடுங்க. பொண்ணு வீட்ல, அதைக் கொடு, இதைக் கொடுன்னு கேக்கற பேடித்தனம் எனக்குப் பிடிக்காதது. என் உழைப்பு மேல எனக்கு முழு நம்பிக்கை இருக்கு,'' என்றான்.

இரு தரப்பினருக்கும் பூரண சம்மதம். திரும்பும் போது அர்ஜுனின் கண்கள் காவ்யாவைத் தேடின. ஜன்னலில் தெரிந்த அவள் அழகு முகம், அந்தக் கண்களின் மலர்ச்சி, அவனுக்குப் பிரியாவிடை கொடுத்தது போல் இருந்தது.

மறுநாள்... ஆபீஸில் அர்ஜுனைத் தேடி ஓர் இளம்பெண் வந்திருப்பதாகப் பியூன் வந்து சொன்ன போது யார் என்று அவனால் யூகிக்க முடிந்தது.

காவ்யாதான். எதற்காக வந்திருப்பாள்?

ஏதாவது காதல் தோல்வியா? காதல னுடன் சேர்த்து வைக்கச் சொல்லிக் கேட் பாளோ? அப்படி இருந்தால் தான் விட்டுக் கொடுத்து விடவேண்டும் என்று நினைத் துக் கொண்டான்.

''உங்களோட கொஞ்சம் பேசணும்,'' கிளி கொஞ்சிய அவள் குரலில் ஒரு நடுக்க மும் தெரிந்தது.

''பக்கத்து ரெஸ்ட்டாரண்ட்டுல போய்ப் பேசறதுல உங்களுக்கு அப்ஜக் ஷன் எதுவுமில்லியே?'' என்ற அர்ஜுனுக் குப் பதிலாகத் தலையாட்டினாள் காவ்யா.

அது லஞ்ச் டயமாதலால், உடனே கிளம்பினான் அர்ஜுன்.

ரெஸ்டாரன்ட் நிரம்பி வழிந்தது. வெளி வரவேற்பு அறையில் அமர்ந்தனர். அவள் பேசக் காத்திருந்தான்.

''உங்களால் எனக்கொரு உதவியா கணும், ப்ளீஸ்...'' என ஆரம்பித்தாள்.

''என்ன? சொல்லு...''

''நிச்சயமாப் பண்ணுவீங்களா? பிரா மிஸ்?'' என்றாள் சிறு குழந்தையாக.

''ஷ்யூர்,'' என்றான், அவள் குழந்தைத் தனத்தில் மனம் பறி கொடுத்த அர்ஜுன்.

என்ன கேட்கப் போகிறாளோ என்று மனம் ஒருபுறம் சிந்தனையில் ஆழ்ந்தது. இந்தக் கல்யாணம் நின்றுவிடக்கூடாதே என்று மற்றொருபுறம் மனம் பிரார்த்தித் தது.

''இது ரொம்ப முக்கியமான விஷயம். ஆனா சொல்றதுக்கும் கூச்சமா இருக்கு,'' என்று நிறுத்தின காவ்யாவை அவஸ்தை யுடன் பார்த்தான் அர்ஜுன்.

'சீக்கிரமாகச் சொல் பெண்ணே!'

''வந்து...... உங்களை மாதிரி கணவன் அமையறதுக்கு ரொம்ப கொடுத்து வெச் சிருக்கணும். போலித்தனமான கௌரவங் களை ஒதுக்கிட்டு, நீங்க நடந்துகிட்ட முறை, உங்க பெருந்தன்மை இதை நான் ரொம்ப மதிக்கிறேன். உங்க கொள்கை ரொம்ப உன்னதமானது. ஆனா.....''

'அதிகம் சோதிக்காதே பெண்ணே!'

''உங்க கொள்கையை, நீங்க கொஞ்சம் விட்டுக் கொடுக்கணும்,'' என்ற காவ்யா வைத் திடுக்கிட்டுப் பார்த்தான் அர்ஜுன்.

''ஏன் அப்படிச் சொல்றீங்க? அன் னிக்கு நீங்க ஒண்ணும் சொல்லலியே?''

தயக்கத்துடன் ஆரம்பித்தாள் காவ்யா.

''எங்க அப்பா கொஞ்சம் ஒரு மாதிரி. சொல்றதுக்கே வெக்கமா இருக்கு. இருந் தும் இதை மறைக்க நானும், என் அம்மா வும் விரும்பல்லே. அன்னிக்கு எல்லார் மத்தியிலும் சொல்ல, தன்மானம் இடம் கொடுக்கல்லே.

அம்மி மிதித்து, அருந்ததி பார்த்துத் தாலி கட்டின என் அம்மாவைத் தவிர்த்து, எங்க அப்பாவுக்கு இன்னொரு பெண் ணோட தொடர்பு உண்டு.''

எதிர்பாராத விஷயம்தான் என்றாலும், இது, தங்கள் திருமணத்திற்கு எந்த விதத்தி லும் தடங்கலாக இருக்காது என்று நம்பி னான்.

''ஓ! இதுதான் உன்னோட தயக்கத்துக் குக் காரணமா? உன் அப்பாவோட தனிப் பட்ட பிரச்னை இது. அதுக்காக நான் மறுத் துடுவேனோன்னு நீ பயப்பட வேண் டாம்.... நான் பார்த்த ஒரே பெண் நீதான். நீதான் என் மனைவின்னு முடிவும் பண்ணி யாச்சு. மீதி எதைப் பத்தியும் ஓர்ரி பண்ணிக் காதே,'' என்றான் மென்மையாக.

இல்லைங்க... பிரச்னையே இனிமேல் தான் ஆரம்பம். எங்க அப்பாவுக்கு என் மேல உயிர்தான். அம்மாவும் கஷ்டப்பட்டு எனக்குன்னு எல்லாம் சேர்த்து வைச்சிருக் காங்க. இப்ப நீங்க எதுவுமே வேண்டாம்னு சொன்னா, அதுதான் சாக்குன்னு எங்க அப்பா அத்தனையையும் கொண்டு போய், அந்தம்மா கிட்டே கொட்டிடுவாரு. அவங்

களுக்கு ரெண்டு பொண்ணு.... பிற்காலத் துல அம்மா ரொம்ப கஷ்டப் படுவாங் களோன்னு பயமா இருக்கு. கல்யாணம்ங் கற சாக்கில நீங்க வாங்கி வைச்சுக்கிட்டீங் கன்னா, அது அம்மாவுக்கு அவங்க கால்ல நிக்க உதவியா இருக்கும். உங்க இஷ்டம் இல்லாம ஒரு குந்துமணி நகையைக் கூட நான் தொடமாட்டேன். அம்மாவுக்குக் கூட நான் சொல்ற இந்த விஷயம் தெரியாது.'' மடை திறந்த வெள்ளமாய்ப் பேசினாள் காவ்யா.

''நான் எதுவும் வேண்டாங்கறதால இப்படிச் சொல்றே. இதுவே குடுக்கற வரதட்சனை எல்லாத்தையும் ஏத்துக்கற வனா இருந்தா என்ன செய்வே?'' என்றான் அர்ஜுன்; அவளைச் சீண்டும் நோக்கத் துடன்.

''என்ன செய்ய முடியும்! நான் யதார்த் தமா வாழ விரும்பறேன். உங்களை மாதிரி லட்சியமெல்லாம் எனக்குக் கிடையாது. அனாலும் எங்க அம்மாவுக்குப் பிரச் னைன்னு வந்தா, நிச்சயம் போராடுவேன்,'' என்றாள் உறுதியுடன்.

அவள் வெளிப்படையான பேச்சும் மன உறுதியும் அவனை வெகுவாகக் கவர்ந்தன.

''அப்படி ஒரு நிலைமை உங்க அம்மா வுக்கு வரவேண்டாம். வந்தா, நான் நிச்சயம் விட்டுக் கொடுக்கமாட்டேன். எங்க அப்பா அம்மாவைப் போலவே உங்க அம்மாவை என்னால பார்த்துக்க முடியும். அதுக்கு அவங்க சம்மதிக்கலைன்னா நீ வேலைக் குப் போய் சம்பாதிக்க அவங்களுக்கு உதவ லாமே. நான் தடையா இருக்கவே மாட் டேன்..... இந்தக் கல்யாணம் கட்டாயம் நடக்கணும்.... உன்னைப் பார்த்த உட னேயே எனக்கு ரொம்ப பிடிக்கப் போச்சு காவ்யா'', என்றவனைப் பார்க்க முடி யாமல் தலை குனிந்த காவ்யா, ''எனக்கும் தான்'', என்றாள் வெட்கத்துடன்.





* இது பாப்பாவுக்கு...

* ...இது ஃபாஷனுக்கு!

# கண்கள்: ஃபாஷனும் பாதுகாப்பும்

"ஃபாஷன் பிரக்ஞையுள்ள ஒரு ஐரோப்பிய டீன் ஏஜ் பெண்மணி சராசரியாகப் பதினைந்து கூலிங் கிளாஸ்கள் வைத்திருப்பாள்...." என்கிறார் ரஜினி ஜே. துராகியா. சென்னை நகரில் மூக்குக் கண்ணாடிகள் தயாரித்து விற்கும் முன்னணி நிறுவனமான 'துராகியா ஆப்டீஷியன்ஸ்' உரிமையாளர் இவர்.


"ஐரோப்பியர்கள் கூலிங் கிளாஸை ஒரு ஃபாஷன் சாதனமாகத்தான் கருதுகிறார்கள். அதன் உபயோகம் அவர்களுக்கு இரண்டாம் பட்சமே. நம் நாட்டிலோ கூலிங் கிளாஸை வெயிலிலிருந்து பாதுகாப்பு தரும் பொருளாகத்தான் முதலில் மதிப்பிடுகிறார்கள். ஃபாஷன் இரண்டாம் பட்சம்தான். எனினும் சமீப காலமாக டெல்லி, பம்பாயிலும் ஓரளவு சென்னையிலும் கறுப்புக் கண்ணாடிகளை ஃபாஷனுக்காக மட்டுமே வாங்கி அணிவது சகஜமாகி வருகிறது. அதனால்தான் சமீபத்தில் அறிமுகமாகியுள்ள 'ரேபான்' கறுப்புக் கண்ணாடிகளை 1240 ரூபாய் முதல் 1910 ரூபாய் வரையில் கொடுத்து வாங்கப் பலரும் முன்வருகிறார்கள்" என்கிறார் ரஜினி துராகியா.

இவர் கடையில் உள்ள 'கராரா' 'கிறிஸ்டியன் டயார்' ரக, கறுப்புக் கண்ணாடிகள் 'ரே பானை' விட விலை அதிகம். "இவற்றை வாங்கவும் ஆட்கள் இருக்கிறார்களே!"

கராரா, கிறிஸ்டியன் டயார் ரகங்கள் இறக்குமதி செய்யப்பட்டவை; 'ரேபான்' கண்ணாடிகளை இந்தியாவிலேயே தயாரிக்க உரிமம் பெற்றுள்ளது 'பாஷ் அண்ட் லாம்ப்' என்ற அமெரிக்க நிறுவனம். விலை வித்தியாசம் இதனால்தான்.

"ஆயிரக்கணக்கில் பணம் செலவழித்து வாங்கும் அளவுக்கு இந்த அயல் நாட்டு முத்திரை பெற்ற கண்ணாடிகளில் என்னதான் இருக்கிறது...?" எனக் கேட்டோம்.

"அமெரிக்க பாஷ் அண்ட் லாம்ப் நிறுவனம் 135 ஆண்டுகளாக இத் துறையில் அனுபவம் பெற்றதாகும். இதன் உரிமை பல கைகள் மாறினாலும் 19 ஆம் நூற்றாண்டிலிருந்தே கண்ணாடிகள் தயாரிப்



* டாக்டர் ரவீந்திரன்




★ ரே பான்!

பில் ஈடுபட்டு, தரக்கட்டுப்பாட்டில் அதீத கவனம் செலுத்தி வருவதால், கண்ணாடி என்றாலே 'ரேபான்' என்னும் அளவுக்குப் பெயர் பெற்று விட்டது. அமெரிக்க ராணுவ வீரர்களுக்கும் காவல் துறையினருக்கும் ரேபான் கறுப்புக் கண்ணாடிகள்தாம் வழங்கப்படுகின்றன. கண்களைக் கூசச் செய்யும் வெளிச்சத்தைக் கச்சிதமாகக் கட்டுப்படுத்தும் ஆற்றல் பெற்றவை இவை...''

''குறைந்த விலையில் கிடைக்கும் கூலிங் கிளாஸ்களால் வெளிச்சத்தைக் கட்டுப்படுத்த முடியாதா...?''

''எங்கள் கடையிலேயே மத்தியதர வகுப்பினர் கலபமாக வாங்கக்கூடிய விலையில் கூலிங் கிளாஸ்கள் கிடைக்கும். அதிலும் பாதி விலைக்கு, இவற்றைப் போலவே இருப்பதாகத் தோன்றும் கறுப்புக் கண்ணாடிகள் நடைபாதைக் கடைகளில் கிடைக்கக் கூடும்... இரு வகைகளையும் அடுத்தடுத்து அணிந்து பார்த்தால் அவற்றுக்கிடையேயான வித்தியாசம் புலப்படும். சற்றுக் கூர்ந்து கவனித்தால் கண்ணாடி ஃப்ரேமின் அமைப்பிலும் அதன் லென்ஸின் அமைப்பிலும் வேறுபாடுகள் தெரியும்.



★ ரஜினி நூரக்பா

''லென்ஸ்கள் முதலில் Raw blanks எனப்படும் கனமான (கிட்டத்தட்ட அரை அங்குலம்) பரிமாணத்தில் இருக்கும். இவற்றை இயந்திரங்கள் கொண்டோ கையினாலோ தேய்த்துத் தேய்த்து மெலிதாக்குவோம். இவ்வாறு செய்யும் போது லென்ஸ் பரப்பளவு முழுதும் சீராகவும் வளைவுகள் இன்றியும் கவனமாகத் தீட்ட வேண்டும். தேய்த்து முடித்த லென்ஸ்களை லென்ஸோமீட்டர் என்ற இயந்திரம் கொண்டு பரிசோதிப்போம். ஃப்ரேம்களைச் சரிபார்த்துப் பொருத்துவோம். ஒவ்வொரு கட்டத்திலும் தரக் கட்டுப்பாட்டில் மிகுந்த கவனம் செலுத்துவோம்.

''லென்ஸ்களை தேய்க்க (grinding) மட்டுமே எங்களுக்கு ஐம்பது ரூபாய் வரை செலவாகும். அதே ஐம்பது ரூபாய்க்கோ அல்லது அதனினும் சற்றுக் கூடுதல் விலைக்கோ ஒரு கறுப்புக் கண்ணாடியையே வாங்க முடிந்தால் அதன் தரம் எப்படி இருக்கும் என்பதை நீங்களே யோசித்துப் பாருங்கள்.

'' 'பட்டி கண்ணாடி' என்று நாங்கள் அழைக்கும் மலிவான லென்ஸ்கள் வார்ப்புகளில் தயாரிக்கப்படுகின்றன. இவற்றைக் கூர்ந்து பார்த்தால் மேடும் பள்ளமுமாக வளைவுகள் தெரியும். வார்ப்பு லென்ஸ்கள் பொருத்தப்பட்ட கறுப்புக் கண்ணாடிகள்தாம் மிக மலிவான விலைக்குக் கிடைக்கும். இவற்றையே அயல்நாட்டுக் கண்ணாடிகள் எனச் சில வியாபாரிகள் கூற அதை நம்பி, ஏராள விலைக்கு வாங்கி ஏமாறும் நபர்களும் உண்டு!''

''ஏமாறாமல் இருக்க என்ன வழி...?''

''ஒரு பொருள் மிக மலிவான விலைக்குக் கிடைக்கிறதெனில் 'ஏன்?' என்று யோசிக்க வேண்டும்; பேரம் பேசி விலையைப் பாதிக்குப் பாதி குறைக்க முடிந்ததெனில் அந்தக் கண்ணாடியை வாங்குவதை

★ புருவ மேட்டின் அமைப்பே கண்களுக்கு இயற்கையான பாதுகாப்பு...



ESTD 1901 Phone 71314

எஸ்.வி.வி. யின் மிக உயர்தரமான நகைச்சுவைக் கதைகள், ஹாஸ்ய சித்திரங்கள், நாவல்கள் முதலியவற்றில் அவருடைய நகைச்சுவை; இலேசான புன்னகையை வரவழைக்கக்கூடியது, Satire என்ற கேலிச் சித்திரங்கள், குபீரென்று வெடிக்கும் ஹாஸ்யம் இப்படி பலவகை.

இவருடைய கதைகளைப் படிக்கும் பொழுது நாம் ஒரு கதை படிக்கிறோம் என்று மறந்து போய் ஒரு நெருங்கிய ஹாஸ்ய உணர்வு நிறைந்த பெரியவரிடம் பேசிக் கொண்டிருப்பதாக தோன்ற வைத்து விடும்.

எஸ்.வி.வி. எழுதிய

| | | |
|---|---|---|
| 1. | ராமமூர்த்தி | 28.00 |
| 2. | கோபாலன் ஐ.ஸி.எஸ். | 17.00 |
| 3. | சம்பந்து | 22.00 |
| 4. | சௌந்தரம்மாள் | 28.00 |
| 5. | வாழ்க்கையே வாழ்க்கை | 12.00 |
| 6. | பொம்மி | 7.00 |
| 7. | தீபாவளிக் கதைகள் | 7.25 |
| 8. | ராஜாமணி | 32.00 |
| 9. | ரமணியின் தாயார் | 17.00 |
| 10. | வசந்தன் | 16.50 |
| 11. | புது மாட்டுப் பெண் | 9.00 |
| 12. | செல்லாத ரூபாய் | 11.50 |
| 13. | Soap Bubbles More Soap Bubbles | 18.00 |
| 14. | At a Dinner | 16.00 |
| 15. | Marriage | 12.00 |
| 16. | Holiday Trip | 15.00 |
| 17. | Thirty years a Lawyer | 7.00 |
| 18. | Laugh with S.V.K. S.V.K. | 15.00 |

ஞானபீட, சாகித்ய அகாடமி விருதுகள் பெற்ற அருமையான சரித்திர நாவல்
யயாதி ரூ. 65.00
வி.ஸ.காண்டேகர் எழுதியது

21.11.92லிருந்து பாண்டிச்சேரியில் நடக்க இருக்கும் புத்தகக் கண்காட்சியில் எமது ஸ்டாலுக்கு விஜயம் செய்யுங்கள்.

அல்லயன்ஸ் கம்பெனி,
நபாத் பெட்டி தெ. 617
244, ராமகிருஷ்ணா மடம் சாலை,
மயிலாப்பூர்,
சென்னை - 600 004.

விட வாங்காதிருப்பதே மேல் எனலாம்... இதெல்லாம் நம் நாட்டில் பெரும்பான்மை மக்களுக்குத் தெரிவதில்லை. காரணம் கல்வியின்மை அல்லது தரப்படும் கல்வி சிந்தனையைத் தூண்டுவதாக அமையாதது தான்'' எனக் 'கறுப்புக் கண்ணாடி'யிலிருந்து 'கல்விச் சீர்திருத்தத்துக்குத் தாவினார் ரஜினி துராபியா.

அவர் குறிப்பிட்ட மற்றொரு விவரம் அதிர்ச்சி தருவதாக அமைந்திருந்தது :

''இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் பார்வைக் குறைவுக்காகக் கண்ணாடி அணிவதற்கென வந்த குழந்தைகளின் எண்ணிக்கையைக் காட்டிலும் தற்போது வரும் குழந்தைகளின் எண்ணிக்கை மிக மிக அதிகமாகியுள்ளது. குழந்தைகளுக்கான கண்ணாடி ஃப்ரேம்கள் முன்பெல்லாம் ரொம்பக் குறைவாகவே இருக்கும். இப்போது குழந்தைகளுக்கு மட்டுமே ஐம்பது வித ஃபிரேம்கள் வைத்திருக்கிறோம்! ஐந்து, ஆறு மாதக் குழந்தைகளுக்குக் கூட ஃப்ரேம்கள் உள்ளன.''

''இதற்கு என்ன காரணம் என்று கருதுகிறீர்கள்?''

''குழந்தைகளின் ஆரோக்கியத்தில் - சத்துணவு முதலானவற்றில் - போதிய கவனம் செலுத்தப்படவில்லை என்பது ஒன்று. மற்றொன்று குழந்தைகளும் மூக்குக் கண்ணாடி அணியலாம் என்பது இன்று ஏற்கப்பட்டிருக்கிறது என்பது. சில காலம் முன்பு இந்த அறிவு கூட இல்லாதிருந்தது. 'பெரிய மனுஷ தோரணை' என்று கருதப் பட்டது!''

**க**ண் மருத்துவர் டாக்டர் ரவீந்திரனைச் சந்தித்துக் கேட்ட போது,

''கறுப்புக் கண்ணாடிகள் அணிவது நல்லதுதான். அது சூரியனின் புற ஊதாக் கதிர்களை வடிகட்டி விடுவதால் கண்களுக்கு நன்மை. நாளடைவில் காடராக்ட் வளரக்கூடிய சாத்தியக் கூறு குறைக்கப்படுகிறது. ஆனால்... சோதித்துப் பார்த்து நல்ல, தரமான கண்ணாடிகளையே வாங்கி அணிய வேண்டும்'' என்றார்.

''மற்றபடி கண்களின் பாதுகாப்புக் கெனத் தனியாக ஏதும் செய்யத் தேவையில்லை'' என்றார் டாக்டர் ரவீந்திரன். ''கண்களின் அமைப்பே உள்ளடங்கி, இரப்பைகளால் மூடப்பட்டு இருக்கிறது. முகத்தில் அடிபட்டால் புருவ மேட்டிலுள்ள எலும்புகள்தான் முதலில் வாங்கிக் கொள்ளும் - கண்கள் அனேகமாகக் காப்பாற்றப்படும். அன்றாட வழக்கமாக 'மஸாஜ்' போன்றவையெல்லாம் கண்களுக்கு அவசியமேயில்லை... ஆனால் சமீப

காலமாக கம்ப்யூட்டர்களுடன் நீண்ட நேரம் வேலை செய்வது, தொடர்ந்து டீ.வி. பார்ப்பது போன்ற பழக்கங்களால் கண்களுக்குப் பாதிப்பு ஏற்படுவது அதிகரித்து வருகிறது. இந்த இரு காரியங்களையுமே போதுமான இடைவெளி விட்டு விட்டுச் செய்தால் பிரச்னை இராது...'' என உபயோகமான டிப்ஸ் கொடுத்தார்.

''நவீன மேக் அப் சாதனங்கள் கொண்டு கண்களை அழகுபடுத்தும் முயற்சிகளால் ஏதேனும் அபாயம் உண்டா...?''

''மஸ்காரா, ஐ ஷாடோ போன்ற மேக் அப் சாதனங்கள் கண்களையொட்டி அவற்றுக்கு வெளியேதான் அணியப்படுகின்றன. எனவே இவற்றால் சருமத்தில் ஒவ்வாமை ஏற்படக்கூடுமேயொழிய கண்கள் பாதிக்கப்பட மாட்டா. கண் மை கூட தீமையானது எனக் கூற முடியாது. ஒருவர் உபயோகித்த மையை மற்றவர் உபயோகிப்பதுதான் நோய்த் தொற்றுக்கு வகை செய்யும். (குறிப்பாக சினிமா, நாடகங்களுக்காக மேக் அப் அணிபவர்கள் தங்கள் சொந்த மேக் அப் கிட்டை வைத்துக் கொள்வது நல்லது)''

''வீட்டு வைத்தியமாகக் கண்களுக்கு விளக்கெண்ணெய், கோழி ரத்தம், தாய்ப் பால் போன்றவற்றை விடுகிறார்களே....''

''இவை மிக மிகத் தவறான காரியங்கள். இவற்றின் தூய்மைக் கேட்டால் ஏற்கெனவே உள்ள கண் நோய் அதிகமாகத்தான் செய்யும். கண்ணில் எரிச்சலோ உறுத்தலோ ஏற்பட்டால் சுத்தமான, காய்ச்சி ஆறிய தண்ணீரைக் கொண்டு கழுவுங்கள். அதிலும் கைகளை நன்கு கழுவி விட்டு, பிறகு கண்களைக் கழுவுங்கள்....''

''இப்போதெல்லாம் அலுவலகங்களில் செயற்கை வெளிச்சத்திலேயே வேலை செய்ய வேண்டியிருக்கிறதே டாக்டர்...? இதனால் கேடுகள் விளையுமா? பல வீடுகளிலும் - குறிப்பாக ஃப்ளாட்டுகளில் - முறையான கட்டட அமைப்பு இல்லாததால் இயற்கை வெளிச்சம் குறைவாகவோ அதிகமாகவோ இருக்கிறது. சில இடங்களில் மிக அருகே உள்ள பெரிய கான்க்ரீட் கட்டடங்களிலிருந்து எதிரொளி வருவதால் கண்கள் கூசுகின்றன...''

''மிக அதிக வெளிச்சமோ குறைவான வெளிச்சமோ கண்களைப் பாதிக்கும் என்பதில் சந்தேகமில்லை. கூடிய வரையில் இயற்கை வெளிச்சத்திலேயே பணியாற்ற முயல வேண்டும். திரைச் சீலைகளால் சதா காலமும் இருட்டடிப்புச் செய்வது அவசியமில்லை. பக்கத்துக் கட்டடங்களிலிருந்து 'glare' வரும் சமயத்தில் மட்டும் ஜன்னல் அல்லது திரைகளை மூடி, பின்னர் திறந்து விடுங்கள். அலுவலகங்களில் குழல் விளக்குகள் வெளிச்சத்தில் வேலை செய்வது நல்லது. மேஜை விளக்கொளியில் (table lamp) சிறிது நேரமே வேலை செய்யலாம்...''

கண்கள் நேரடியாக ''மெட்ராஸ் ஐ'' போன்றவற்றால் பாதிக்கப்படுவது தவிர, உடலில் உள்ள வேறு கோளாறுகளாலும் (சொத்தைப் பல், நீரிழிவு போன்றவை) பாதிப்புக்குள்ளாகும் என்று தெரிவித்த டாக்டர் ரவீந்திரன், ''கண்களை நோய், பார்வைக் குறைவு இல்லாவிட்டாலும் இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறையேனும் பரிசோதித்துக் கொள்வது நல்லது'' என்றார். இதன் முக்கியத்துவத்தை அறியாததால் நிகழ்ந்த ஒரு சம்பவம் :

சோலை (பெயர் கற்பனை) கிராமத்துப் பெண். நகரத்து இளைஞனை மணந்தாள். ஒரு குழந்தையும் பிறந்தது. எனினும் சோலை சுருங்கிய நத்தையாகவே வாழ்ந்தாள். வெளியே செல்வதில்லை; வீட்டுக்கு வந்தவர்களுடனும் முகங்கொடுத்துப் பேசவில்லை. கணவன் ஏதாவது கேட்டால் சிடுசிடுப்பு. குழந்தையிடம் கோபம். ஏகப்பட்ட தாழ்வு மனப்பான்மை...

மனைவி ஒரு புதிராகி விட, கணவன் யதேச்சையாகச் சந்தித்த மருத்துவ நண்பரிடம் பிரச்னையைக் கூறினான். அவர் விருந்தினராக வீட்டுக்கு வந்து சோலையின் நடவடிக்கைகளைக் கவனித்து விட்டு, கண் பரிசோதனையைச் சிபாரிசு செய்தார்.

பரிசோதித்ததில் சோலைக்கு அதீதமான கிட்டப் பார்வை இருப்பது தெரிய வந்தது. அதை அவள் உணரவேயில்லை; தன் குறைக்கு நிவாரணம் தேடவுமில்லை. மாறாக, தனக்கு புத்தி மட்டு என்ற தாழ்வு மனப்பான்மையுடன் வாடியிருக்கிறாள்.

கண்ணாடி அணிந்த பிறகு அவள் வாழ்க்கையே மாறி, மலர ஆரம்பித்தது. அவள் கணவனின் வாழ்க்கையும்தான்!

**- பானுமதி ராமச்சந்திரன், சீதா ரவி.**

அட்டையில் :
'ரே பான்' அணிந்து சங்கீதா
வண்ணப்படம் : யோகா
புகைப்படங்கள் : பாலாஜி

## அடுத்த இதழில் :

◆◆ **நீடித்து நிலைக்குமா படிக்கும் பழக்கம்...?**
- அலசல் கட்டுரை





# வெள்ளை மாளிகையில் குடியேறும் புதியவர்

க்ளின்டனின் குழந்தைப் பருவத்திலும், இளமைப் பருவத்திலும் நிகழ்ந்த மனத்தை நெருடும் துயரச் சம்பவங்கள் ஏராளம்.

ஹோப் நகரில், 1946 ஆகஸ்ட் 19 ஆம் தேதி, பில் பிறப்பதற்கு முன்னாலேயே, அப்பா வில்லியம் ஜெஃபர்சன் கோரமான கார் விபத்தில் பலியானார். நாலு வயதாகும் போது அம்மா விர்ஜீனியா, ரோஜர் க்ளின்டனை மணந்தார். அப்போதே பில்லை ரோஜர் சட்டப்படி தத்து எடுத்துக் கொண்டார். ஆனால் வீட்டில் அம்மாவுக்கும் வளர்ப்புத் தந்தைக்கும் அடிக்கடி சண்டை சச்சரவுதான். ரோஜர் சரியான குடிகாரர். ஒரு தடவை தம்பதியிடையே சண்டை முற்றிப் போக, கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தார் பில். (அப்போது அவருக்கு வயது பதினாலு.) ''அப்பா, உங்களால் எழுந்து நிற்க முடியவில்லை என்றால் நான் பிடித்துக் கொள்ளுகிறேன். ஆனால் நான் உங்களிடம் பேசியே ஆக வேண்டும்!'' என்று சத்தம் போட்டார். ''அப்படி அப்பாவை அதட்ட மனசுக்குக் கஷ்டமாகத்தான் இருந்தது. ஆனால் அதற்கப்புறம்தான் அப்பாவின் மிரட்டல் குறைந்தது!'' என்கிறார் பில்.

''கைத் துப்பாக்கியால் கட்டுக் குழப்பம் விளைவித்ததற்காக, போலீஸ் வந்ததும், அப்பாவைக் கைது செய்து கொண்டு போனதும் எனக்கு நேற்றைக்குத்தான் நடந்தது போல நினைவு இருக்கிறது!'' என்று சொல்லியிருக்கிறார் பில், ஒரு பேட்டியில். அப்போது அவருக்கு வயது ஆறுதான்.

இப்படி இளமைக்கால வாழ்க்கை, கரடு முரடாகத்தான் இருந்திருக்கிறது பில் கிளின்டனுக்கு. அவருக்கு 21 வயது ஆகும் போதுதான் வளர்ப்புத் தந்தை இறந்து போனார்.

ஆனால் இத்தனை வடுக்களும், தழும்புகளும் பில் க்ளின்டனின் பொது வாழ்க்கையில் வெளியே தெரியாமலே இருந்து வந்தது. ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிட அவர் தீர்மானித்த பிறகுதான் ஒவ்வொன்றாகக் கடந்த கால நிகழ்ச்சிகள் துருவி ஆராய்ந்து வெளியிடப்பட்டன.

பதினாறாவது வயதிலேயே 'அரசியல் வாழ்க்கைதான் நமக்கு' என்று தீர்மானித்துக் கொண்டவர் பில். அதுவும் அன்றைய இளம் ஹீரோ கென்னடி ஓர் ஆதர்ச புருஷராக இருந்திருக்கிறார் இவர் பார்வையில். உலக நாடுகள் விவகாரங்களில், ஜியார்ஜ் டவுன் பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்றதும், ஆக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தில் இரண்டு வருடங்கள் 'ரோட்ஸ்' மாணவராக இருந்த பிறகு, யேல் பல்கலைக் கழகத்தில் சட்டத் துறையில் பட்டம் பெற்றார். ஆர்கன்சாஸ் மாநில அட்டர்னி ஜெனரலாகவும், அதற்கு முன் சட்டக் கல்லூரிப் பேராசிரியராகவும் இருந்திருக்கிறார். (தற்போது ஆர்கன்சாஸ் மாநில ஆளுநராக இருந்துதான் அதிபர் தேர்தலில் போட்டியிட்டார்.)

மாநில அட்டர்னி ஜெனரலாக இருந்த போது 'கன்ஸ்யூமர் அட்வகேட்' என்ற சிறப்புப் பெயரைச் சம்பாதித்துக் கொண்டவர் பில். காரணம், சுற்றுச் சூழல் பாதுகாப்பு விஷயங்களிலும், மின்சார, டெலிபோன் கட்டணங்களைக் குறைப்பதிலும் இவர் முன் நின்றவர். ஆனால் நுகர்வோர் இயக்கங்கள், உணவுப் பண்டங்கள் மீதும், மருந்துகள் மீதும் விதிக்கப்படும் விற்பனை வரியை நீக்க வேண்டும் என்று கோரிய போது, அவற்றை க்ளின்டன் ஏற்கவில்லை.

ஆசிரியர்களுக்கான சம்பளம் மட்டுமல்ல, அவர்கள் வழங்கும் கல்வித் தரமும் உயர்வதற்குக் காரணமாயிருந்தவர் பில். மத்தியதர மக்கள் மீது அதிக வரியைச் சுமத்த மாட்டார் என்று சொல்லுகிறார்கள். ''பணக்காரர் மீதே அதிக வரிகள் போடுவேன்!'' என்று கூறி வருகிறார் பில்.

பெண்கள், தொழிலாளர்கள், வேலை கிடைக்காமல் திண்டாடுவோர் மத்தியில் பில் க்ளின்டனுக்கு அதிகச் செல்வாக்கு இருக்கிறது.

நாற்பத்தைந்து வயதைத் தாண்டியும் கூட, இளமைத் துடிப்புடன் கூடிய முகத்தின் வசீகரம் இவருக்கு உதவுகிறது. இதமாகப் பேசுபவர் பில். மனைவி ஹிலாரி க்ளின்டனும் ஒரு வழக்கறிஞர்.

பில் க்ளின்டன் சாக்ஸஃபோன் வாசிப்பதில் வல்லவர். ஜாஸ் இசை இவருக்குப் பிடித்தமானது. கால்ஃப், நீச்சல், புத்தகங்கள் இவரது பொழுதுபோக்கு.

- எஸ். வி. என்.

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர் : கி. ராஜேந்திரன். இணை ஆசிரியர் : சீதா ரவி.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் : ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் : ரூ. 525/-.

### தெரிந்து கொள்ளுங்கள்

# உங்கள் குழந்தையின் மேனிபற்றி

**மலர்** என்பார் இறகு என்பார் மழலைச் செல்வத்தை. அதன் மேனி மலரினும் மென்மை. இறகிலும் மிருது. ஆகவேதான் அதற்குத் தேவை உங்கள் சிறப்பான கவனிப்பு.

மென்மையான ஆடைகள், இதமான ஸ்பரிசம். அத்துடன் சிறப்பான சோப்பு – ஜான்ஸன்ஸ் பேபி சோப்.

ஆரம்பத்தில் சில வாரங்களுக்கு குழந்தையின் சருமத்தில் சில மாற்றங்கள் ஏற்படும். அதைப்பற்றி கவலைப்பட வேண்டாம். அது இயல்பான மாற்றம் ஆகும். சிறிது சிறிதாக மறைந்துவிடும்.

**சருமத்தில் பூனை முடி:** ஆரம்பத்தில் குழந்தையின் உடல் முழுதும் பூனை முடி போன்ற உரோமம் இருக்கும். அது இரண்டு வாரங்களுக்குள் தானாக உதிர்ந்துவிடும்.

**சினைப்பு மற்றும் கரப்பான்கள்:** இவை குழந்தையின் உடல் அமைப்பு (சிஸ்டம்) முழுதும் செயல்படத் துவங்காததால், அவை சிலநாட்களில் பொதுவாக மறைந்துவிடும்.

**பிறப்புப் புள்ளிகள்:** பிறக்கும்போது குழந்தையின் மேனியில் நீல சிவப்பு அல்லது பழுப்பு நிறத்தில் சில புள்ளிக்குறிகள் ஏற்படுகின்றன. சில மாதங்களில் அவை மறைந்துவிடுகின்றன. குழந்தை வளரும்போது சில புள்ளிகள் காணப்படலாம்.

**தலையின் கவர்:** இளஞ்சிவப்பு நிறத்தில் குழந்தையின் தலை உச்சியில் காணப்படும் பத்தை போன்ற கரப்பான் ஆகும். அது சில சமயங்களில், குழந்தையின் முகம் உடல் அல்லது அரைப் பகுதியிலும் பரவும். அது மறைந்துவிடும். அதற்கு பேபி ஆயில் போட்டு இதமாக்கவும்.

**இளஞ்சிவப்பு சினைப்பு:** முகம் அல்லது சதை மடிப்பு போன்ற வியர்வை தங்கும் பகுதியில் இளஞ்சிவப்பு சினைப்புகள் ஏற்படும். இது அதிக உஷ்ணத்தால் ஏற்படுகிறது. குழந்தையை வெதுவெதுப்பான நீரில் குளிப்பாட்டவும். மென்மையான சோப்பு உபயோகிக்கவும். பின்பு மெல்லிய பருத்தி ஆடைகளை அணிவிக்கவும்.

**ஜான்ஸன்ஸ் பேபி சோப்:** குழந்தையின் மேனிக்கான சிறப்பான படைப்பு. தூய்மையான பொருட்களால் மட்டுமே தயாரிக்கப்பட்டது ஜான்ஸன்ஸ் பேபி சோப்— இதில் மென்மையான குழந்தை மணம் கலந்துள்ளது. ஜான்ஸன்ஸ் பேபி சோப்— ஜான்ஸன்ஸ் பேபி ஆயில் மற்றும் லனோலின் செறிந்துள்ளது. இவை குழந்தையின் சருமத்தில் ஈரப்பதம் உண்டாக்கி, மென்மையோடு வைத்துக் கொள்கிறது. இதில் சருமத்தில் அலர்ஜி மற்றும் புள்ளிகளை உண்டாக்கும் கடுமையான இரசாயனம் மற்றும் எரிச்சலான பொருட்கள் இல்லை. அதன் இதமான மென்மையான செயல், இயற்கை எண்ணெய்களை நீக்காமலே, சருமத்தை சுத்தமாக்குகிறது. உங்கள் குழந்தையின் மேனி பனித்துளி போல் மிளிரும், ஒளிரும்.

**உங்கள் குழந்தைக்கு வேறு எந்த சோப்பையும் நம்புவீர்களா?**






**காரணம், குழந்தையின் மேனிக்கு விசேஷ கவனம் தேவைப்படுகிறது.**

"பேபி கேர்" என்ற இலவசப் பிரசுரம் பெற்றிட எழுதுங்கள்:
பேபி கேர் அட்வைசர், ஜான்ஸன் அண்ட் ஜான்ஸன்,
30, ஃபோர்ஜெட் ஸ்ட்ரீட், பம்பாய்-400 036.
உங்கள் குழந்தையின் பெயர் மற்றும் பிறந்த தேதியையும் குறிப்பிடவும்.

**ஜான்ஸன் & ஜான்ஸன்**

Ogilvy&Mather

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka

திடீரென்று உங்களை உடம்புவலி தாக்கினால்... குடும்பப் பொறுப்பு,
சிரித்துப் பேசி மகிழ்வது, வேலை, எதுவுமே பாரமாகத் தோன்றும்.

# உடம்பு வலியைப் போக்குங்கள்
# ஜண்டு பாம் தடவுங்கள்.

விரைவில் துடிப்புடன் விளங்குங்கள்.



உடம்புவலி தனியாக வருவதில்லை. கூடவே வேறு சில உபாதைகளையும் அழைத்து வரும் – நடையிலே தளர்ச்சி, நிற்பதிலும் உட்காருவதிலும் சிரமம், போன்றவை. இதில் கவலைப்பட ஏதுமில்லை.

வலியை நீக்கும் ஜண்டு பாமிலே ஆழமாக ஊடுருவி செயல்புரியும் விசேஷ மருந்துப் பொருட்கள் உள்ளன. இவை உடம்புவலி மற்றும் இதர உபாதைகளையும் இழுத்து வெளியேற்றி, உங்களுக்கு உடனடி நிவாரணம் அளிக்கின்றன.

வலியை நீக்கும் ஜண்டு பாமை எப்போதும் கைவசம் வைத்திருங்கள்.
இது ஜலதோஷம் மற்றும் தலைவலி போன்ற
உபாதைகளிலிருந்தும் விரைவில் நிவாரணமளிக்கிறது.

ஜண்டு பாம் ஜண்டு பாம் வலியை நீக்கும் பாம்
ஜலதோஷம் தலைவலி நோவுகளையும்
நொடியில் நீக்கிடுமே

30, 10 மற்றும் 5 கிராம் பேக்கிலே




பாம் ஒன்று
செயல்
மூன்று

1. ஜலதோஷம்
2. தலைவலி
3. உடம்பு வலி

AD PALACE/ZPW/144-92TAM